www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ் 55 | செப். 15 - செப்.28 | விலை 7.00

## ஜனாதிபதித் தேர்தல்:

# தொண்டாவுக்கு வாய்த்த துடுப்பு!

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க தோல்வியைத் தழுவியதால் எதிர்க்கட்சிக்குத் தள்ளப்பட்டும், புதிய அரசாங்கத்தில் தமது பரம வைரியான சந்திரசேகரன் பிரதியமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டுள்ளதால் சரிந்துமுள்ள தனது அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்த, இ.தொ.கா தலைவருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

எதிர்வரும் நவம்பர் 20ம் திகதிக்கு முன் அரசியலமைப்புச் சட்டப்படி புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டது அறிவிக்கப்பட வேண்டி உள்ளதால் பொ.ஜ.முவும் ஐ.தே.கவும் ஜனாதிபதி தேர்தலுக்கான முயற்சிகளில் தீவிரமாகஇறங்கியுள்ளன. ஐ.தே.க தனது வேட்பாளராக காமினியை அறிவித்துள்ள அதேவேளை, பொ.ஜ.மு தனது வேட்பாளரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கா விட்டாலும் பிரச்சாரக் கூட்டங்களை ஆரம்பித்து விட்டது.

ஜனாதிபதி தேர்தல பாராளுமன்றத் தேர்தல் போலன்றி, சிறுபான்மை இன மக்களின் வாக்குகளிலேயே தங்கியிருப்பதால், எதிர்க்கட்சியிலிருந்தாலும், மலையகத் தொழிலாளர்களின் நாலு லட்சம் வாக்குகளால் தமது மவுசைக் காத்து விடலாம் என்று நம்புகிறார் தொண்டமான்.

பொ.ஜ.முவிற்கு தான் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக கூறியுள்ள தொண்டமான் அதேவேளை ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளரான காமினிக்கும் நம்பிக்கை ஊட்டுபவராக உள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில், தமது கட்சி யாருக்கு வாக்களிக்கும் என்பதை நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே அறிவிக்கப் போவதாக அறிவித்துள்ள தொண்டமான், ஐ.தே.கவை விட்டு இலேசில் போய்விட மாட்டார் என்று காமினி அறிவித்துள்ளார்.

எப்போதும் ஆளும் கட்சியின் பக்கம் இருப்பதே தமது ஊழல் அரசியலுக்கு வாய்ப்பானது என்று கருதும் தொண்டமானை எப்படிக் கையாள்வது என்பது புதிய அரசாங்கத்திற்கு ஒரு தலையிடியாக இருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒருபுறத்தில் தொண்டமானை இழப்பதால் நாலு லட்சம் வாக்குகள் போய் விடுமோ என்ற பயமும் மறுபுறம் தொண்டமானை சேர்த்துக் கொள்வது அரசாங்கம் தன்னை வெளிப்படுத்தி வரும் ஊழல், அதிகார துஷ்பிரயோக மற்ற தூய்மை வாதத் தன்மையைக் கெடுத்து விடுமோ என்ற பயமுமாக இது பொ.ஜ.முவுக்கு ஒரு தலையிடியாக உள்ளது.

அதேவேளை, தான் ஐ.தே.கவுக்கு வாக்களிக்குமாறு கோரினாலும் கூட மலையக மக்கள் ஒருவேளை பொ.ஜ.முவுக்கு வாக்களித்து விடுவார்களோ என்ற அச்சமும், தனது கடந்தகால அரசியல் ஊழல்கள் எதிர்க்கட்சியில் இருப்பதால் அம்பலத்திற்கு வர வாய்ப்புண்டு என்ற அச்சமும் அரசாங்கத்துடன் இணைந்துள்ள மலையக மக்கள் முன்னணி ஒரு பலமிக்க சக்தியாக வளர்ந்து விடும் என்ற அச்சமும் தொண்டமான் பொ.ஜ.முவை ஆதரிக்க விரும்புவதற்கான காரணம் என்றும் பேசப்படுகின்றது.

ஏற்கனவே பாராளுமன்ற தேர்தலில் பொ.ஜ.முவை ஆதரிக்க வேண்டுமென்றே இ.தொ.கா. கட்சிக்குள் பலரும் விரும்பியதாகவும் தொண்டாவின் தனிப்பட்ட விருப்பினாலேயே ஐ.தே.கவை ஆதரிக்கும் முடிவு எடுக்கப்பட்டதாகவும் இ.தொ.கா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன!

எப்படியோ ஜனாதிபதி தேர்தல் தொண்டமானுக்கு கிடைத்த ஒரு துடுப்புத்தான் என்பதில் ஐயமில்லை.

## ரஷ்ய ஆயுதங்கள்: வாங்கியவர் டி.பீ.யே!

ரஷ்யாவிலிருந்து யுத்தத் தாங்கிகளைப் (War Tanks) பாராளுமன்றத்தினதோ அன்றி நிதி அமைச்சினதோ அனுமதியின்றிக் கொண்டுவரச் செய்யப்பட்டுப் பின்னர் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவினால் தடை செய்யப்பட்ட 365 கோடி ஆயுதக் கொடுக்கல் வாங்கலுக்கான அனுமதியை டி.பீ.விஜேதுங்கவே வழங்கியுள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் விலைகொடுத்து வாங்கும் வாகனங்களின் முதற்கட்டப் பொருட்கள் இரண்டு தற்போது நாட்டை அண்மித்துக் கொண்டிருக்கும் அதேவேளை அவை உரிய தேவைகளுக்கு உகந்தது அல்ல எனவும் அனேகமானவை குறைபாடுகளுடன் கூடியவை எனவும் இராணுவத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தற்போதைய யுத்தத்திற்கு இக் கனரக வாகனங்கள் உகந்தவை அல்ல எனவும் அவற்றினால் பயன் எதுவும் ஏற்படாது என்பதும் இராணுவ வல்லுனர்களின் கருத்தாகும்.

## தமிழ் ரெஜிமெண்ட்டைச் சேர்ந்தவர் படுகொலை

பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடிந்து ஒரு வாரம் முடிய அரசபடைகள் + புளொட்டின் முழுக் கண்காணிப்பின் கீழ் இருக்கும் வவுனியா நகருக்குள் யூ.என்.பி அரசினால் உருவாக்கப்பட்ட தமிழ் ரெஜிமென்டை சேர்ந்த இந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஒரு குழந்தைக்கு தந்தையான இவர் முன்னர் ரெலோவில் இருந்தவர். பின்னர் தமிழ் ரெஜிமென்டில் சேர்ந்து வவுனியாவில் இராணுவத்துடன் இணைந்து செயல்பட்டவர். இவர் சுட்டுக் கொல்லப்படுவதற்கு சற்று நேரத்துக்கு முன்னரும் இராணுவத்தினருடன் செக் பொயின்றில் நின்றுவிட்டு சைக்களில் வரும் போதே சுட்டுக் கொல்லப்பட்டார்.

புளொட் அலுவலகத்துக்குச் சற்று தொலைவிலேயே முன்னால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இந்திரனை பின்தொடர்ந்து இருவர் சைக்கிளில் சென்றே முதுகிலும் தலையிலும் பின் பக்கமாக ஐந்தாறு வெடிகளை தீர்த்திருக்கிறார்கள். 9 எம்.எம் பிஸ்ரலாலேயே இவர் சுடப்பட்டுள்ளார். இந்திரனின் கொலையுடன் தமிழ் ரெஜிமென்டை சேர்ந்த அஸீஸ், வண்ணன் உட்பட நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். நால்வரும் இரவு வேளைகளில் ரகசியமான முறையில் அரசபடையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் 9 எம்.எம் பிஸ்ரலாலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரியவருகிறது.

இந்திரனின் கொலையைப் பற்றியோ அல்லது அதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஏனைய தமிழ் ரெஜிமெண்ட் உறுப்பினர்கள் பற்றியோ அரசோ அல்லது அவர்கள் இரவும் பகலும் துணைநின்ற ராணுவமோ ஏதும் பெரிதாக அலட்டிக் கொண்டமாதிரித் தெரியவில்லை. ஆனால் இக்கொலைகளின் சூத்திரதாரிகள் யாரென்று அவர்களுக்கு தெரியாமலுமில்லை?

இந்திரனின் மரணவீட்டிற்குக் கூட இந்திரனின் மனைவி, குழந்தை இன்னும் நாலைந்து பேரைத்தவிர வேறு யாரும் செல்லவில்லை. இந்திரனின் கொலையுடன் எஞ்சியிருந்த ஒரு சில தமிழ் ரெஜிமெண்ட் உறுப்பினர்களும் ராணுவத்தில் நம்பிக்கையிழந்து வவுனியாவை விட்டு வேறு இடங்களுக்கு ஓடியுள்ளதாக அறிய முடிகிறது. ஆனால் இக்கொலைகளின் சூத்திரதாரிகள் இராணுவமல்ல என்பதும் இவர்களுக்கும் தெரியும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால்; இயக்கங்களை விட்டு கொழும்பில் சிதறுண்டு நின்ற தமிழ் இளைஞர்கள் பலரை திரட்டி இலங்கை இராணுவத்தின் ஒரு அங்கமாக தமிழ் ரெஜிமெண்ட் என்று ஒன்று உருவாக்கப்பட்டது.

கேணல், முத்தலிப் இத் தமிழ் ரெஜிமெண்ட்க்கு பொறுப்பாக இருந்தவர். செட்டிகுளத்திலுள்ள இராணுவ முகாமொன்றிலேயே இவர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது. செட்டிக்குளத்திலேயே இந்த ரெஜிமெண்டின் நிரந்தரத்தளம் உள்ளது. இதிலுள்ளவர்களுக்கு ஏனைய ராணுவ வீரர்களுக்குரியதைப் போலவே சகல கொடுப்பனவுகளும் உள்ளது.

ஆனால் இத் தமிழ் ரெஜிமென்ட் உருவாக்கப்பட்டதன் முக்கிய

—> 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைவே இன்றைய தேவை !

**ச.பாலகிருஷ்ணன்**

**புதிய அரசாங்கம் ஆட்சிபீட மேறியவுடன் கடந்த நான்கு வருடங்களாக அமுலிலிருந்த பொருளாதாரத் தடையின் ஒரு பகுதியை நீக்கி இருக்கிறது. நாடு முழுவதும் அமுலிலிருந்த அவசரகாலச் சட்டத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் அதன் எல்லைப் பிரதேசங்களுக்கும் என மட்டுப்படுத்தியிருக்கிறது.**

**இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக புலிகளுடன் பேசுவதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தவிர மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை உத்தரவாதப்படுத்தப் போவதாகவும், தொடர்பு சாதனங்கள் கட்டுப்பாடின்றி இயங்க அனுமதிக்கப் போவதாகவும் கூறுகிறது. இவ்வாறான புதிய சூழலில் ஜனநாயக சக்திகளது கடமை என்ன என்பது தொடர்பாக பல்வேறு அபிப்பிராயங்கள், வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. இங்கே ச.பாலகிருஷ்ணன் அவர்கள் தனது அபிப்பிராயங்களை எழுதுகிறார். வாசகர்களும் எழுதலாம்.**

**ஆ-ர்**

**சென்ற இதழில் ஐ.தே.கவின் தோல்விக்கான காரணங்கள் பற்றிப் பார்த்தோம். இப்போது நடைபெற்று முடிந்த தேர்தலின் பிற பகுதிகளின் தேர்தல்கள் பற்றியும், பார்ப்போமானால் இன்று நம்முன்னுள்ள கடமைகள் என்ன என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.**

## யாழ்மாவட்ட தேர்தல்:

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் நிலப்பரப்பில் 90% விகிதத்திற்கு மேற்பட்ட பகுதிகள் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக அமைந்துள்ளது. யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரால் மீட்கப்பட்ட பகுதிகள் எனக் கருதப்படுகின்ற பகுதிகளில் ஆறாயிரத்துக்கும் குறைவான வாக்காளர்களே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய 10 உறுப்பினர்களையும் இந்த ஆறாயிரம் பெயரைக் கொண்டு தெரிவு செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முடிவானது தேர்தல் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் செயலாகும். யாழ்ப்பாண மாவட்டத்தின் 1986ம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 6 இலட்சம் என கணிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட தேர்தலை நடத்தாது விடும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் நிலைமையானது ஜனநாயகத்திற்கும் அரசியல் யாப்பிற்குமிடையேயான ஒரு முரண்பாட்டை தோற்றுவிப்பதனால் யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்துவது சம்பந்தமான கோரிக்கையை 5 நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து அவ்வுயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் செயற்படுமாறு மனிதவுரிமை அமைப்புகள் ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டது. ஐ.தே. கட்சியின் கூலிப்பட்டாளமாக செயற்படுகின்ற ஈ.பி.டி.பி அமைப்பைச் சார்ந்த ஆயுதபாணிகளின் கட்டுப்பாட்டுக்குள் இப்பிரதேசம் இருக்கின்றது. எனவே இவர்களை அபேட்சகர்களாக நியமித்து இவர்களினால் பெறப்படுகின்ற பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டு தென்னிலங்கையில் ஏற்படக் கூடிய தோல்விகளை தவிர்த்துக் கொள்வதற்கு ஐ.தே.கட்சி முயற்சி செய்தது. புத்தளம் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லீம் அகதிகளில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்ட யாழ் மாவட்ட முஸ்லீம் வாக்காளர்களில் பெரும்பான்மையினரை வாக்களிக்க விடாது தடுத்து நிறுத்திய வாக்குச்சாவடி அதிகாரிகளின் செயலானது மேற்கூறிய ஐ.தே.கட்சியின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்கின்ற செயலாகவே அமைகின்றது.

இத்தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட்ட ஈ.பி.டி.பியினர் 9 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் பெற்றுக் கொண்டது. 1981ம் ஆண்டு யாழ் மாவட்ட சபைகளுக்கான தேர்தலை சீர்குலைத்து வடபகுதியில் நியாயமற்ற தேர்தலை நடத்துவதற்கு காமினி திசாநாயக்காவின் மூலம் முயற்சி செய்த ஐ.தே.கட்சியின் தேர்தல் சீர்குலைப்பு நடவடிக்கையின் சின்னமாகவே இத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை கணக்கெடுக்கப்படல் வேண்டும்.

## வன்னி மாவட்ட தேர்தல்

வன்னி மாவட்டத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பபாட்டிற்குள் இருக்கும் சூழ்நிலையிலேயே அம்மாவட்டத்திலும் தேர்தல் நடத்தப்பட்டது. இராணுவத்தினால் மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர் இராணுவத்தினருடன் சேர்ந்து நிலைகொண்டுள்ளனர். தமிமீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆரம்ப காலம் மூதல் வன்னிப் பிரதேச தமிழ் மக்கள் மத்தியில் தமது அமைப்பை நிலைநிறுத்தி வந்திருந்தாலும் அவ்வமைப்பின் அரசியல் கட்சியாக விளங்கும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி இத்தேர்தலின் போது பல்வேறு பலாத்கார நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. தேர்தல் அவதானிகளின் கருத்துப்படியும் இப்பிரதேசங்களில் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும் பார்க்கும் பொழுது வன்னி மாவட்டத்திலும் சுதந்திரமான தேர்தல் நடைபெற்றது என்பதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது.

இத்தேர்தலில் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களித்த இடங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பெரும்பான்மையான ஆதரவு கிடைத்திருக்கின்றது. இப்பிரதேசங்களில் போட்டியிட்ட முன்னைநாள் தீவிரவாத அமைப்புக்கள் படுதோல்வி அடைந்திருக்கின்றன. இந்நிலைமையானது தமிழ் மக்கள் மிதவாத அரசியலில் தங்களது நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்ட முன்வருகின்றமையையே காணக் கூடியதாக இருக்கின்றது. எனவே வடக்குக்கிழக்குத் தமிழ் மக்களின் அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றமானது தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய புதிய கண்ணோட்டத்தையும் புதிய அணுகு முறையையும் வலியுறுத்துவதாக அமைகின்றது.

# அரசு — புலிகள் சமாதான நடவடிக்கைகள்: வரலாற்றுத் தவறுகள் திருத்தப்படுமா?

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் சகல தரப்பிலும் மாற்றங்களைத் தொடக்கிவிட்டுள்ளது. 17 வருட ஐ. தே. கட்சியின் ஆட்சியில் மக்கள் எதிர்பார்த்தும் காணாத செயற்பாடுகள் சந்திரிகா தலைமையிலான புதிய ஆட்சியில் இடம்பெறுவது மக்களுக்கு ஆறுதலை அளித்து வருகிறது. நீண்ட காலமாக இழுபறிப்பட்டுக் கொண்டிருந்த வடக்குக் கிழக்குத் தொடர்பான பிரச்சினை பற்றிய அரசின் கரிசனை முன்னைய ஆட்சியாளர் செய்ய முயலாத யுத்த நிறுத்தம் என்பன அனைத்து மக்கள் தரப்பினரையும் ஆசுவாசப்படுத்தியுள்ளது.

நீண்ட கால யுத்தம் ஏற்படுத்திய பாதக விளைவுகளை ஓரளவாவது இனங்கண்டுள்ள புதிய அரசு புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. அதற்குப் புலிகளும் சமாதான சமிக்ஞைகளை காண்பித்துள்ளனர். இதன் ஆரம்ப நடவடிக்கைகளாக பொருளாதாரத் தடை நீக்கம், பயணப்பாதை திறப்பு, அவசர காலச் சட்ட நீக்கம் (வடக்குக் கிழக்குத் தவிர்ந்த இடங்களில்) போன்றன அரச தரப்பிலிருந்தும், கைதான பொலிசாரை விடுவித்தல் சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட இணக்கம் போன்ற செயற்பாடுகள் புலிகள் தரப்பிலிருந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலைப்பாடுகள் சில பெரிய அரசியல் மட்டங்களில் சலசலப்பை ஏற்படுத்தினாலும் அதிகமான மக்களுக்கு நம்பிக்கைக்கு இடமிருப்பதாக எண்ண வைத்துள்ளது.

உண்மையில் இந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கதே எனினும் இது தொடர்பாக இன்னும் சில விடயங்கள் கவனத்திற்குக் கொள்ளப்பட வேண்டும். வடக்குக் கிழக்குப் பிரச்சினை என்பது தற்போது புலிகள்-அரசு தொடர்பான பிரச்சினையாகவே இனங்காணப்பட்டு இருக்கிறது. பொருளாதாரத் தடையை நீக்கி யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு வருவது என்பது முற்றாகப் பிரச்சினைகள் தீர்வதற்குரிய வழியல்ல. ஆனாலும் இதனை முதற்படியாகக் கொண்டு நல்ல முடிவை எதிர்பார்ப்பதோடு இந்தப் பிரச்சினை பல பரிமாணம் பெற்று குழுமங்களை உள்ளடக்கிய ஒரு பிரச்சினை என்பதைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். குறிப்பாக வடக்குக் கிழக்கு முஸ்லிம் மக்கள் தொடர்புபட்ட ஒரு பிரச்சினை இது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வடக்கு கிழக்குத் தொடர்பான எதுவித நடவடிக்கைகளும் அப்பாரம்பரியப் பிரதேசங்களுக்கு உரித்துடைய தமிழ், முஸ்லிம் மக்கள் நலம்சார்ந்த ஒன்றாக இருக்க வேண்டும். அப்போது தான் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பயன்தரும்.

அரசுக்கு எதிரான போராட்டம் முஸ்லிம்களுக்கு எதிராகத் திசைதிருப்பி அல்லது திசைதிருப்பப்பட்டு அவர்களை அவர்களது சொந்த பு[illegible]லிருந்து விரட்டியடித்தது ஒரு வரலாற்றுக் களங்கமாகும். அந்தக் களங்கம் ஏற்படுத்தப்பட்டு நான்காவது ஆண்டை நெருங்கும் இந்தச் சூழ்நிலை பல அரசியல் மாற்றங்களை எதிர்நோக்கி இருக்கின்றது. வரலாற்றில் தாம் விட்ட தவறுகளை திருத்திக் கொள்வதற்கும், இனிவரும் வரலாறுகள் களங்கப்படாமல் பாதுகாப்பதற்குமுரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய காலகட்ட மாகும் இது.

அரசு, புல[illegible]ட்டுமன்றி வடக்கிலிருந்து வி[illegible] முஸ்லிம்களும் இந்தப் புதிய [illegible]வுகளின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இது சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸினரும் , புலிகளுக்கு முஸ்லிம்கள் பற்றிய சரியான நிலைப்பாட்டை எடுத்து, தவறுகளை நிவர்த்திக்கும்படியும் வேண்டியுள்ளனர். புலம்பெயர்ந்த முஸ்லிம்களும் தங்களது தாயக மண்ணை நல்லதொரு சூழ்நிலையில் தரிசிக்க விரும்புகின்றனர். இதற்கான சந்தர்ப்பத்தை புலிகள் தரப்பிலிருந்து எதிர்பார்த்த முஸ்லிம்கள் பிரபாகரன் தெரிவித்த அறிக்கையினால் அதிருப்திப்படுகின்றனர். தங்களால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் இருப்பிடங்களில் அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இருப்பதாகவும், அவர்கள் உரிய இடங்களுக்குத் திரும்பியதும் முஸ்லிம்கள் வந்து குடியேறலாம் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் முஸ்லிம் மக்கள் விடுதலைப்புலிகள் தமக்கிழைத்த தவறுகளை உணர்ந்து திருந்திக்கொள்ளும் பட்சத்தில் எதுவித நிபந்தனையுமின்றி தங்கள் வாழிடங்களில் அமைதியாகவும் , பாதுகாப்பாகவும் குடியேற விட வேண்டுமென்று விருப்பப்படுகிறார்கள். இதுவிடயத்தில் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் மட்டும் சார்ந்த தன்னிச்சையான ஈடுபாடுகளையும் அவர்கள் விரும்பவில்லை. எப்போதும் ஒருவன் தான் இழைத்த தவறுகளை தானாக உணர்ந்து கொள்வதுதான் சிறந்ததாக இருக்கும். நிர்ப்பந்தங்களும், சில சலுகைகளும் தோற்றுவிக்கின்ற செயற்பாடுகள் தற்செயலானதாகத்தான் இருக்கும். எனவே இந்த சந்தர்ப்பத்தைச் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகள் அறிக்கைகள் விடுவதற்கும், சவால்கள் விடுவதற்கும் பயன்படுத்தக்கூடாது. திறந்து கொள்ளும் சமாதானக் கதவுகளை மூட வைக்கிற நடவடிக்கைகளை அவைகள் மேற்கொள்ளக் கூடாது. இதுவரை பயனளிக்காத வடக்கு முஸ்லிம் பற்றிய கரிசனையை அரசியல் ஆரவாரத்திற்காக காட்ட முனையக் கூடாது.

இலங்கையில் எரியும் பிரச்சினைகளில் இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த சமூக மாற்றத்தின்போதும் புலிகள் தரப்பிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிரான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது கவலையை அளிக்கிறது. ஒட்டமாவடிப் பகுதியிலிருந்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான முந்நூறு மாடுகளை எடுத்துச் சென்றதோடு அதைத் தேடிச் சென்றவர்களைப் பிடித்து வைத்திருப்பதாகவும் முஸ்லிம்கள் தங்கள் வயலில் பயிர் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை என்றும், புலிகள் கப்பம் கேட்பதாகவும் செப். முதல்வாரத் தகவல் தெரிவிக்கின்றன. இவை சமாதானத்திற்குப் பாதகமாகின்ற நடவடிக்கைகளாகும். இவ்வாறானவற்றை புலிகள் உடனடியாக எதுவித நிபந்தனையுமின்றி நிறுத்த வேண்டும். அத்துடன் வடக்கு-கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களிடையே இழந்து போன புரிந்துணர்வு மீண்டும் தளிர்விட்டு அவர்களிடையே சமாதானம் ஏற்பட்டு ஒன்றுபட்ட தீர்வைப் பெற முயற்சிக்க வேண்டும். இவர்களைப் பிரிக்கின்ற இவர்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்ற எத்தகைய முயற்சிகளும் நிரந்தர வெற்றியைத் தரப் போவதில்லை. எல்லாவிதமான சமாதான முயற்சிகளும் வடக்கு கிழக்கின் முஸ்லிம்கள் பற்றிய சரியான நிலைப்பாடு எடுக்கப்படும் போது தான் அதில் முழுமையைத் தரிசிக்க முடியும்.

**-பாதுஷா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாருடைய அரசு இது?

## உங்களதா? அவர்களதா?

னாசமருப்பான்

பாராளுமன்றத் தேர்தல் முடிந்து விட்ட கையோடு ஜனாதிபதித் தேர்தல் பற்றிய கதைகள் அடிபடத் தொடங்கியுள்ளன. பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவை பிரதமராக கொண்ட புதிய அரசாங்கம் கடந்த மூன்று வாரங்களுள் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பரவலாக 'திருப்தி' தெரிவிக்கப்படுகிறது. முன்னைய யூ.என்.பி அரசின் தலைவரும் ஜனாதிபதியுமான டி.பி.விஜேதுங்க கிட்டத்தட்ட ஒரு பெயரளவிலான ஜனாதிபதியாகவே தன்னை காட்டிக் கொள்கிறார் என்று அவரது சகாக்கள் அவர் மீது பாயத் தொடங்கியுள்ளார்கள். மந்திரி சபைக்கு தலைமை வகிக்க வேண்டிய அவர், அப் பொறுப்பை பிரதமரிடம் ஒப்படைத்துவிட்டு அமைதியாக இருப்பது பதவியிழந்த முன்னாள் அரச உறுப்பினர்கள் பலருக்கு வேப்பங்காயாக இருக்கிறது. ஆனால், அதிகாரம் செல்லுபடியாகாத இடத்தில் அதைப் பாவித்துப் பார்க்க விரும்பாத அவர் அடுத்து வரவுள்ள ஜனாதிபதி தேர்தல் வரைக்குமாவது அடக்கி வாசிப்பது நல்லது என்று கருதுகிறார் போலும்!.

கடைசி நிமிடம் வரை, தானே தேர்தலில் நிற்பேன் என்று கூறி வந்த அவர், அவர் விரும்பியபடியே தனது வாரிசான காமினிக்கு அப் பொறுப்பைக் கையளித்து விட்டு ஒதுங்கிக் கொள்ள தீர்மானித்து விட்டார். பொதுசன ஐக்கிய முன்னணியினரும் கூட தமது வேட்பாளர் சந்திரிகாவே என்பதை இன்னமும் தெளிவாக தீர்மானிக்கவில்லை.

எது எப்படியோ தற்போதைய நிகழ்வுகளைப் பார்க்கும் போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக இருகட்சிகளும் (ஐ.தே.க. பொ.ஐ.மு) தேர்தலுக்கு முன் சொன்னது போல ஜனாதிபதி முறைமையை மாற்றுவதற்கு அவகாசம் போதாது என்று கருதுவதாகவே தெரிகிறது. எதிர்க்கட்சித் தலைவரான காமினி தானும் ஜனாதிபதி முறையை மாற்ற உதவப் போவதாக கூறிய போதும், அரசதரப்பிலுள்ளவர்கள் அவசரப்பட்டு அந்த முயற்சியை செய்ய விரும்பவில்லை.

சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளது ஆதரவில் மட்டுமே தங்கியுள்ள இந்த அரசாங்கம், ஜனாதிபதி தமது ஜனாதிபதியாக இருப்பதே உகந்தது என்று கருதுவதில் வியப்பில்லை. ஜனாதிபதி தேர்தல் வரைக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களை மாற்றுவதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபடப் போவதில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

இதேவேளை, இவ்விரண்டு கட்சிகளுக்கும் வெளியேயுள்ள ஜனநாயகவாதிகள் அல்லது, 'முற்போக்கு புத்திஜீவிகள்' மத்தியில் இன்று தோன்றியுள்ள பிரச்சினை இந்த ஜனாதிபதித் தேர்தலில் பொ.ஐ.முவை ஆதரிக்க என்ன வழிமுறைகளை கையாள்வது என்பதாகும்.

இவர்களுக்கு இப்போது தோன்றியுள்ளது உண்மையில் ஒரு புதிய அரசியல் நெருக்கடியாகும். இவர்களுக்கு அடிக்கடி தோன்றும் இந்த அரசியல் நெருக்கடி இந்த ஐ.தே.க ஆட்சி மாற்றத்தோடும் தோன்றிவிட்டிருக்கிறது 1987இல் இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான போது இந்த ஜனநாயகவாதிகள் மத்தியில் இத்தகையதொரு அரசியல் நெருக்கடி தோன்றியது. வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களது பிரச்சினைக்கு வழங்கப்பட்ட ஒரு அற்புதமான தீர்வு அது என்ற அபிப்பிராயம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை வரவேற்றுப் பாராட்டியதுடன் அதற்காக தமது சக்திகளை செலவு செய்து அது வெற்றி பெறுவதற்காகவும் அவர்களில் பலர் உழைத்தார்கள்.

ஆனால் வரலாறு வேறுவிதமாக திரும்பியது. ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்ற நம்பிக்கை மூன்றே மாதங்களில் அடிபட்டுப் போயிற்று. சமாதானத்தை ஏற்படுத்த வந்ததாக சொல்லப்பட்ட இந்தியப்படை யுத்தத்தில் குதித்தது.

ஜனநாயகவாதிகளோ, புலிகளது துரதிரிஷ்டியற்ற நடைமுறை காரணமாகவே இந்த யுத்தம் தொடங்கியது என்று கருதிக் கொண்டு ஒப்பந்தத்தை அமுலாக்குவதில் கவனம் செலுத்தினர்.

ஆனால், இனவாதிகளும், பிற்போக்கு அரசியல் வாதிகளும் நிகழ்ச்சிகளின் போக்கை இவர்களை விடவும் சிறப்பாக இனங்கண்டு கொண்டார்கள். இந்தியப் படை வெளியெற்றப்படுவதற்கும், ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாமலிருக்கவும் ஏற்ற விதத்தில் அவர்கள் இயங்கினார்கள்; அதில் வெற்றியும் பெற்றார்கள். நமது ஜனாநாயகவாதிகளோ, தனித்துப்போய் நின்றார்கள்.

இப்போது மீண்டுமொருமுறை அதே நெருக்கடி நிலை தோன்றியிருக்கிறது. அதே ஜனநாயகம், அமைதி என்ற வார்த்தைகளை அரசு தரப்பிலிருந்து கேட்கக் கூடியதாக இருக்கிறது.

ஜனநாயகவாதிகள் மீண்டும் புதிய நம்பிக்கையுடன் உலாவத் தொடங்கியுள்ளார்கள். புதிய அரசாங்கம், ஜனநாயகத்திற்காகவும் அமைதிக்காகவும் செய்கின்ற முயற்சிகளை ஆதரிப்பதும் பாராட்டுவதும் அவசியம்; அவர்களுக்காக உழைப்பது அவசியம் என்று கூறத் தொடங்கி விட்டார்கள். வழமை போலவே, நமது ஜனநாயகவாதிகள் புதிய அரசின் நடவடிக்கைகளை கண்டு பிரமித்துப் போய்விட்டார்கள். இந்தப் பிரமிப்பினால் அவர்களுக்கு தமது கடந்த கால வரலாறு மறந்தே போய் விடுகிறது. ஏன் அரசுகளதும் ஆட்சியாளர்களதும் வரலாற்றை தாம் படித்த அரசியல் விஞ்ஞானத்திலை அறிவுறுத்தல் எல்லாவற்றையும் இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

ஆனால், இத்தகைய நிதானமிழப்பு இவர்களை மீண்டும் ஒருமுறை நெருக்கடிக்குள் தள்ளிவிடக்கூடும் என்பதுபற்றி இவர்கள் அலட்டிக் கொள்வதாக தெரியவில்லை.

உண்மையில் இந்த ஜனநாயகவாதிகள் எப்போதும் நிகழ்ச்சிகளின் போக்கில் அள்ளுப்பட்டுக் கொண்டு போகிறார்கள். இந்த அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தவும், பொருளாதாரத் தடையை நீக்கவும் அவசரகால சட்டத்தை ரத்துச் செய்யவும், ஜனாதிபதி முறையை ஒழிக்கவும் தயார் என்று அறிவித்ததும், நாட்டில் ஜனநாயகம் வந்துவிட்டதாக குதூகலித்து அதன் பின்னால் ஓடுகிறார்கள். ஓடும் வேகத்தில் ஒவ்வொரு தடவையும் தடக்குப்பட்டு விழுகிறார்கள். விழுந்து எழுகின்ற போது, மீண்டும் நம்பிக்கையுடன் ஓடத் தொடங்குகிறார்கள்.

இவர்களது இருப்பே நம்பிக்கையின் -வெறும் மனப்பதிவடிப்படையிலான நம்பிக்கையின் - அடிப்படையில்தான் இருக்கிறது என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதாக தெரியவில்லை.

கொஞ்சம் நிதானமாக நின்று, வரலாற்றை அவதானமாகப் பார்த்தால், இவர்கள் கருதும் 'ஜனநயாகம்' பற்றியும், தமது நடைமுறை பற்றியும் அவர்களாலேயே மதிப்பிடமுடியும்.

ஆனால் இவர்கள்?

இப்போது இலங்கையில் உள்ள பிரச்சினையே யுத்தமும், அவசர காலச் சட்டமும், புலிகளுடன் பேசாமையும் தான் என்று நினைக்கிறார்கள் இவர்கள். இவையெல்லாம் அடிப்படையான பிரச்சினைகளின் தோற்றப்பாடுகள் மட்டுமே என்பதை இவர்கள் நம்ப மறுக்கிறார்கள். யுத்தம் இல்லாதிருந்த, அவசரகாலச் சட்டம் போடப்படாதிருந்த, இன்னமும் புலிகள் தோன்றாமலே இருந்த காலத்தின் நிலைமைகள் தான் இவற்றை இவ்வாறு வளர்த்து விட்டுள்ளன என்பதையோ, பிரச்சினை இன்றைய தோற்றங்களை மாற்றுவதற்கு முயல்வதில் தங்கியில்லை, இத்தோற்றங்களுக்கான அடிப்படைகளை களைவதில் தான் தங்கியிருக்கிறது என்பதையோ அவர்கள் உணர்வதாகத் தெரியவில்லை.

உண்மையில் இவற்றை நினைவில் வைத்துக் கொண்டால், வந்திருக்கும் புதிய அரசுடன் கூட, விட்டுக் கொடுப்பற்ற மக்களின் ஜனநாயகத்தை வென்றெடுக்கின்ற அடிப்படையிலான, போராட்ட உறவை பேண வேண்டுமென்றே முடிவு செய்வர். அதன் மூலமாக முடிந்தளவு ஜனநாயக உரிமைகளை பெற்றுக் கொள்ளுவோம் என்று கருதுவர். மாறாக இவ் அரசின் ஜனநாயகத்தை 'பிரச்சாரம் செய்யும் சக்திகளாக தம்மை மாற்றிக் கொண்டாலோ தம்மை மட்டுமல்ல, தமது கோரிக்கைகளையும் கூட இழக்கும் நிலை அவர்களுக்குத் தோன்றக் கூடும். ஆனால் இதை இவர்கள் புரிந்து கொண்டதாக தெரியவில்லை.

இந்த அரசாங்கம்- ஐ.தே.க அரசாங்கத்தை விட சிறப்பானதாக தோன்றுகிறது. சந்திரிகா முன்பிருந்த எல்லா தலைவர்களையும் விட சிறப்பானவராக தோன்றுகிறார் என்பது எல்லாம் உண்மையே. ஆனால், இந்த நடப்பு அரசாங்க அமைப்புக்கும் மக்களுக்கும் இடையில் என்றென்றைக்கும் இணக்கம் காணமுடியாத ஒரு பிளவு இருப்பது இலகுவில் மறந்து விடக் கூடியதல்லவே? இந்தப் பிளவு இருக்கும் வரை ஜனநயாக சக்திகள் மக்களின் நலன்களுக்கான குரலெழுப்புவோராய் அதற்காக போராடுவோராய் இருக்க முடியுமே தவிர, அரசாங்கத்தின் அங்கமாக அதன் பகுதிகளாக மாறிப் போய்விட முடியாது. அப்படிப் போகும் ஒவ்வொரு கணமும் அவர்கள் தமது முகங்களை இழந்து விடுகிறார்கள்.

உண்மையில் ஜனநாயக சக்திகள் ஐ.தே.க அரசுடன் நடாத்திய நடாத்த வேண்டிய வகையிலான போராட்டமல்ல இன்றைய அரசுடன் நடத்த வேண்டிய போராட்டம் என்பது சரிதான். போராட்டமுறை, மாறுவதென்பது, இன்றைய அரசின் தன்மை அல்லது அது வெளிப்படுத்தும் தன்மையில் தங்கியிருப்பதால் அது மாற வேண்டி உள்ளது. ஆனால் அது வெறும் போராட்ட முறையிலான மாற்றமே ஒழிய, போராட்டத்தை கைவிடுகின்ற -போராட்டமே தேவை இல்லை என்கிற முடிவுக்கு வருகின்ற ஒரு மாற்றம் அல்ல.

போராட்டமற்ற ஐக்கியம் அப்பட்டமான சந்தர்ப்பவாதம் அல்லது சரணாகதி.

இந்த அரசின் 'ஜனநாயக தோற்றம்' என்றென்றைக்கும் சாசுவசமானதாக இருக்கப் போவதில்லை. அதை முடிந்தளவுக்கு இப்படியே இருக்கவைப்பது ஜனநாயக வாதிகளின் போராட்டத்தில் தான் தங்கியிருக்கிறது என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. தவிரவும் ஜனநாயகவாதிகளின் சரணாகதி மக்களை பலியெடுக்கின்ற நிலைமைக்கு இட்டுச் செல்லவும் செய்யும்.

ஜனநாயகவாதம் என்பது, ஆளும் கட்சிகள் தமது அதிகாரங்கள் பறிக்கப்படும் போது மட்டுமே பேசப்படும் ஒன்றல்ல. அது அதன் முழு அர்த்தத்தில் பரந்துபட்ட மக்களின் வாழும் உரிமையோடு சம்பந்தப்பட்டது. பரந்துபட்ட மக்களின் ஜனநாயக உரிமைகளை அங்கீகரிக்காத நடைமுறைப்படுத்தாத ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதை செய்யும் அரசை எதிர்த்து ஆட்சியிலில்லாத ஆளும்வர்க்க கட்சிகள் கோசம் எழுப்பவதுண்டு. அதே வேளை ஜனநாயகவாதிகளும் குரல் எழுப்புகிறார்கள். ஆனால் இருவரது தளங்களும் வேறு வேறு. இப்போராட்டத்தின் விளைவுகளை ஆட்சியிலில்லாத ஆளும் வர்க்கம் அனுபவிக்க தொடங்குகிறது.

ஆளும் வர்க்கங்கள் ஆளப்படும் மக்களுக்கு ஜனநாயகத்தை ஒரு போதும் முழுதாக வழங்குவதில்லை.

முழுதான ஜனநாயகத்தை கோருபவர்களான ஜனநாயக வாதிகள் அப்போது அருசுடன் முரண்படவேண்டியவர்களாகின்றனர்.

எனவே புதிய அரசுக்கு எல்லைப்பாடுகள் (Limitations) இல்லை என்ற பிரமையை ஊட்டும்பணியில்; அப்படி ஊட்டுவதன் மூலமாக மக்களை மீண்டும் ஏமாற்றத்துக்கு பலியாக்கும் பணியில் ஈடுபடுவதை ஜனநாயக வாதிகள் செய்யக்கூடாது.

நாட்டில் முழுமையான ஜனநாயகத்தை கொண்டு வரும் அரசியல் பணியை அவர்கள் செய்யாவிட்டாலும் கூட, அரை குறைகளை முழுமையானதென்ற பிரமையூட்டிக் காட்ட வேண்டியதில்லையே.

கடைசியாக ஜனநாயக வாதிகளுக்கு சில வார்த்தைகள்:

புதிய அரசாங்கம் நல்லதா? அது ஜனநாயக பூர்வமானதா? தேசபக்திமிக்கதா? நாட்டில் அமைதி, சமாதானம், வறுமை ஒழிப்புக்காக நிற்கப் போகிறதா! ஊழல், லஞ்சம் அற்ற அதிகாரத்தை கொண்டுவரப் போகிறதா? இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சிக்கிறதா? நல்லது. அப்படியே இருக்கட்டும்; அப்படித்தான் இருக்க வேண்டும். அதைப்பாராட்டுங்கள். அது தொடர்ந்தும் அப்படியே இருக்கும் விதத்தில் செயல்படுங்கள்.

அவர்களிடம் மக்களின் கோரிக்கைகளை முன்வையுங்கள். நடைமுறைப்படுத்துமாறு கோருங்கள். நடைமுறைப்படுத்தும் போது வாழ்த்துங்கள். ஆனால் அவர்களது அரசு உங்களது அரசு என்று அப்பாவித்தனமாக நினைத்து விடாதீர்கள்.


அந்த நம்பிக்கை மீண்டும் ஒரு முறை உங்களை மண் கவ்வ வைத்துவிடும்!

வடக்கு கிழக்கில் அமைதி நிலவி சமாதானம் உருவாகினாலும் கூட அரசியல் தீர்வு வெற்றி பெற்றுவிட்டாலும்கூட உங்கள் நிலைமை அது தான்.

அதை மறக்காதவரை நீங்கள் நீங்களாக இருப்பீர்கள்.

மாறி மாறி உங்கள் உடலில் சாயம் பூசப்படுவதை விரும்பமாட்டீர்கள் என நம்பலாமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



சரிநிகா
4 ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380.



# மூச்சு விட ஒரு இடைவெளி!

நான்கு வருடங்களுக்குப் பிறகு பேச்சுவார்த்தைக்கான சமிஞ்சைகள் இரு தரப்பிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமன்றி ஒரு சில முன்முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

புலிகள் தரப்பிலிருந்து பேச்சுவார்த்தைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள தமிழ்ச்செல்வனுடன் பேச அரசு தரப்பிலிருந்து லயனல் பெர்னாண்டோ விரைவில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளார் என்பது இறுதித் தகவல்.

நல்லது.

நான்கு வருடங்களாக தொடர்ச்சியான யுத்தத்திற்குள் வாழ்ந்த வட-கிழக்கு மக்களுக்கு 'பங்கர்' வாழ்க்கையிலிருந்து சற்று ஆசுவாசம். மூச்சு விட ஒரு இடைவெளி. (வெறும் இடை வெளிதானா?)

இந்த ஆசுவாசமும், இடைவெளியும் அடுத்த கட்ட யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் கிடைக்கின்ற தற்காலிக ஆசுவாசமும் இடைவெளியும் தானா அல்லது நிரந்தர சமாதானத்திற்கான முதலாவது படியா என்பது தான் இப்போதைக்குப் பிரதானமான கேள்வி.

எல்லாத் தமிழ் முஸ்லீம் மக்களிடமும் எழுந்துள்ள கேள்வி இது.

இவ்வாறான கேள்வியே அர்த்தமற்றது என்று யாரும் இலகுவில் தட்டிக் கழித்து விட முடியாது. ஏனென்றால், அவர்களுக்கு முன்னால் ஒரு அரைநூற்றாண்டு கால கசப்பான வரலாறு இருக்கிறது.

தமிழ் முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைக்கான தீர்வுக்காக அவர்களது தலைமைகளுக்கும் மாறி மாறி வந்த அரசாங்கங்களுக்கும் இடையே அவ்வப்போது நடந்த பேச்சுவார்த்தைகளும் எழுதிய ஒப்பந்தங்களும் செல்லாக் காசாகி யுத்தம் அவர்களை விழுங்கிய சம்பவங்களைத் தான் வரலாறு அவர்களுக்குத் தந்திருக்கிறது.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகப் புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்கு நியாயமான தீர்வை அமுல்படுத்துவதற்குப் பதிலாக வட்ட மேசை மாநாடு தெரிவுக்குழு என்று தமிழ்த் தலைமைகளுடன் பேசிக் கொண்டே அந்த மக்கள் மீதான ஒடுக்குமுறையைக்கட்ட விழ்த்து விட்டது ஒன்றும் இலகுவில் மறந்து போய் விடக் கூடிய ஒரு விடயமல்ல.

இந்திய 'அமைதிப்'படையின் வருகைக் காலத்திலும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுடனான பேச்சுவார்த்தைக் காலத்திலும் கூட இனப்பிரச்சினைத் தீர்வும் நிரந்தர சமாதானமும் பற்றிப் பேசப்பட்டது தான்.

ஆயினும் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் தீர்வும்சமாதானமும் ஏன் சாத்திமற்றுப் போயிற்று?

ஒருவர் மற்றவரைப் பயன்படுத்திக் கொள்வதும், தத்தமது நலன்களை மட்டும் பேணுவதற்கான சாமர்த்தியத்தைக் காட்டுவதும் தான் பேச்சுவார்த்தையின் நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. குறுகிய கால நலன்கள் பற்றிய அக்கறை நீண்டகால நலன்களை கைவிட்டு மீளவும் யுத்தநிலைமை உருவாகக் காரணமாயிருக்கிறது.

சமாதான முயற்சிக்கு முதல் நிபந்தனை, சமாதானத்திற்கு தடையாக உள்ளவற்றை களைய வேண்டுமென்பதில் இதயசுத்தியுடன் ஈடுபடும் அக்கறை, இது கடந்த கால சமரச முயற்சிகள் எதிலும் இருந்ததில்லை.

புலிகளைப் பயன்படுத்தி இந்தியப்படையை வெளியேற்றி மாகாணசபையைக் கலைத்து விட்டு அதே புலிகளுடன் பிரேமதாச அரசு யுத்தத்தில் இறங்கியது வெளிப்படையானதொரு உதாரணம்.

இந்தியப் படையை வெளியேற்றவும், தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு எதிராகப் போராடவும் ஆயுதங்களைத் தந்ததைத் தவிர சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்துக்கு பிரேமதாசா எதுவும் செய்யவில்லை என்று இப்போது சொல்கிறார் அன்ரன் பாலசிங்கம்.

இருதரப்பு நோக்கங்களும், சமாதானமோ, அமைதியை கொண்டு வருவதோ அல்ல, என்பது தெளிவாகிவிடுகிறது.

பிரேமதாசா நல்லவர், வல்லவர், பிரச்சினையைத் தீர்ப்பார் என்றெல்லாம் பிரேமதாசா குறித்து ஏன் ஒரு மாயையை உருவாக்கினீர்கள் என்று இப்போது பாலசிங்கத்திடம் கேட்டால் அவர் என்ன பதில் சொல்வாரோ தெரியாது.

போகட்டும்.

இப்போது மீளவும் பேச்சுவார்த்தைக்கான சூழல் உருவாகியிருக்கிறது. முன்னைய பேச்சுவார்த்தைகளின் போதான இரகசிய பேச்சுவார்த்தை மக்களுடைய அரசியல் கோரிக்கைகளை முன்வைப்பதற்குப் பதிலாக தற்காலிக நலன்களை முன்வைப்பது, என்பன நிறுத்தப்பட வேண்டும்.

கண்மூடித்தனமான சமரசம் எப்படி பிரச்சினைக்கான தீர்வை ஒரு போதும் தரப்போவதில்லையோ, அதேபோல் நாடு இரண்டாகப் போய்விடுமே என்பதற்காக எதையாவது கொடுத்து பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என எண்ணுவதும் கூட ஒரு போதும் பிரச்சினையைத் தீர்க்க உதவப் போவதில்லை.

இரகசியமான பேச்சுக்கள், அப்பேச்சுக்களில் எடுக்கப்படும் முடிவுகள் எல்லாம் எப்போதும் ஆபத்தானவை. சமயங்களில், யாரும் அவற்றுக்கு பொறுப்பேற்பதில்லை. இப்போது பேச முயலும் புலிகளும் அரசும் உண்மையில் அமைதியை விரும்பினால் வெளிப்படையாக பேச வேண்டும் என்பது மட்டுமல்ல.

அமையப் போகும் சமாதானம் எல்லா மக்களுக்கும் சமாதானத்தையும் ஜனநாயகத்தையம் அரசியல் உரிமையையும் வழங்க உத்தரவாதம் தருவதாக அமைய வேண்டும் என்பதையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

விடுதலை இலங்கைப் பொலிசாருக்கு மட்டுமல்ல வடக்கிலும், கிழக்கிலும் புலிகளிடமும், தெற்கில் அரசு சிறைகளுள்ளும் சிறைப்பட்டிருக்கும் இளைஞர்களுக்கும் கிடைக்க வேண்டும்!

# RAPEஇற்கு இணக்கமான தமிழ்ப் பதம்

## பலவந்தம்தான்!

ஜூலை 28 - ஒகஸ்ட் 10 காலப்பகுதிக்குரிய தங்கள் சரிநிகர் பத்திரிகையில் ''பெண்களின் குரல்'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட பகுதியில் தகாப்புணர்வு என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. இது கற்பழிப்பு RAPE என்னும் கருத்தில் எழுதப்பட்டதாக நான் உணர்கிறேன். முன்னர் ஒரு சரிநிகர் இதழில் 'கற்பழிப்பு' என்னும் சொல்லின் பொருத்தப்பாடின்மை சுட்டிக் காட்டப்பட்டு அதற்கு பொருத்தமான சொல்லினை ஆக்குமாறு கேட்கப்பட்டதை நான் ஞாபகத்தில் வைத்திருந்தாலும், தகாப்புணர்வு என்னும் சொல் RAPE இற்கு பொருத்தமான சொல் அல்ல என்பதைத் திட்டவட்டமாக உணர்வதாலும், இதனை எழுதுகின்றேன்.

தகாப்புணர்வின் பொருத்தமின்மை:

தகாப்புணர்வு என்னும் சொல் RAPE என்ற படிமத்தை (?) உருவாக்க வல்லதல்ல.

தகாப்புணர்வு என்பதில் குதவழிப் புணர்வு போன்ற நெறி பிறந்த கூடல் வகையும், தாய்-மகன், தகப்பன்-மகள், சகோதரன் - சகோதரி, பருவமடையாத பிள்ளை- ஆண், பெண் ஆகியோரிடையேயான Inter course உம், கணவன் - மனைவி உயிருடனுள்ள போது ஒருவர் வேறு ஒருவருடன் கூடுதல் என்பனவும் அடக்கப்படக் கூடும்.

தகாப்புணர்வு என்பதனுள் RAPE என்பதையும் அடக்கலாம். ஆயினும் RAPE இன் போது பயன்படுத்தப்படும் வன்முறையைக் காட்டக் கூடியதாக இது இல்லை.

அத்துடன் புணர்வு என்பது சேருதல் என்னும் கருத்திலும் வழங்கப்படும். சேருதல் என்பது இருவரும் மனமொத்து ஈடுபடுவதான ஒரு படிமத்தை உருவாக்கவும் கூடும்.

RAPE - என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு வழமையான கருத்தை விட வேறு கருத்துக்களும் அகராதிகளில் உண்டு Raping of troipical forest என்பது ஒரு பயன்பாடு.

Seige and carry off by force - இது அகராதியில் (Horuby) பெற்ற ஒரு பொருள்.

எனவே கற்பழிப்புக்கு பதிலான ஒரு சொல்லை ஆக்கும் போது அங்கு பயன்படுத்தப்படும் வன்முறையையும் அது பிரதிபலிக்க வேண்டும். (அங்கு இடம் பெறும் Intercourse இற்கு மேலாக) இதைப் பற்றி யோசித்த போது இதற்கான ஒரு புது சொல்லை ஆக்க வேண்டியதில்லை என்பதே என் முடிவாயிற்று. ஏற்கனவே இதற்கான ஒரு சொல் தமிழில் வழங்கி வந்துள்ளது. அச் சொல்தான் ''பலவந்தம்''

பலவந்தம் என்பது Force intercourse ஐத் தவிர வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படக்கூடியதே. பலவந்தம் என்பதை கற்பழிப்புக்காக பத்திரிகைகள் தொடர்ந்து பயன்படுத்தும் போது அது சரியான படிமத்தை கருத்தை இப்போது இல்லாவிடிலும் நாளடைவில் தோற்றுவிக்கும்.

இத்தலைப்புக்களைப் பாருங்கள்:

பலவந்திக்கப்பட்டதாக இளம் பெண் புகார்.

பொலிஸ் அதிகாரி தன்னை பல முறை பலவிந்ததாக அப்பெண் கூறினாள்.

பலவந்த வழக்கு கொழும்புக்கு மாற்றப்பட்டது.

அமெரிக்காவில் நாளொன்றுக்கு 3000 பலவந்தங்கள் இடம் பெறுகின்றன.

பலவந்தம் தொடர்பான சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்.

பலவந்திக்கப்பட்ட பெண்களை அனுதாபத்துடன் நோக்க வேண்டும்.

'பலவந்தம்' செய்வோருக்கு மரண தண்டனை

**ந.கிருஷ்ணராசா**

குறித்த கட்டுரையில் தகாப்புணர்வு என்ற சொல் Rape என்ற பதத்திற்கு இசைவான தமிழ்ப்பதமாகப் பாவிக்கப்படவில்லை. நீங்கள் குறித்தபடி பராயமடையாத ஆண்/ பெண் உடனான உறவையும், குத வழிப் புணர்வும் இன்னபிறவற்றையுமே குறிக்கிறது.

ஆ-ர்



# யார் செய்தாலும்

## அது ஆக்கிரமிப்பே!

''இவானா பெனாஸ்' மத்திய பொஸ்னியாவைச் சேர்ந்த 'பிலா' என்ற குரோஷியக் குக்கிராமம் ஒன்றின் 12 வயதுச் சிறுமி. **முஸ்லீம் படையினரின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு வெளியேற** முடியாமல் இருக்கும் **அச்சிறுமி** பிரான்ஸிலுள்ள **தனது பள்ளித்** தோழி சன்ராவுக்கு எழுதிய கடிதம் இது. இது வெறும் கடிதம் அல்ல. யுத்தகால அனுபவங்களைக் கூறும் **கதை**. 'BRUCKEN BAUER' என்ற சுவிஸின் வாராந்த சஞ்சிகை ஒன்றில் வெளிவந்த இக்கடிதம் இங்கு அப்படியே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.''

சுவிஸ் பத்திரிகையாளர் HEIDI RINKE இனால் கொடுக்கப்பட்ட மேற்படி முன்னுரைதான் என்னால் அப்படியே மொழி பெயர்க்கப்பட்டது. அதிலுள்ள **முஸ்லீம்களால் ஆக்கிரமிக்கப்பட்ட** என்ற வரி ஸதக்காவை கடுமையாகப் பாதித்துள்ளதாகத் தெரிகிறது. அது இன, மத, மொழி ரீதியான ஒவ்வொருவரது பார்வையையும் பொறுத்தது.

ஸதாக்கா ஒரு இறுக்கமான இஸ்லாமிய அடிப்படைவாதி என்பதை அவரது வரிகள் அடையாளம் காட்டுகின்றன.

இதனால் பொஸ்னியப் பிரச்சினையை ஒரு பக்கமாகவே அவரால் பார்க்க முடியும். அதன் வெளிப்பாடே அவரது கடிதம்.

பொஸ்னியா மூன்று தேசிய இனங்களின் தாயகம். அந்தத் தேசிய இனங்கள் குரோஷியர்கள் (17வீதம்) சேர்பியர்கள் (39 வீதம்) முஸ்லீம்கள் (44வீதம்) பொஸ்னியாவில் சிதறிவாழும் மற்றைய இனங்கள் கணிப்பீட்டிற்குள் உட்படவில்லை. கம்யூனிச ஆட்சியாளர்கள் இன மத ரீதியான சனத்தொகை பரம்பலுக்கு முக்கியத்துவம் கொடுக்காது நிர்வாக எல்லைகளை வகுத்துக் கொண்டதன் விளைவுதான் இந்தப் பிரச்சினையின் அடிப்படை. இது பொஸ்னியாவுக்கு மட்டுமன்றி முழு யூகோசிலாவியாப் பிரச்சினைக்கும் பொதுவானது. கம்யூனிச ஆட்சியில் இருக்கக்கூடிய கட்டுப்பாடுகள் எல்லா இனத்தவர்களுக்கும் பொதுவானவையாக இருந்தன. குறிப்பாக மதரீதியான கட்டுப்பாடுகள் இறுக்கமானவைதான். ஆனால் இவை தனியாக முஸ்லீம்களுக்கோ இஸ்லாம்மதத்தினருக்கோ மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கவில்லை என்பதை ஸதக்கா விளங்கிக் கொள்வதில் கஷ்டப்படுகிறார்.

பொஸ்னியாவில் மூன்று தேசிய இனங்களும் யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தேசிய இனத்தின் பெயராலும் மற்றைய இரண்டிற்கும் கொடுமைகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் படுகொலைகளின், காணாமல் போனவர்களின், பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டவர்களின், இழக்கப்பட்ட சொத்துடமைகளின், ஊனமுற்றவர்களின், அகதிகளின் அழிக்கப்பட்ட கல்வி, மத நிலையங்களின் புள்ளிவிபரங்கள் வேறுபடலாம். ஆனால் தன்மைகள் ஒத்தவையே. அவை ஆக்கிரமிப்பு அம்சம் கொண்டவையே. இதனால் **இவற்றை எவர் செய்தாலும் அது சேர்பியர்களாக இருந்தாலும், முஸ்லீம்களாக இருந்தாலும், குரோஷியர்களாக இருந்தாலும் அவை ஆக்கிரமிப்பே!**

ஸதக்கா பட்டியல் - பத்தியில் தந்திருக்கின்றதை ஒத்த இழப்புகள் வெறுமனே முஸ்லீம்களுக்கு மட்டும் ஏற்படவில்லை. இதே இழப்புகள் சேர்பியர்களுக்கும், குரோஷியர்களுக்கும் ஏற்பட்டுள்ளன. சேர்பியர்கள் குடியேற்றப்படுவது →

www.tamilarangam.net



போனறு முஸலிம படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முஸ்லீம்களும் குடியேற்றப்படுகிறார்கள். பள்ளி வாசல்கள் மட்டும் அழிக்கப்படவில்லை தேவாலயங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றை நிச்சயமாக கிறிஸ்தவர்கள் செய்திருக்க மாட்டார்கள் அல்லவா?

இக்கடிதத்தின் நோக்கம் முஸ்லீம்கள் தொடர்பான ஸதக்காவின் கருததுககளை மறுதலபபதலல. முஸ்லீம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை ஏற்றுக் கொர்ள்வதோடு பொஸ்னியாவின் மற்றைய தேசிய இனங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் வெளிக் கொணர்வது தரன். ஒவ்வொருவருக்கும் தமது தரப்பிற்கு ஏற்பட்ட இழப்புக்களை முன்வைக்கின்ற கருத்துச் சுதந்திரம் உண்டு. அது எந்த அளவுக்கு ஸதக்காவுக்கு உண்டோ அதைவிடவும் அதிகமாக இவனாவுக்கு உண்டு என்று நினனக்கின்றேன். ஏனெனில் இவனா பொஸ்னியாவை தாயகமாகக் கொண்ட சிறுமி இதை ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவம் எல்லோருக்கும் வேண்டும்.

**அழகு குணசீலன்.**
**சுவிஸ்**

# உவர் மலை தமிழ் வித்தியாலயம் இப்போதுதான் தரம் உயர்ந்துள்ளது

தங்கள் சரிநிகர் யூன் 30, யூலை இதழில் திருமலை உவர்மலை தமிழ் மகாவித்தியாலய அதிபர் நியமனத்தில் அரசியல் செல்வாக்கு எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட செய்தியில் எழுப்பப்பட்ட குற்றச் சாட்டுக்கள் பற்றிய உண்மை நிலைப்பாட்டைத் தர விரும்புகிறோம்.

1992ம் ஆண்டு பங்குனி மாதம் 10ம் திகதி அப்போது பிரதி அதிபராக இருந்த திரு.எஸ்.நவரட்ணம் தலைமையில் 7 ஆசிரியர்கள் உட்பட 150 மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சபையின் ஓர் பிரதிநிதி உட்பட கல்விச் சுற்றுலா ஒன்று



சென்றார்கள். இச்சுற்றுலாவை ஒழுங்கு செய்த முன்னைநாள் அதிபர் திரு.எம்.மகாதேவன் தனக்கு வேறு வேலைகள் இருப்பதாகக் காட்டி இச்சுற்றுலாவுக்கு போவதிலிருந்து தன்னை தவிர்த்துக் கொண்டார்

பிரதி அதிபர் தலைமையில் சென்ற சுற்றுலா குழுவினர் திரும்பி வருவதற்கு முன்னர் வேலைப்பழுவை காரணம் காட்டி அச்சுற்றுலாவில் பங்கு கொள்ளாத அதிபர் திரு.எம். மகாதேவன் அவர்கள் திடீரென 14.3.92இல் சில ஆசிரியர்களையும், மாணவர்களையும் அழைத்துக் கொண்டு திட்டமிடப்படாத ஒரு சுற்றுலாவைக் கண்டியில் மேற்கொண்டார். இவர் தலைமையில் சென்ற இச்சுற்றுலா மாஷவ மாணவிகள் திரும்பி வந்த பின்பு சுற்றுலாவில் இடம்பெற்ற இவரினால் மேற்கொள்ளப்பட்ட நடத்தைகள் சம்பந்தமாக பல செய்திகள் பரவின. பாடசாலை அபிவிருத்திச் சபையான எங்களுக்கும் பெற்றோர்கள் மூலம் கிடைத்தன.

''வேலியே பயிரை மேய்வது'' போன்று ஒழுக்கத்தைப் பேண வேண்டியவர்களே அதை மீறும் போது பாடசாலை அபிவிருத்திச் சபையின் உறுப்பினர்களாகிய நாங்கள் பாராமுகமாக இருந்திட முடியுமா? ஆகவே முன்னைநாள் அதிபர் மகாதேவன் தலைமையில் சென்ற திட்டமிடப்படாத சுற்றுலாவில் அவரினால் மேற்கொள்ளப்பட்ட நடத்தை சம்பந்தமாக வடகிழக்கு கல்வி அமைச்சின் செயலாளருக்கு முறைப்பாடு செய்துள்ளோம். எமது முறைப்பாடு காரணமாக பாடசாலையின் கல்வி வளர்ச்சியையும், ஒழுக்கத்தையும் கருத்திற் கொண்டு அமைச்சின் செயலாளரால் இவர் இடமாற்றப்பட்டு, ஒழுங்கு விசாரணை மேற்கொள்ள எடுக்கப்பட்ட செய்தி அறிந்து முன்னை நாள் அதிபர் திரு.மகாதேவன் இளைப்பாறல் கடிதத்தை 44/90 சுற்று நிருபத்திற்கமைய கையளித்தார். அப்போது புதிதாக அதிபராக நியமிக்கப்பட்ட திரு. எஸ்.நவரட்ணம் அவர்களை விரும்பாத சிலரால் திரு.எம்.மகாதேவன் வழி நடத்தப்பட்டு, இளைப்பாறல் கடிதத்தை வாபஸ் பெற்று .விசாரணை நடாத்தும்படி வேண்டுகோள் விடப்பட்டது.

4.6.92ம் திகதி கல்வித் திணைக்களத்தினால் 2.6.92ம் திகதி இடப்பட்ட 6/எஸ்/2/10 இலக்க கடிதத்தின் பிரகாரம் நடைபெற்ற விசாரணைக்கு 18 ஆசிரியர்கள் சமுகமளித்தார்கள். இவ்விசாரணை நடைபெற்று பல தினங்களுக்குப் பின்பு கௌரவ ஆளுனரின் பணிப்புக்கிணங்க கல்வி அமைச்சினால் திரு. மகாதேவன் உவர்மலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை தவிர்ந்த வேறொரு பாடசாலைக்கு அதிபராக அமர்த்தப்பட்டார். இவர் 1993ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதி தனது வயதின் உச்சவரம்பை அடைந்த போது இளைப்பாறி சென்றுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை பரிசளிப்பு விழாவும், பாடசாலை வாசிகசாலை கட்டிட திறப்பு விழாவின் கணக்குகள் யாவும் நிர்வாக சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத் தருவதோடு இவ்விபரத்தை நேரடிய்ாக பார்க்க விரும்பும் பெற்றோர் எவரும் அதிபரோடோ அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளரோடோ தொடர்பு கொண்டால் அதை எந்த நேரத்திலும் காட்டுவதற்கு ஆயத்தமாகவுள்ளோம் என்பதை தெரிவித்து இந்நிதிகள் பற்றி கல்வித் திணைக்களத்திடம் அதிகாரம் பெற்றுள்ளோம் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

இப்பாடசாலை இரண்டாந்தரப் ப்ாடசாலையாக இருந்த ப்ாடசாலையினை 1 சி பாடசாலையாக உயர்த்தி க.பொ.த. உயர்தர கலைப் பிரிவினை ஆரம்பிப்பதற்கு 1992ம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச் சபையினர்களாகிய நாங்களும், அதிபர் எஸ்.நவரட்ணமும் வீடுவிடாகச் சென்று பெற்றோ... களை அணுகி மாணவர்களைச சேரவைத்து இதனை 1 சி பாடசாலையாக தரமுயர்த்தினோம். அது மாத்திரமல்ல, இது இப்போது ஓர் 1 ஏபி பாடசாலை. இவ்வருடம் விஞ்ஞானப் பிரிவையும் கொண்டு வருவதற்கு நாங்கள் பட்ட கஷ்டம். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும்.

யாரோ வளர்த்துவிட சிலர் குளிர் காய நினைக்கிறாகள். அதை பெற்றோர்களாகிய நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். 1993ம் ஆண்டு கல்வி பொதுதராதர (சாதரணம்) பரீட்சையில் சித்தி அடைந்தோர் 70 பேராக உயர்ந்துள்ள நிலைமை தற்போதைய அதிபரின் விடாமுயற்சி என்பது யாவரும் அறிந்த விடயம்.

தரம் கூடிய அதிபர்கள் இருக்க தரம் குறைந்த அதிபர் இருக்கிறார் என்று சிலர் நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். திருகேகாணமலை மாவட்டத்தில் பெரும்பாலான பாடசாலைகளீல் இந்நிலை காணப்படுவதை அவர்கள் அறியவில்லையா?

பாடசாலை அபிவிருத்திச் சபையைப் பொறுத்தவரையில் இம்மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளின் நடைமுறையையே நாமும் பின்பற்றுகின்றோம். எமது நடைமுறை பிழையெனில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கல்வித் திணைக்களத்திற்குரியது.

**கோ.சத்தியசீலன்**
**உவர்மலை த.ம.வி.**
**பா.அ.சபை.**
**திருமலை**

# ''நான் தெளிவாகவும் அமைதியாகவும்தான் எடுத்துக் கூறினேன்'' -சம்பந்தன்

''சரிநிகர்'' பத்திரிகையின் புரட்டாதி 01 - புரட்டாதி 14, 1994க்குரிய இதழில் பக்கங்கள் 1,2இல் 'சண்டைபிடிக்கும் சம்பந்தர்'' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கட்டுரை சம்பந்தமாக பல விடயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு.அ.தங்கத்துரையும், நானும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மற்றைய வேட்பாளர்களும், எங்கள் வாக்கெண்ணும் முகவர்களும் வாக்குகளை எண்ணும் நிலையத்துக்கு ஒருமித்தே சென்றோம். வாக்குகள் எண்ணும் நிலையத்திலிருந்து ஒருமித்தே திரும்பினோம். ''திரு.தங்கத்துரை சோர்வடைந்து நேரகாலத்துடன் வீடு திரும்பிவிட்டார்'' என்ற உங்கள் கூற்று விசமத்தனமான பொய். உங்கள் விஷமத்தனமான பொய்யான கட்டுரைக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காகக் கூறப்பட்டிருக்கின்றது.

முழுத் தேர்தல் பிரசாரத்தின் போதிலும் எனது எண் உட்பட வேட்பாளர்களுடைய எண்களை நான் குறிப்பிடவில்லை. திருகோணமலை தேர்தல் மாவட்டத்திலுள்ள வாக்காளப் பெருமக்கள் இந்த மறுக்க முடியாத உண்மையை நன்கு அறிந்திருக்கிறார்கள். முன்னாள் திருகோணமலைத் தொகுதியின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளையினரே, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இரண்டு ஆசனங்கள் கிடைக்குமென்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் வாக்காளப் பெருமக்கள் தங்கள் விருப்பு வாக்குகளை எனக்கும் திரு.தங்கத்துரைக்கும் பயன்படுத்தவேண்டும் என பிரச்சாரம் செய்தார்கள். துரதிர்ஷ்டவசமாக திருகோணமலை மாவட்டத்தின் பல தமிழ் கிராமங்களில் நிலவும் குழம்பிய சூழ்நிலை காரணமாக இது சாத்தியமில்லை. நான் திருகோணமலைத் தொகுதியில் இரு எண்களுக்கும் பிரசாரம் செய்தேன் என்று என்னால் கூறப்பட்டு, நான் வாதாடினேன் என்ற உங்கள் கூற்று விஷமத்தனமான பொய். ஏனெனில் உண்மையில் நான் எனது எண்ணுக்குக் கூட பிரசாரம் செய்யவில்லை.

திருகொணமலை தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் நடைபெற்ற முறை; கட்சித் தலைமை அலுவலகத்தில் ஒருபோதும் விவாதிக்கப்படவில்லை. இது விடயம் சம்மந்தமாக நான் ''சண்டையில் இறங்கியதாகவும்'' நான் எனது ''ஆதரவாளர்களுடன் தலைமைப்பீடத்தில் கூச்சல் போட்டதாகவும் இதன் காரணமாகவும் பலத்த வாக்குவாதம் உருவாகியதாகவும்'' என்ற உங்கள் கூற்றுக்களும் விஷமத்தனமான பொய்களாகும்.

இந்த மோதலின் போது கட்சிச் செயலாளர் என்ற முறையில்'' என்னால் ''தங்கத்துரையின் பதவியை உடனடியாக நீக்கம் செய்ய முடியும்'' என நான் கூறினேன் என்ற உங்கள் கூற்றும் விஷமத்தனமான பொய். இவ்விதமான பூரணமான மூடத்தனமான ஒரு கருத்தை என்னால் சிந்தித்திருக்கக்கூட முடியாத நிலையில் உங்கள் கூற்று வேண்டுமென்று எனக்குச் செய்யப்பட்ட அவதூறு என்றுதான் கூறமுடியும்.

திரு.தங்கத்துரையுடனும் என்னுடனும் ஆவணி 21ம் திகதி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கப்பட்ட போது, கொழும்பில் கட்சியின் தலைமை அலுவலகத்திற்குச் சென்றவர்கள், தமிழர் விடுதலைக்கூட்டணியின் திருகோணமலைக் கிளையில் பொறுப்பான பதவி வகிப்பவர்களும், அதேசமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபையிலிருப்பவர்களும் ஆவர். நான் கட்சியின் அலுவலகத்திற்கு ''எனது ஆதரவாளர்களுடன்'' மோதலில் ஈடுபடுவதற்காகச் சென்றேன் என்ற உங்கள் கூற்றும் விஷமத்தனமான பொய்.

ஆவணி 21ஆம் திகதி கட்சித் தலைமை அலுவலகத்தில் சமூகம் கொடுத்திருந்த பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு மாவட்டங்களின் பிரதிநிதிகளுக்கும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் குழு சம்பந்தமாக தங்கள் கருத்தைக் கூறுவதற்கு முதலில் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு அரசியற் குழு உறுப்பினர்கள் மாத்திரம் கூடி ஒவ்வொருவரின் கருத்தையும் கேட்டறிந்த பிறகு, தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக யார் இருக்க வேண்டும் என்ற விடயம் சம்பந்தமாக கூட்டு முடிவு எடுக்கப்பட்டது. திருகோணமலை தேர்தல் மாவட்டத்தின் மிக அதிக அளவிலான வாக்காளப் பெருமக்களின் கருத்துக்களை, அவர்களின் திடமான வேண்டுகோளுக்கமைய நான் மிகவும் அமைதியாகவும் தெளிவாகவும் அரசியற் குழு உறுப்பினர்களுக்குக் கூறினேன். இது விடயம் சம்பந்தமாகவும் நான் ''சண்டையில் இறங்கினேன்'' என்ற உங்கள் கூற்றும் விஷமத்தனமான பொய். அதற்குப் பிறகு உடனடியாக, செயலாளர் நாயகம் என்ற முறையில் தேர்தல் ஆணையாளருக்கு, தேசியப் பட்டியல் பாராளுமன்றப் பதவிக்கு எமது நியமனத்தை நான் அறிவித்தேன்.

மேற்குறிப்பிட்ட கட்டுரையில் கூறப்பட்டிருக்கும் பல்வேறு விஷமம் நிறைந்த பொய்யான கூற்றுக்கள் பத்திரிகை எழுத்தாளர்களின் தர்ம ஒழுங்குகளையும் நீதி நெறிகளையும் பகிரங்கமாக பங்கப்படுத்தி உடைத்தெறியும் அதேவேளையில், அசட்டுத்துணிவுடனும் தீய எண்ணத்துடனும், பொதுவாழ்வில் ஈடுபடும் எனது நற்பெயருக்கு தீங்கு செய்வதற்கும், பொது மக்கள் மத்தியில் எனது மரியாதையையும் கௌரவத்தையும் குறைப்பதற்கும், திட்டமிட்டு எழுதப்பட்டதாகும்.

**இரா,சம்பந்தன்**
**திருகோணமலை**


www.tamilarangam.net



# இழந்த தேசமும் தொலைந்த நாட்களும்

ஞானம்

நான் முதலாம் உலகப் போரின் (1914-18) முன் பிறந்தவன். இப்போது வயது எண்பதைத் தாண்டுகிறது. நான் பிறந்த இடம் தாமரைவில். 1952 ஆம் ஆண்டின் இலங்கை மோட்டார் வீதி நில அளவைப்படத்தில் இவ்வூர் உண்டு. தற்போதைய படத்தில் இல்லை. இப்படி ஒரு பெயர் திருமலை மாவட்டத்தில் வேறிடத்தில் இல்லை. ஏனெனில் தாமரைபூத்தவில் வடிவான வம்பி சூழ்ந்த பன் நிறைந்த இருபுறக்கடல் தொடுப்புள்ள குளம் வேறிடத்தில் இல்லையே. நெய்தலும், முல்லையும், மருதமும் இணைந்த ஒரு சிற்றூர் உண்டென்றால் அது தெங்கு நிறைந்த தாமரைவில்லாகத்தான் இருக்க முடியும். முதலாம் உலகப் போரைக் கேட்டதுண்டு- கண்டதில்லை- அகதியானதில்லை. ஆனால் இரண்டாம் உலகப் போரின் (1939-45) சில கட்டங்களைக் கண்ணால் காணும் பாக்கியம் பெற்றவன்யான். திருமலைக் கடல் தளம் பிரிட்டிஷார் வசமிருந்த காலம் சீனக்குடா எண்ணெய்க்குதத்தில் யப்பானிய விமானம் (சிங்கப்பூர் மூலம்) வந்து குண்டு போட்டதும், (03.04.1942 விடியலில்) அந்த எண்ணெய் பரவிக் கப்பற்றுறைக்கடல் காடெல்லாம் 3-4 நாட்களாய் எரிந்ததும், தாமரைவில் கடலோரமெல்லாம் பிரிட்டிஷ் இந்தியப் படை நிலை கொண்டிருந்ததும் இன்றும் மனதில் பசுமையாகவே உள்ளன. ஏனெனில் அப்போது நான் முப்பது வயது இளைஞன். இன்று பலர் தாமரைவில்லையே மறந்து விட்டார்கள்.



### முதலாம் இடப்பெயர்ச்சி:

அன்று எமக்குத் தொட்ட சனியன் இன்றும் விட்டபாடில்லை என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. ஏனெனில் அப்படையினரின் அட்டகாசம் (வீடுவீடாகத்திரிதல் -பார்த்தல்-கேட்டல்) தாங்கொணாமல் பக்கத்திலிருந்த ஈச்சந்தீவுக்கிராமத்தில் காடு வெட்டி குடியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. (வயற்றொழில் செய்யும் இடமான கண்டற்காடு -ஊர்த்தீவிலும் கிடந்ததுண்டு) இதுவே எமது முதலாவது அகதி இடப்பெயர்வாகும். ஆனால் இந்த அளவிற்குப் பொருட்சேதம் உயிர்ச்சேதம் அப்போது இருந்ததில்லை. இதுதான் வேறுபாடு.

பிறகென்ன, 1948இல்தான் சுதந்திரம் வந்ததாமே? அதாவது ஆட்சியந்திரம் வெள்ளையர் கையிலிருந்து நமது பேரினவாதச் சகோதரர் கைக்கு மாறியதென்பது தானே பொருள்? அதிலிருந்து நடந்த கூத்துக்களைத்தான் பத்திரிகை மூலம் (குடியேற்றத் திட்டங்கள் -அறப்போராட்டங்கள்- சத்தியாக்கிரகங்கள் -உண்ணாநோன்புகளென்று) படித்திருப்போமே? தவளையும் கத்தியதுதான் -மழையும் பெய்தது தான். கடைசியாக அறப்போர் சென்று ஆயுதப் போரில் நின்றது. சிறுபான்மையோருக்கோ மண்டையுள்ள மட்டும் சளி இருந்த வண்ணமே இருந்தது. கைமுனு- எல்லாளன் காலத்திலும் பிரச்சினைதான் என்றாலும், அடிமை நிலை இருக்கவில்லை. இது 1505இல் போர்த்துக்கேயர் காலந்தொடங்கி, 1656இல் ஒல்லாந்தர் காலத்திலும் தொடர்ந்து, 1798இல் ஆங்கிலேயர் காலத்திலும் தொடர்ந்து, இன்றும் அடிமை நிலை வளர்ந்து வந்ததேயொழியப் போனதெங்கே? '' மீளா அடிமை உனக்கே ஆளாய்' என்றே இருந்து வந்தோம். இம் என்றால் சிறைவாசம்- ஏனென்றால் வனவாசந்தானே?

### 2ம் இடப்பெயர்ச்சி:

ஆயுதப் போர் தொடர கிராமங்களில் அகதிகள் பெருகினர். 83இல் அல்லை இ.க.3ம் குடியேற்ற அகதிகள் எம் ஊர்ப்பாடசாலையில் வந்திருந்தனர். கண்டோம் - உதவினோம்- நாம் அகதியாகாதிருந்ததால். ஆனாலும் தலையிடியும், காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே சரியாகப் புரியும்? வந்தது 90 ஆனி. ,'கும்பலிலே கோவிந்தா' நாமும் அகதியானோம். முற்றாய்ப் பொருள் பண்டம், வீடு வாசல், வேலிவளவு, வயல் வாய்க்கால், ஆடு மாடு, அத்தனையும் இழந்தோம், எல்லாம் போச்சு. எதுவுமே இல்லை. இனி இழப்பதற்கு எதுவும் இல்லாதவன்தானே உண்மையான போராளியாம்? அந்நிலையில் நான் போராடத்தயார். ஆனால் இது ஆயுதப்போராச்சே? வயது போன (78) நோயாளியாச்சே நான்? கை நடுக்கம், கால் நடுக்கம், பல்லுமில்லை கண்ணும் மங்கல்! நானெங்கே தூக்குவது வேண்டாம் ''நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்'' என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளை அந்தப் பண்டிதர் அன்றுதான் சொல்லிக்காட்டினார். எனக்கென்னவோ நூல் வாசித்த பழக்கம் அது மனதில் பதிந்து விட்டது. நினைத்துப் பார்த்தேன். அது போதும். வாழ்ந்ததே போதும். கண்டதும் போதும்- கேட்டதும் போதும்- கவலையுற்றுக் களைத்ததும் போதும்! பயந்ததும் போதும்- குழிவெட்டியதும் போதும்- பொருள் புதைத்ததும் போதும் - பறிகொடுத்ததும் போதும்! இனிப் போய்விடுவதே என்போன்றார்க்குரிய வழி. ஆனால் வருங்கால நம் சந்ததியினர் இந்த மண்ணில் எப்படி வாழ்ந்து தொலையப் போகிறார்கள்? முடிகிற காரியமா? எனச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஊர் மக்களெல்லாம் ஆளுக்கொரு பக்கமாகக் காடு நோக்கிச் சென்றார்கள். 'ஆமி வருவானாம்' என்றார்கள். வண்டில்கள் உள்ளோர் முக்கிய பொருட்களை ஏற்றிச் சென்றார்கள். இதைக்கண்டு என் வீட்டுக்காரரும் புறப்பட்டார்கள். 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி-உயிர் தப்பினாற் போதும்' என்பதே மக்களின் அப்போதைய நிலைப்பாடாயிருந்தது. நான் என்ன செய்வேன்? நடந்து போவேனா? அதுவும் காட்டிலே போய்ச் செய்வதென்ன? எத்தனை நாளைக்கு? காலாட்டிய வண்ணம் கட்டிலில் சரிந்து கிடக்க வேண்டிய எனது கடைசிக்காலம் இப்படியா கழிய வேண்டும்? 'அட கடவுளே, நானென்ன தீமை செய்தேன்?' என்று வாய் விட்டுப் புலம்பினேன். 'உங்களுக்கு மட்டுந்தானா அப்பா, உலகமெல்லாம் போரும்-சாவும் அகதியுந்தானே, பார்க்கல்லையா ரி.வி.யில்? என்றான் ஒரு பொடியன். 'வாறண்டா வாங்கப்பா வண்டில்ல, நேரம் போகுது' என்றான் ஒரு வண்டிற்காரன். 'நான் கிடந்து சாகிறேன்- நீங்க போங்க' என்றேன். வீட்டார் ஏசினார் வற்புறுத்தினார், வேறு வழி தெரியவில்லை, முகத்தைச் சுழித்த வண்ணம் உடுத்த உடையுடன்- வெறுங்கையுடன் இது இரண்டாவது இடம்பெயர்வு, என்று எண்ணிக் கொண்டு மெதுவாக ஏறி இருந்தேன். வண்டில் நகர்ந்தது, மற்றோர் நடந்து மூட்டை முடிச்சுகளுடன் கதிர்காம யாத்திரை மாதிரி வந்தனர்.

### அகதி யாத்திரை:

கட்டையாறு கழிந்தது. வீடும், வளவும் மறைந்தன. நினைவு மட்டும் நின்றது. முடக்குத் தோட்டம்- தாமரைவில் கண்டலடியூற்று என்ற இடங்களெல்லாம் தாண்டி வண்டிலை 'றோதை' மணலில் புதைய 'பாவம்' செய்த மாட்டுப்பிறவிகள் இழுத்துச் சென்றன. உப்பாற்றுத் துறை வந்தது. நூற்றுக்கணக்கான சனம். வள்ளமும், பாதையும் துறையைக் கடக்க உதவின. அப்பால் உப்பாற்றுத் தோட்டம் றப்பர்க் காடு காரைவெட்டுவான் என்றெல்லாம் 'தேங்காய்ப் பூவும், பிட்டுமாய்' வாழும் தமிழ் பேசும் மக்களாகிய தமிழர் முஸ்லீம்களின் சிற்றூர்கள் பல தாண்டி 'மயிலப்பன் மேனை'யை வந்தடைந்தோம். அங்கிருந்த இஸ்லாமியர் வழக்கம் போல் இடந்தந்து ஆதரித்தனர். ஆனாலும் அவர்களிடமும் ஒரு வித அச்ச உணர்வே மேலோங்கியிருந்தது. சிலர் இருந்தனர். பலர் வேறிடம் போய் விட்டனர். சிலர் கொண்டு போன அரிசி- சாமன்கள் பலருக்கும் உதவியதால் ஏதோ ஒரு நேரக் கஞ்சி மூலம் நாட்களை நகர்த்தினோம். ஆனால் இரவில் தூக்கம் வராது. ஒரே பயந்தான். இளைஞர் காடு பற்றைகளுட் போய் விடுவர் தூங்க. தூரத்தில் சத்தம் கேட்டால் ஆமி வரலாமென்ற பயம். கப்பல் குண்டு போடலாமென்ற பயம், 'ஷெல்' அடி விழலாமென்ற பயம். இப்படி இரவும், பகலும் பயத்துடன் மூன்று திங்களைக் கடத்தினோம். எங்கள் ஈச்சந்தீவு- ஆலங்கேணிஊர்களெல்லாம்'ஆமியாம்- களவுகளாம்- எரிப்புகளாம் ஒருவருமில்லையாம்' என்று சொல்வதைக் கேட்டுப் பெருமூச்சு விடுவோம். செய்திகளைத் தவறாமல் கேட்போம். வெளிப்பு வருமா? எனப் பார்ப்போம். ஒரே இருளாகவே தெரிபடும். கவலையில் மூழ்குவோம். நடுக்கடலில் கப்பலில் கவலைப்பட்டோர்க்குக் 'கொலம்பஸ்' ஆறுதல் சொல்லியது போல் 'இறைவன் இருக்கிறான் -கவலைப்படாதீங்க' என்று சிலர் அறிவுரை சொல்வர். யாவையுங்கேட்டுக் கொண்டு நான் மவுனமாவேன். சுடலைப்பிட்டி- தளவாய் -மணலாறு. ஊர்க்குளம்- வெல்லந்தாங்கி -வைராவெளி -பொன்னாவரங்குடா- பொட்டல் குளம்- இறவடிச்சேனை... என்று அங்கிங்கெனாதபடி எங்குமே அகதிகள் தான். எனக்கே வரவர நோய் அதிகரித்த வண்ணமிருந்தது. உள் வருத்தமே அதிகம்.

### முதலாம் அகதி முகாம்:

இப்படி இருக்கையில் பலர் ஆலங்கேணி அகதிமுகாம் வந்து விட்டதாகவும், காட்டுப் பகுதியிலுள்ளோரும் விரைவில் வராவிடில் குண்டுகள் பொழியப்படும் என்றும், வந்தோர்க்கு ஒரு தீங்கும் செய்வதில்லை என்றும் 'ஆமி' அறிவித்ததாகக் கூறியது கேட்டு மேலும் பயம் அதிகமாகியது. வேறு வழி தெரியாததால் 'எது நடந்தாலும் நடக்கட்டும்' என்றெண்ணிக் கொண்டு சிலர் இருக்க பலர் மூட்டை முடிச்சுகளுடன் 'விதியே விதியே.... என் செயக் கருதி இருக்கிறாயடா?' என்ற பாரதியின் கேள்வியோடு வயல் -வரம்பெல்லாம் நடந்து, களைத்து, கொய்யாம் புளித்துறையையும் தாண்டி வந்து, அன்றிரவைப் பூவரசந்தீவு மாமரச் சருகின் மேல் சருகுண்ணி- எறும்புகளுடன் கழித்துவிட்டு மறுநாள் புறப்பட்டு, நடந்து உப்பு நீரோடை, கரைச்சை எல்லாந்தாண்டி பயத்துடன் ஆலங்கேணிப் பாடசாலை அகதிமுகாம் வந்தடைந்தோம். சில நாள் பட்டினி. சிலநாள் ஒரு வேளைச் சமையல். தற்காலிக மலசலகூடத்தோட்டித் தொண்டு - கரைச்சையில் கழிப்பு- அயல் கிணற்றில் கழிப்பு- தூக்கத்தில் கனவு- தாவாரப்படுக்கை- செஞ்சிலுவைச்சங்கப் பாத்திரம், பாய், உடுப்பு, மருந்து -ஆமி நிவாரணம் என்று சிலவாரங்கள் கழிந்திருக்கும். மட்/காத்தான் குடிச் சம்பவத்தின் பின், கட்டைப்பறிச்சான் சம்பவம் நடந்த மறுநாள் சிலரைத் தேடி ஆமி உதவியுடன் ஊர்க்காவற் படையினர் சிலர் அகதி முகாமுக்குள் நுழைந்ததும், பல இளமட்ட அப்பாவிகளை வில்லங்கமாகப் பிடித்து ஜீப்பிலேற்றிப் பெண்கள் அழஅழ தெரியா இடம் கொண்டு சென்றதும், இதுவரை அவர்கள் இல்லாமற் போனதும், சில கோடரிக்காம்புகள் காட்ட முனைந்து மீண்டதும் என்றும் எவர் நெஞ்சையும் விட்டகலாத நிகழ்ச்சிகளேயாகும். இவற்றயெல்லாம் கடைசிக் காலத்தில் கண்டு கவலையோடு போகுமாறு பிரமன் என் தலையில் எழுதிவிட்டான் போலும்? இவ்வாறு சில திங்கள் கழிந்தது.

### இரண்டாம் அகதி முகாம்:

திடீரென்றொருநாள் மாலை 'ட்றக்கு'களிலும், 'பஸ்'களிலும் சாமான்களுடன் ஆட்களையும் அடுக்கி ஏற்றிக் கொண்டு வந்து கிண்ணியாத்துறையிலும் ஒரு தெரிவு வைத்து அப்பாவிகள் சிலரைப்பிடித்துக் கொண்டு மீதிப் பேரைக் கொண்டு போய் சீனக்குடா - ''கிளப்பன்பேக்' பிரிட்டிஷ் காலத் தகரக் களஞ்சியக்கிட்டி அகதிமுகாம்களில் விட்டனர். 11ஆம் இலக்க 'ஓட்டைக் கோல்' எனக்குக் கிடைத்தது. உள்ளே கம்புகள் நட்டுச்சீலைகளால்அறைகள்தெரித்து- வழிகள் விட்டு, ஆரவாரம் அடங்கி-'லைற்'றுகள்அணைத்து- வெளியாரின் 'ரேப்' நின்றபின், புகைக்குள் மழை ஒழுக்கினுள்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# • பொருளாதாரத் தடை நீக்கம் • போர் நிறுத்தம் • பேச்சுவார்த்தை • தீர்வும் சமாதானமும்

## சமாதான வழிபற்றி சில குறிப்புகள்

வடக்கின் மீது நான்கு வருடங்களாகக் கவிந்திருந்த போர் மேகங்கள் சந்திரிகாவின் வருகையுடன் திடீரென அகலத் தொடங்கியுள்ளன. இதுவரை காலமும் வாடியிருந்த யாழ்.மக்களுக்குப் பல பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது. ஒரு மூடை ஐயாயிரத்திற்கு விற்கப்பட்ட சீமெந்து இனி விலை குறையும் என எதிர்பார்க்கலாம்.

எனினும் கிளாலி தடை வலயமாக இன்னும் இராணுவத்தால் கருதப்படுவதால் வவுனியவினூடாகத் தாராளமாகக் கொண்டு செல்லப்படும் பல பொருட்கள் யாழ்.குடாநாட்டை அடையும் போது மீண்டும் கடும் விலைக்கு விற்கப்பட்டாலும் அதிசயப்படுவதற்கில்லை. எனவே வடபகுதி மக்கள் எப்போ பிரயாணத் தடைகள் நீங்கும் என ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். இதன் காரணமாக இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகளை யாவரும் ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர். சந்திரிகாவும் - புலியும் வடபகுதி மக்களின் நலனைத் தம்பிரதான கடப்பாடாகக் கொண்டு பேசி ஒரு நல்லிணக்கம் காண்பர் என்பதும் பலரின் அவா.

மனிதத் தன்மையற்ற இப்போரின் காரணமாக உயிர்களையும் உடமைகளையும் இழந்து பரிதவிக்கும் தமிழர் வரப்போகும் ஒரு சமாதானம் பற்றிக் கற்பனைகளை வளர்த்துக் கொள்வது இயல்பே. பொருளாதாரத் தடையின் ஒரு பகுதி நீக்கம் அதன்பின் போர் நிறுத்தம். அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை, இறுதியில் தீர்வும் சமாதானமும். இது எளிய அத்துடன் இனிக்கும் கணக்கு, இந்தக் கணக்குப் பிழைத்தால் வேதனை. எனவேதான் இச்சந்தர்ப்பத்தில் இக்கணக்கில் இருக்கக்கூடிய சிற்சில சிக்கல்களை ஓரளவேனும் கோடிட்டுக் காட்டினால் சமாதானத்தை நோக்கிய பாதை மேலும் தெளிவாகப் புலப்படும் என எண்ணுகின்றேன்.

இதில் முதலாவது, இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய காலத்தில் இருந்து படைகள் தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து மக்கள் பெருவாரியாக வெளியேறி அகதிகளாக முகாம்களிலும், தெரிந்தவர், உறவினர் வீடுகளிலும் இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர். இவர்களை இருவகையினராகப் பிரிக்கலாம். ஒன்று தாமாக வெளியேறியவர்கள். இரண்டு இராணுவக் காரணங்களுக்காக அரச படைகளினால் வெளியேற்றப்பட்டவர்கள். இதில் யாழ் குடாநாட்டில் உள்ள அகதிகள் பெரும்பாலும் முதலாவது வகையைச் சார்ந்தவர்களாகவும், கிழக்கில் உள்ளவர்கள் பெரும்பாலும் இரண்டாவது வகையைச் சேர்ந்தோராயும் உளர்.

91இல் ஆனையிறவு முகாமைப் புலிகள் தாக்கிய பின்பு இராணுவத்திற்கு வடக்கைப்பற்றி ஒரு முக்கிய உண்மை புலனாயிற்று. அதாவது தன்னுடைய பிரதான உணவு, எரிபொருள், தளபாட மற்றும் ஆட்பல வழங்கல் மார்க்கங்கள் (Supply Lines) பெரும் ஆபத்துக்குள்ளாகி விட்டன என்பதே அது. இரண்டாம் ஈழப்போரில் கொக்காவில் முகாமின் வீழ்ச்சியுடன் தரைமார்க்கமாக எந்த வழங்கல் பாதையையும் வடக்கில் பாதுகாப்பாகப் பேண முடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்ட இராணுவம், ஆனையிறவுச் சமரின் பின் தனது வட பகுதித் தளங்களுக்கு ஆகாய, கடல் மார்க்கமான வழங்கல் பாதைகளை எங்ஙனமாயினும் திறந்து வைத்திருப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியது. இதன் காரணமாக பலாலியிலும், ஆனையிறவிலும் கடல் ஆகாய தொடர்பு மார்க்கங்களை பாதுகாப்பதற்கான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


பலவேகய இரண்டு என்னும் நடவடிக்கையூடாக ஆனையிறவு முகாமிற்கு கடல் வழித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. இதனால் வண்ணான் குளம், கட்டைக்காடு ஆகிய சிறு கிராமங்கள் அழிந்தன. பின்னர் அம்முகாமின் இலங்குவானூர்தி இறங்கு தளம் புலிகளின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகாத அளவு தூரத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக இயக்கச்சி வரை ஒரு விஸ்தரிப்பு நடைபெற்றது. இதன் காரணமாகவும் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இனி பலாலி - கே.கே.எஸ் ஆகாய -கடற்படை இணைத்தளத்தை எடுத்துக் கொள்வோமாயின் கொப்பேகடுவவின் காலத்திலேயே இதன் இரு பிரதான வழங்கல் மார்க்கங்களையும் பாதுகாப்பதற்காக பாரிய விஸ்தரிப்பு வேலைகள் நடந்ததைக் காணலாம். புலிகளின் எறிகணைத் தாக்குதலிலிருந்து பலாலியின் விமான ஓடுபாதையைப் பாதுகாக்கவும், கடற்புலிகளின் ஆதிக்கத்திலிருந்து பலாலியின் இன்றைய உயிர் நாடியான கடல் வழிப்பட்ட வழங்கல் மார்க்கத்தைப் பாதுகாக்கவும் என பழைய காங்கேசன்துறைத் தொகுதியின் சனத்தொகை நிறைந்த பெரும்பகுதி இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. இதில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது யாதெனில் ஆகாய கடல்வழி வழங்கற்பாதைகள் (Supply Lines) ஆபத்திற்குள்ளாகும் பட்சத்தில் வடக்கின் பிரதான சிறிலங்கா அரச படை முகாங்கள் புலிகளிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்பதே.

ஒரு இராணுவவீரன் சண்டையில் ஈடுபட வேண்டுமாயின் அவனுக்கு ஒரு நாளைக்குச் சராசரியாக இரண்டு கிலோ உணவும், நீரும், பல கிலோ எடையுள்ள ரவைகளும் அனுப்பப்பட வேண்டும். அத்துடன் போரில் ஈடுபடும் வாகனங்களுக்குரிய எரிபொருள், காயம்பட்டவர்களை மீட்டுச் சிகிச்சை செய்வதற்குரிய ஆட்கள், மருந்துகள் என பல்வேறு விடயங்களும் போர் முனைக்குத் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். இதை ஒரு இராணுவத்தின் போர் வழங்கற் சக்தி (Logistical Capability ) என்பர். எனவே போரின் வரலாற்றை நாம் நோக்குவோமாயின் ஆகாயத்திலிருந்து எதிரியின் வழங்கற் பாதைகளையும், வழங்கற் சக்தியையும் அழிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு படைத் தளபதிகள் செயல்பட்டதையும், அதைத் தடுக்க எதிரிகள் தம்மாலியன்ற முயற்சிகளில் ஈடுபட்டதையும் நாம் காணலாம்.

எனவே இலங்கை இராணுவம் வடக்கில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அதன் பிரதான வழங்கற் பாதைகளின் பாதுகாப்பு இன்றியமையாதது எனில் அந்தப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் கைப்பற்றப்பட்ட பகுதிகள் தொடர்ந்தும் இராணுவத்தின் கைகளில் இருப்பதும் (இராணுவத்தின் பார்வையில்) தவிர்க்க முடியாததே.

அங்ஙனமாயின் இப்பகுதிகளினின்றும் வெளியேறிய மக்கள் அங்கு மீளக்குடியமர்தல் என்பதும் சாத்தியமற்றதே.



இங்குதான் இருக்கிறது புலிகள் - சந்திரிகா சமாதானப் பேச்சுக்களின் பிரதான தடங்கல்.

ஊறணி, மயிலிட்டி, தையிட்டி, இளவாலை, காங்கேசன்துறை, சேந்தான்குளம், கீரிமலை, குரும்பசிட்டி, அளவெட்டி, தெல்லிப்பழை, கட்டுவன், வசாவிளான், வறுத்தலைவிளான் , மாவிட்டபுரம், பண்டத்தரிப்பு, புன்னாலைக் கட்டுவன் என யாழ் குடாநாட்டின் வட மேற்குப் பகுதியிலிருந்தும் இயக்கச்சி, கட்டைக்காடு, வண்ணான் குளம் என அதன் தென்கிழக்கிலிருந்தும் இராணுவத்தின் மேற்குறிப்பிட்ட குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் காரணமாக வெளியேறிய மக்கள் 42,599 பேர் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தினுள் அகதிகளாக உள்ளனர். 9723 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 188 அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் மீளக்குடியமர்வு என்பது எந்த ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையிலும் புலிகளால் தவிர்க்க முடியாத ஒரு அரசியல் சமூகப் பிரச்சினையாகும்.

புலிகளுக்கு எவ்வாறு இது ஒரு தவிர்க்கமுடியாத ஒரு பிரச்சினையோ அதே போல இராணுவத்திற்கும் வடக்கில் தனது வழங்கல் பாதைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது இன்றியமையாத ஒரு விடயமாகும்.

இதை விடச் சிக்கல் கிழக்கில் உண்டு. இராணுவம் கிழக்கு மாகாணத்தில் அடைந்த முன்னேற்றங்களுக்கு ஒரு பிரதானமான காரணியாக தன்னுடைய Counter- insurgency program ஐ கருதுகிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கரந்தடிப்படைகளின் வழங்கற் பாதைகளையும் வழங்கல் மூலங்களையும் (Supply Sources) பலவீனப்படுத்தி அழித்தலாகும். இதன் அடிப்படையில் கெரில்லாக்கள் நடமாடும் பகுதிகளில் விவசாயத்தைக் கட்டுப்படுத்தவும், குடியிருப்புகளை இல்லாதொழிப்பதும் நடைபெறும். திருமலையின் வடக்கில் தென்னமரவாடி, திரியாய், கும்புறுப்பிட்டி ஆகிய தமிழ் கிராமங்களும் அவற்றிற்குரிய விவசாய நிலங்களும் இன்று மனித சஞ்சாரமற்றுக் கிடப்பது இதனாலேயாம் என்றறிக. இது போல மட்டக்களப்பில் வடமுனைப் பகுதியிலும் (புலிகள் நடமாட்டம் உள்ள இப்பகுதியில் 60,000 ஏக்கர் நெற்காணி செய்கை பண்ணுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.) அம்பாறையில் கஞ்சிகுடிச்ச ஆற்றுப்பகுதியிலும் பல நெற்காணிகளும் கிராமங்களும் மனிதரின்றிக் கிடக்கின்றன. இதனால் இடம் பெயர்ந்த மக்கள் கிழக்கில் பல்லாயிரக்கணக்கானோர் உளர். அவர்களை மீளக்குடியமர்த்தி, பயிர்ச்செய்கையும் மீண்டும் ஆரம்பிக்குமேயானால் கெரில்லாக்கள் மீண்டும் இவர்கள் வாழும் பகுதிகளை பலம் வாய்ந்த தளப்பிரதேசமாக்கி விடுவார்கள் என இராணுவம் தீவிரமாக நம்புகிறது. தமது வெற்றிகரமான Counter insurgency program பாழாகி விட அனுமதிக்க முடியாது என இராணுவம் கூறுவது கேட்கிறது.

கிழக்கில் குடிபெயர்ந்தார்வர்களுடைய பிரச்சினையையும், செய்கை பண்ணத் தடை செய்யப்பட்டுள்ள பல்லாயிரம் ஏக்கர் நெற்காணிகளின் பிரச்சினையையும் புலிகள் எந்த ஒரு சமாதானப் பேச்சு வார்த்தையிலும் தவிர்க்க முடியாது.

இச்சிக்கலை தீர ஆலோசித்து மக்கள் நலனை பிரதானமாகக் கொண்டு அணுக வேண்டியது இரு தரப்பினரதும் கடப்பாடாகும்.

சமஷ்டியா ஒற்றையாட்சியா என்பன போன்ற விடயங்களைப் பற்றி சமாதான நிபுணர்கள் பின்னர் சிந்திக்கட்டும்.

டி. சிவராம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிளாலி : மரண

## யாழ்ப்பாண தீபகற்பத்தை ஏனை
## தொடர்புபடுத்தும் ஒரேயொரு வழ

• அன்பு • மாதவன் பட

யாழ்ப்பாண மாவட்டத்தைத் தாண்டி வந்தால் அடுத்து இருப்பது கிளிநொச்சி மாவட்டம். இரு மாவட்டங்களையும் பிரித்து நிற்பது ஆனையிறவு இராணுவ முகாம்.

11ம் திகதி சாமம் ஒரு மணிக்கு கிளிநொச்சி நகரில் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்கின்றன. அடிக்கடி குண்டு வெடிக்கிற சத்தம். கிளிநொச்சி நகரம் அதிர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு மணித்தியாலத்தின் பின் ஹெலியின் சடசடப்பு. சாமத்து இருட்டில் சிவப்பு சிவப்பாகக் குண்டுகளைப் பொழிகிறது. தொடர்ந்தும் நகரம் அதிர்ந்து கொண்டிருக்கிறது.

மக்கள் திகைத்து விழிக்கிறார்கள்? என்ன நடந்தது? என்கிற பதை பதைப்பு.

அது மழைக்காலமல்ல, இடி முழங்குவதற்கு. நகரத்தில் வயல் இல்லை. யானைகள் வருகின்றன, அதனால் வெடி கொளுத்திப் போடுகிறார்கள் என்று கூறுவதற்கு.

விடிகிற போது மக்களுக்குப் புரிந்து விட்டது. **யுத்தம் ஆரம்பமாகி விட்டது.** இது இரண்டாவது யுத்தம். 'சொல்லாமல் கொள்ளாமல்' வந்த யுத்தம்.

யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தை ஏனைய நிலங்களுடன் தொடர்புபடுத்துகிற ஆனையிறவு இராணுவ முகாம் அடைபட்டு விட்டது.

மக்கள், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே வரவும் யாழ்ப்பாணத்திற்கு உள்ளே போகவும் முடியாத சூழல்.

எவ்வளவு காலத்திற்குத் தான் தாக்குப் பிடிக்க முடியும்?

ஏற்கனவே இருந்த சங்குப்பிட்டி கேரதீவுப்பாதையைப் பயன்படுத்தினார்கள். அப்பாதையில் சிறிது தூரம் கடல். கடலைத் தாண்டுவதில் பல சிக்கல்கள், சிரமங்கள்.

புழுதி பறக்கிற இன்னொரு பாதை அவர்களுக்குத் தென்பட்டது.

பளை தாண்டி, இயக்கச்சி தாண்டி, அனையிறவு செல்லாமல், கிழக்குப் பக்கமாக நாவல் மரங்கள் நிறைந்த ஒழுங்கையில் இறங்கி அரை மணித்தியாலம் சைக்கிள் ஓடினால் கொம்படி வெளியால் பயணப்படலாம். கண்டாவளை கண்டு, முரசுமோட்டையை மிதித்து, பரந்தன் சந்தி ஏறி தெற்குப் பக்கம் நிமிர்ந்தால் கிளிநொச்சி நகரம், எரியுண்ட சந்தைக் கட்டிடம்.

இதுவும் நிலைக்கவில்லை. ஆவணியில் தூறி, புரட்டாதியில் மழை பெய்து, கார்த்திகையில் பெரு வெள்ளம் போட்ட போது, கொம்படி வெளி வெள்ளக் காடாகிச் சுண்டிக்குளத்துடன் தொடுத்தது.

இனிக் கடக்க வள்ளம் வேண்டும். இரண்டு மணித்தியாலமும் வேண்டும்.

இதுவும் சரியில்லை என்றான பிறகு யாழ்ப்பாணத்திற்குப் போக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே வர இன்னொரு பாதை கண்டு பிடிக்கப்பட்டது.

அதுவே கிளாலி. மரணப்பொறி என்கிறார்கள் மக்கள்.

ஆழ்கடலில் தோணியோட்டம்; அப்புறம் நிலம். இது சுலபமான வழி என்றனர் விஷயம் தெரிந்தவர்கள்.

ஆனால் கிளாலிப் பாதைக்கு 'மவுசு' வந்தது பிறகு.

பூநகரியை இராணுவம் கைப்பற்றியது. சங்குப்பிட்டி கேரதீவுப் பாதை இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் வந்தது. இது 1991 ஒக்ரோபரில் நடந்தது.

1992இன் பிற்பகுதியில் வெற்றிலைக்கேணியில் இராணுவ முகாம் அமைத்து, ஆனையிறவுடன் தொடர்புபடுத்தி கொம்படி வெளி, ஊரியன் பாதையை இராணுவத்தினர் தம் வசப்படுத்தினர்.

இதற்கெல்லாம் பிறகு இருந்த ஒரேயொரு மார்க்கம் கிளாலிப் பாதை. தெரியும், கிளாலி மரணப் பொறி என்பது - கிளாலி கூறும் கதைகள் நூறு. ஆயினும் வேறு மார்க்கந் தான் என்ன?

வாழவேண்டும்; வயிற்றுப்பாட்டைப் பார்க்க வேண்டும். அதற்காகச் சாவதில் என்ன தப்பு?

புலிகள் இதனால் பாதிக்கப்படவில்லை. கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை என்றால் என்ன, ஊரியான் - கொம்படிப் பாதையென்றால் என்ன, இப்போது கிளாலி என்றால் என்ன, அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலட்சக்கணக்கான வரிப்பணமும் கிடைத்துக் கொண்டே வந்தது.

பாதிக்கப்பட்டது யார்? ஊர் ஊராக நாடு நாடாக, கண்டம் கண்டமாக, தேசம் தேசமாக எல்லாப் போரிலும், எல்லா ஒப்பந்தங்களிலும், எல்லாச் சிதைவுகளிலும் யார் பாதிக்கப்பட்டார்களோ அவர்களே தான் இங்கும் பாதிக்கப்பட்டார்கள். அதே அப்பாவிப் 'பொதுமகர்'கள் தான்.

### தற்சமயம் கிளாலி எப்படி?

உலகப்பந்தில், பாதிப்படைகின்ற மக்களில் அனுதாபம் கொள்வோர்க்கு சொர்க்கத் தீவின் வடபகுதியில் கிளாலி என்ற இடமும், ஏரியும் இருக்கின்றது என்பது தெரிய வந்துள்ளது. இந்தக் கிளாலி ஏரிக்கடலின் மூலம் பிரயாணத்தை மேற்கொண்ட பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அரசபடையினரால் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

அந்தோ, கிளாலிக் கடல் செந்நிறமாகக் காட்சியளித்தது.

இந்தக் கிளாலி ஏரிக்கடல் மூலம் மக்கள் எவ்வாறு பிரயாணம் மேற்கொள்கின்றனர்?

தற்போது விடுதலைப்புலிகள் வாரத்தில் மூன்று நாட்கள் சனி, செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் கிளாலி ஏரியினூடான படகுச் சேவையை நடாத்துகின்றனர். இதனால் கொழும்பில் இருந்து வெள்ளி, திங்கள், செவ்வாய் ஆகிய மூன்று நாட்களும் பெரும் தொகையான பிரயாணிகள் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். இரவு பிரயாணத்தை மேற்கொள்கின்றவர்கள் காலை தாண்டிக்குளத்தை வந்தடைகின்றனர். தாண்டிக்குளத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளில் பிரயாணிகள் அதிகாலையில் இருந்து 9 மணிவரை கால் கடுக்க நிற்க வேண்டும். காலைக்கடனைக் கழிப்பதற்கு போதிய வசதிகள் ஏதும் இங்கு கிடையாது. சுமார் 9 மணிபோல இராணுவத்தினர் பொலிசார் தமது சோதனைகளை மேற்கொள்வார்கள். சோதனைகளின் போது இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு குறைவில்லை. தற்காலிக கொட்டகைகளில் இருந்து குறிப்பிட்டளவு பிரயாணிகள் சோதனைக்கூடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவினர் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு கொண்டு செல்லக் கூடாது என பல பொருட்களின் பட்டியலை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாமில் சோதனைகளை மேற்கொள்ளும் இராணுவத்தினர் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவினரின் கட்டுப்பாட்டில் இயங்குவதாகத் தெரியவில்லை. இங்கு சோதனையை மேற்கொள்ளும் இராணுவத்தினர் தங்கள் தங்கள் எண்ணத்தின்படி சோதனையை மேற்கொள்வதுடன் தடை செய்யப்படாத பொருட்களையும் பொதுமக்களிடமிருந்து பறித்தெடுப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. பற்றரிகளைக் கண்டால் 'சுடு தண்ணீரை பருகிய நாய்களைப் போல்' காட்சியளிக்கும் இந்த இராணுவத்தினர் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவினரிடமிருந்து அனுமதி பெற்று பற்றரிகளை பறித்தெடுப்பதுடன் சில வேளைகளில் அடி, உதையும் கொடுத்து அனுப்புகின்றனர்.

தாண்டிக்குளம் இராணுவத்தடை முகாமில் இதற்கென அமைக்கப்பட்ட மேடையில் பிரயாணிகளின் சகல உடமைகளதும் ரெவலிங் பாக் (Traveling Beg) இல் இருந்து முழுமையாக கீழே கொட்டப்பட்டு சோதனை மிகத்தீவிரமாக நடைபெறும். வெளிநாடுகளில் இருந்து வரும் பிரயாணிகளிடமிருந்து இராணுவத்தினர் பல பெறுமதியான பொருட்களை அபகரிப்பது அடிக்கடி நடைபெறும் சம்பவம்.

இந்தத் தடைமுகாம் பரிசோதனை முடிவடைந்த பின்னர் இ.போ.ச. பஸ்களிலும் தனியார் பஸ்களிலும் மக்கள் தமது வடபகுதிக்கான பிரயாணத்தை ஆரம்பிக்கின்றனர். தனியார் பஸ்களில் ஆக, மாடுகளைப் போல மக்கள் அடைக்கப்படுவதுடன் குறைந்தளவு தூரத்தைக் கடப்பதற்கு கூடியளவு கட்டணம் அறவிடப்படுகின்றது. தனியார் பஸ் கண்டக்டர் தனது விருப்பத்திற்கு இணங்க பொதிகளுக்கும் பிரயாணிகளான மக்களுக்கும் கட்டணத்தை அறவிடுகின்றனர்.

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து பஸ்களில் இருந்து இறக்கிவிடப்படும் மக்கள் இராணுவத்தினரோ விடுதலைப்புலிகளோ உரிமை பாராட்டாத சுமார் 3/4 மைல் கரடு முரடான மேடும் பள்ளமும் உள்ள வீதியை அத்துவான வெளியை மூட்டை முடிச்சுகளுடன் கால் நடையாக கடக்க வேண்டும். பின்னர் விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தில் உள்ள பிரதேசத்தை மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் சென்றடைகின்றனர். இங்கு விடுதலைப்புலிகளினால் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்ட துவிச்சக்கர வண்டிக்காரர்கள் காத்திருந்து மக்களை விடுதலைப் புலிகளின் சோதனை முகாமிற்கு அழைத்துச் செல்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் சோதனை முகாமில் மக்களின் அத்தியாவசி தேவைகளான இருப்பிடம், குடி தண்ணீர் போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை. குறைந்தளவு

மக்கள் த...
னையை மேற்...
மான கொட்டன...
பட்டுள்ளன. இ...
ளில் தங்குகின்ற...
யும் அதிகம் ஆ...
லிகளின் தீவிர...
ஆண் பெண் ...
கொள்ளப்படும்...
மக்களின் பொ...
றாக நிலத்தில் ...
அமைக்கப்பட்ட...
கொட்டப்படும்...
ரொபி, கண்...
பொருட்கள் ...
னால் பறிமுதல்...
றன. பரிசோத...
பின்னர் மக்க...
ணத்தை மேற்...
பானம், ரொ...
போன்ற பொரு...
டுத்தவர்கள் ...
ளின்ரை ஆட்சி...
ஒரு போத்த...
கொண்டு போ...
யாது. ஆனால்...
வதும் கடை ...
கிடக்குது. ஏன்...
இப்படி மு...
பலர்.

''என்ரை பிள்ள...
யாகக் கொண்...
ளையும் கண்...
விட்டினம். ந...
ளைக்கு கொண்...
ரத்திற்காகக்
போகேல்லை





● படகுக்காக காத்திருப்பு........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கிளாலிக் கரையினிலே........

ப்பொறி

நிலங்களுடன்

ங்கள் :அன்பு

டியது சோத
ாள்ளக் கூடியது
ளே அமைக்கப்
ால் மர நிழல்க
ங்களின் தொகை
ம். விடுதலைப்பு
ா பரிசோதனை
களினால் மேற்
இங்கும் பொது
ள் யாவும் முற்
லது அதற்கென
மேடைகளில்
மதுபானம்,
ாஸ் போன்ற
தலைப்புலிகளி
செய்யப்படுகின்
முடிவடைந்த
தமது பிரயா
ர்கின்றனர். மது
கண்டோஸ்
ளைப் பறிகொ
துதான் பெடிய
ருந்துக்குக் கூட
சாராயத்தைக்
ஙகளால் முடி
ழ்ப்பாணம் முழு
டியாக சாராயம்
அநியாயம்?''
முணுப்பவர்கள்

கு நான் ஆசை
போன ரொபிக
சையும் பறித்து
என்ரை பிள்
போறன், யாவா
கொண்டு
டு எவ்வளவு

கெஞ்சியும் அந்தப் பெட்டையள் தரமாட்டன் எண்டு விட்டாளவை. இவைக்கும் ஆமிக்காரனுக்கும் என்ன வித்தியாசம்?'' என்பார்கள் இன்னும் பலர்.

அந்தக் காட்டிலிருந்து எப்போதோ இருந்து விட்டுப் புறப்படும் பஸ். கொளுத்தி எறிக்கிற வெயில். சீற் பிடிக்கிற அவசரம்; பிடித்த சீற்றை விடக்கூடாது என்கிற ஆதங்கம். வியர்வையில் தெப்பமாக நனைந்து பஸ்ஸிற்குள் மணிக்கணக்காக இருத்தல். வியர்வை நசநசப்பையும், வெக்கை எரிச்சலையும் தாங்காது குழந்தைகள் வீரிடும். கலைந்த கொண்டையும், வாடிய முகமுமாக சலித்துப்போன பெண்கள்.

சேதமடைந்த ஆசனங்களைக் கொண்ட பஸ் நினைத்த போது புறப்படும் ஆசனங்களில் நெருங்கி இருந்தும். நெருங்கியடித்து நின்றும் மக்கள் பயணப்படுவார்கள். என்ன இனம், என்ன நிறம் என்று கூற முடியாத ஒரு வகைப் புகையைக் கக்கிக் கொண்டு பஸ் மெல்ல மெல்லப் புறப்படும். அடிக்கடி வீதிகளில் நின்று நின்று பயணத்தைத் தொடரும்.

முறிகண்டிப் பிள்ளையார் கோயில் வர நிம்மதி. தேங்காய் உடைக்க முடியாது. தேங்காய் விலை. கற்பூரம் எரிக்க முடியாது. கற்பூரம் இல்லை. உடைபடுகிற தேங்காயும், ஓங்கி எழுகிற கற்பூரத்தீயும் நெஞ்சிலாடும். விபூதி அப்பி, கட்டையைக் கல்லில் தேய்த்துச் சந்தனம் பூசி, 'பிள்ளையாரப்பனே' என்று கும்பிட்டு பஸ் ஏற, புலிகளின் ஹொட்டல் ஒன்றை பஸ் அடையும்.

சாப்பிட்டான பிறகு, கொஞ்சம் ஆறி பஸ் ஏற கிளிநொச்சி தாண்டும் படகில் பிரயாணத்தை மேற்கொள்ளப் போகின்ற சாமிப்புலம் எனும் இடத்தில் பஸ் தரைதட்டும்.

சாமிப்புலம் படகுச்சேவை நடைபெறும் தினங்களில் மட்டும் மிகவும் கலகலப்பாக இருக்கும். இங்குள்ள தேனீர்க்கடைகளில் சனநெருக்கடி அதிகமாகக் காணப்படும். இதனால் பெரும் கியூ வரிசையில் நின்றே பொருட்களை வாங்க வேண்டிய நிலை ஏற்படும். சாமிப் புலத்தில் விடுதலைப்புலிகளினால் பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் வந்து தங்க வேண்டிய இந்த இடத்தில் தரிப்பிடம், மலசல கூடம், குடி தண்ணீர் போன்ற வசதிகள் இல்லையென்றே கூறலாம். அவ்வளவு தூரம் வசதிகள் இல்லை. ஆண்கள், பெண்கள் என வகைப்படுத்தப்பட்ட மலசல கூடத்தின் பக்கம் போகவே முடியாது. அவ்வளவு தூரம் துர்நாற்றம் வீசும்.

சாமிப்புலத்தில் இருந்து படகுகளில் கிளாலிக்கரையை அடைவதற்கு முதலில் டிராக்டர்களில் பிரயாணம் செய்வதற்கு டிக்கற்றுகள் விநியோகிக்கப்படும். இதுவும் ஒரு வகையில ஊழல என்று கூற வேண்டும். அவ்வளவு தூரம் டிக்கற் விநியோகிப்பவர் தனக்கு விரும்பியவர்களுக்கு பின் கதவால் முதலில் டிக்கற்றுகளை வழங்கி முதல் டிராக்டரில் அனுப்பி வைப்பார். இப்படி ஒருவாறு டிக்கற் பெறுபவர்களும் மற்றவர்களும் டிக்கற்றுகளை பெற்று சாமிப்புலத்தில் இருந்து டிராக்டர்கள் மூலம் படகுச் சேவை நடைபெறும் இடத்துக்கு கொண்டு போய் சேர்க்கப்படுகின்றனர்.

அங்கும் ஒரு நீண்ட கியூவரிசையில் படகுகளில் ஏறுவதற்கு காத்திருக்க வேண்டும். இரவு நேரத்தில் நடைபெறும் இந்த அடிக்கடி இடம்பெயர் சேவையின் போது பணத்தை, பொதிகளை பறிகொடுத்து பலர் அலைந்து திரிவார்கள்.

கியூ வரிசையில் நின்று ஒருவாறு டிக்கற் பெறும் இடத்துக்கு சென்றால் விடுதலைப்புலிகளினால் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் பொதிகளை தூக்கிப் பார்க்காமல் தமது எண்ணப்படி கட்டணத்தை அறவிடுகின்றனர். ஏதும் கதைத்தால் ''நீ இன்றைக்கு போக முடியாது. அடுத்த படகுச் சேவை நடைபெறும் போதுதான் போகலாம்'' என்பார்கள். இதனால் இதற்குப் பயந்து அவர்கள் அறவிடுகின்ற கட்டணத்தைக் கொடுத்து விட்டு கடற்கரையில் படகுகளுக்காக காத்திருப்பார்கள் பிரயாணிகள். இரவு 9 மணியளவில் கிளாலியில் இருந்து பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு வருகின்ற படகுகள் கரையை வந்து சேரும் இந்தப்படகுகளில் பிரயாணிகள் உடனே ஏற்றப்பட்டு சுமார் 2 1/2 மணித்தியாலங்களின் பின்பு கிளாலிக் கரையை அடைகின்றனர். படகுகளில் பிரயாணிகள் பிரயாணத்தை மேற்கொள்ளும் போது தமது தமது தெய்வங்களை வேண்டிக் கொள்கின்றனர். அவ்வளவு தூரம் இந்த படகுப் பிரயாணத்தின் போது பல அவலங்கள் பிரயாணிகளுக்கு நடந்துள்ளன.

கடற்படையினர் அதிவேக விசைப் படகுகளில் வந்து பிரயாணிகளை கண்டதுண்டமாக வெட்டியும் சுட்டும் கொன்றுள்ளமை அடிக்கடி இந்தக் கடல் பிரயாணத்தின் போது நடந்த சம்பவங்கள் அனேகம். இதனால் தமது தெய்வங்களைப் வேண்டிக் கொள்ளும் பிரயாணிகள் கிளாலிக் கரையை அடைந்ததும் பெருமூச்சு விட்டெறிந்து கிளாலிக் கரையில் இருந்து ஓட்டோக்களிலும், மோட்டார் துவிச்சக்கர வண்டிகளிலும் மினி பஸ்களிலும் தமது பிரயாணத்தை மேற்கொண்டு வீடுகளுக்கு சென்றடைகின்றனர்.

வீடுகளுக்கு சென்றடையும் பிரயாணிக்ள் தமது ஊர்களிலுள்ள ஆலயங்களுக்கு தாம் சுகமாக வந்து சேர்ந்தமைக்காக பொங்கி அபிஷேகம் செய்து தமது நேர்த்திக்கடனை முடிக்கின்றனர்.

இந்தப் படகுச் சேவையின் போது படகுகள் கிளாலியில் இருந்து சேவைக்கு ஈடுபடுத்தப்படாமல் இருந்தால் சாமிப்புலத்தில் இருந்து கடற்கரைக்கு கொண்டு வரப்பட்ட பிரயாணிகள் மீண்டும் டிரரீக்டர்களில் ஏற்றப்பட்டு சாமிப்புலம் கொண்டு செல்லப்படுகின்றனர். சாமிப் புலத்தில் இந்த பிரயாணிகள் படும் வேதனைகள் எழுத்தில் அடங்காது. சுகாதாரப் பிரச்சினை, உணவுப்பிரச்சினை, இருப்பிட வசதி, மலசல கூடம் போன்ற சகல பிரச்சினைகளும் இவர்களுக்கு ஏற்படுகின்றன. விடுதலைப்புலிகள் இந்த மக்களுக்கு ஏற்படும் இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பவர்கள் போல தெரியவில்லை.

ஏனோ தானோ என தட்டிக்கழிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளினதும் அரசாங்கத்தினதும் விடாப்பிடியினால் இன்று அவதிப்படுவது தமிழ் மக்களே. அதுவும் வடபகுதி மக்களே. இன்று வடபகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்கள் கொழும்பிற்கு சென்று திரும்பி வராவிடின் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய் நிலைமைக்கு ஆளாகின்றனர்.

வெளிநாடுகளில் வசிக்கின்றவர்கள் அனுப்புகின்ற பணத்திலேயே பெரும்பாலான வடபகுதி மக்கள் சீவிக்கிறார்கள். இவர்களது சீவியம் 'ஏரோகிராம்' சீவியம். கொழும்பு சென்றால் 'ரெலிபோன்' சீவியம். ''அன்பே உருவான மகனுக்கு ராசா, உடம்பைக் கவனமாப் பார்த்துக்கொள்..... ராசம்மாக்கா நெருக்கிறா..... நீ கொஞ்சக் காசு.... '' என்று 'ஏரொகிராம்' பறக்கும். அல்லது ''தம்பி, ராசா.... என்னப்பு..... எப்படி இருக்கிறாய்..... உடம்பைக் கவனிச்சுக் கொள்..... எனக்குக் கொஞ்சக் காசு.....'' என்று ரெலிபோன் பிதற்றும்.


இவர்களுக்கக் கிளாலிப் பாதையை விட்டால் வேறு கதி இல்லை.

### முற்றும் என்பதற்கு முன்பாக

இப்போது யாழ்ப்பாணத்து மக்களது தேவை, இராணுவ, புலிகளது அருகாமை, அநியாயம், அட்டூழியம் இல்லாத ஒரு பாதை. அது ஆனையிறவுப் பாதையாகவே இருக்க முடியும். கடல் தாண்டத் தேவை இல்லை. நேர்ப்பாதை. என் நாட்டில் நான் புகுவதற்கு உரிய சுலபமான பாதை. இப்பாதை திறக்கப் பட்டால் பயணம் இலகுவாக முடியும். பண்டங்களின் விலை சுலபமாகக் குறையும். யாழ்பாணத்தின் வெங்காயமும், மிளகாயும், புகையிலையும், திராட்சையும், மீனும், கருவாடும், சீமெந்தும் துரிதமாக ஏனைய பிரதேசங்களை எட்டிவிடும். ஆனையிறவின் குறுகிய வெளியினூடாக தார் றோட்டில் பஸ்ஸும், காரும், லொறியும் ஓட, தண்டவாளத்தில் ரயில் ஓட மக்கள் மனங்களில் மகிழ்வோடும் எம் மகிழ்வை யாரினால் மறுத்தல் கூடும்?



● புலிகளின் அறிவிப்பு -1




● புலிகளின் அறிவிப்பு -2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோட்டங்களில் மலையகத்தைக் கருவாகக் கொண்டு இன்னும் நாடகங்கள் நடத்த முடியாத சூழ்நிலையே இருக்கின்றது. சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி மக்கள் இளைஞர்கள் மத்தியில் இளைஞர்கள் செல்வாக்குப் பெற்று வளர்ந்தனர். மன்றங்கள் அமைத்து சேவைகள் செய்தனர். மக்கள் மத்தியில் இளைஞர்களின் செல்வாக்குப் பெருகுவதை தொழிற்சங்கத்தில் ஈடுபாடு கொண்டவர்களுக்குச் சகித்துக் கொள்ள முடியவில்லை. சிந்தனை எழுச்சி கொண்ட இளைஞர்களுக்கும், தோட்டத் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் முரண்பாடுகள் எழுந்தன.

இளைஞர்கள் கலைத்துறையின் மூலம் மக்கள் மத்தியில், அரசியல் உணர்வினை ஏற்படுத்த எண்ணிய எண்ணம் நிறைவேறமுடியவில்லை, முரண்பாடுகளும் வளர்ந்தன.

பெரிய கங்காணிமார்களின் ஆதிக்க முதுகெலும்பை ஒடித்து தொழிற்சங்கங்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டின.

தோட்டங்கள் திறப்பதற்கு ஆரம்ப கர்த்தாவாகவும், தோட்ட நிருவாகத்திற்கு உதவியாகவும் இருந்த பெரிய கங்காணிமார்கள், தொழிலாளர்களிடம் ஈவு இரக்கம் பார்க்காமல் வேலை வாங்கினர். தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பது இவர்களின் கடமையாக இருந்தது. இவர்கள் நிர்வாகத்தின் பக்கம்

தடை போட்டாலும் அது ஒருபுறம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

### மலையகத்தில் தி.மு.க

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தங்களின் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதன் மூலம் எழுச்சி கொண்டு எழுந்தது. அவர்கள் கருத்துக்கள், எழுத்து, மேடைப் பேச்சு என்பவைகளினால் இளைஞர்களை ஈர்த்தனர். நாடகம் சினிமா போன்ற சாதனங்களைப் பயன்படுத்தி மக்களை எழுச்சி கொள்ள வைத்தனர். மக்களின் உணர்வலைகள் அவர்களை ஆட்சிப்பீடத்திற்கே அழைத்துச் சென்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களின் பாதிப்பு தமிழ் மக்க

## மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள்

தோட்டங்களின் பெரிய கங்காணிமார்களின் ஆதிக்கம் தொழிற்சங்க பிரவேசத்தினால் படிப்படியாக முறியடிக்கப்பட்டாலும், இந்த ஆதிக்கம் தோட்டத் தலைவர்கள் கைக்கு மாறியது.

சார்ந்திருந்ததினால் தொழிலாளர் நலன்களைக் கவனிக்கும் கடமையைக் கைவிட்டனர். மக்கள் மீது அதிக அதிகார ஆதிக்கம் செலுத்தினர். மக்களின் எந்தத் தேவையும் இவர்களின் ஊடாகவே நிறைவேற்

ளின் பெரும்பாலோரிடம் அக்காலத்தில் காணப்பட்டது. அது மலையக இளைஞர்கள் உள்ளத்திலும் ஒரு உத்வேகத்தை உருவாக்கியது. அந்த எழுச்சி இளைஞர்களின் செயற்பாட்டால் வெளிப்பட்டது.

## கங்காணிமார் ஆதிக்கத்தை முறியடித்த தொழிற் சங்கங்கள்

தலைவர்களே தோட்ட மக்களின் நலன்களையும், தொழிற் தகராறுகளையும் தீர்த்து வைக்கும் கடமைகளை மேற்கொண்டனர். மக்கள் மத்தியில் இவர்களே செல்வாக்குள்ளவர்களாக வளர்ந்தனர். பல தொழிற்சங்கங்கள் ஒரு தோட்டத்தில் இருந்ததினால், அவரவர்கள் சார்ந்திருந்த தொழிற்சங்கத் தலைவர்களுக்கு கட்டுப்பட்டு நடந்தனர். இது ஒரே தோட்டத்தில் இரண்டு பெரிய கங்காணிமார் இருந்த நிலையை நினைவுறுத்துகின்றது.

மன்றங்கள் அமைத்து நாடகங்களை நடத்துவதன் மூலமும் இளைஞர்கள் தோட்டமக்களைக் கவர்ந்தனர். இது தங்களைப் பாதிக்கும் என்ற எண்ணத்தில் தோட்டத் தலைவர்கள் இவ் இளைஞர்கள் செல்வாக்குப் பெறுவதையும், அதற்கு உறுதுணையாய் இருந்த மன்றங்களையும் வளரவிடாமல் தடுத்தனர். இம்மன்றங்கள் தோட்ட நிர்வாகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துமென நிர்வாகஸ்தரிடம் எடுத்துக் கூறினர். நிர்வாகமும், தோட்டத் தலைவர்களும் சேர்ந்து, கற்ற இளைஞர்களின் செயற்பாடுகளுக்கும், அவர்களின் அமைப்புகளுக்கும் ஆதரவளிக்காமல் முறியடித்தனர். தலைவர்களின் செல்வாக்கிற்கு ஆபத்து வந்துவிடும் என்ற எண்ணத்தால், இளைஞர்களின் எழுச்சியை விரும்பவில்லை. இதனால் எழுந்த முரண்பாடுகள் மலையக அரசியல் எழுச்சிக்குத் தடையாக அமைந்தது. தோட்டங்களில் மன்றங்களின் வளர்ச்சியை "முளையிலேயே கிள்ளி விட வேண்டும்" என்ற வார்த்தைகளை பெரிய தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் தோட்டத் தலைவர்கள் பெருமையுடன் கூறுவதைக் கேட்கக் கூடியதாக இருந்தது. இந்நிலையில்

றப்படல் வேண்டும். இவர்களிடமிருந்த நிர்வாகம் படிப்படியாக கணக்கப்பிள்ளையிடமும், கண்டக்டர்களிடம் மாறியது.

தோட்ட நிருவாகத்திற்கு எதிராக எழுந்த தொழிற்சங்கங்கள், அங்கு நிலை கொள்வதற்காக, பெரிய கங்காணிமார்களுக்கெதிராகப் போரா வேண்டியிருந்தது. அவர்களுக்கு எதிராக எழுந்த போராட்டம் அவர்களின் ஆதிக்கத்தையே அழித்தது. தொழிலாளர் சம்பந்தப்பட்ட கடமைகள் பல தோட்டத் தலைவர்களின் கைகளுக்கு மாறியதால் மக்கள் மத்தியிலும், நிர்வாகத்திடமும், கங்காணிமார்களின் செல்வாக்குக் குன்றி விட்டது.

பெரிய கங்காணிமாரிடமிருந்த ஆதிக்கத்தை போராட்டத்தினால் பெற்றுக் கொண்ட தலைவர்கள், அதை இளைஞர்களிடம் இழக்கத் தயாராய் இல்லை. தொழிற்சங்கவாதிகள் இளைஞர்களின் எழுச்

**வி.ரி.தர்மலிங்கம்**

சியை முறியடிக்க முயன்றபோதும் அதனை மீறி தோட்டங்களில் 'வள்ளுவர் மன்றம்'' பாரதி மன்றம் 'முத்தமிழ் மன்றம்' கலைமன்றம், என்ற பெயர்களில் இளைஞர் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. மக்களிடம் காணப்பட்ட அறியாமையைப் போக்குவதே இவர்களின் நோக்கமாக இருந்தது. இவர்களின் நோக்கத்தை நாடகங்கள் நடத்துதல் சமூக பொதுசேவை செய்தல், விழாக்கள் நடத்துதல் என்பவற்றின் மூலம் இரவுப் பாடசாலைகள் நடாத்துவதன் மூலமும் செயல்படுத்தினர். இதன் மூலம் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி, மலையகத்தின் எழுச்சிக்கு வித்திட்டனர். இளைஞர்களின் எண்ணத்திற்கு

தமிழகத்திலிருந்து வெளியாகிய பத்திரிகைகள், புத்தகங்கள், திரைப் படங்கள், மலையக இளைஞர்கள் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. முரசொலி, தென்றல், மலைஞானி போன்ற இதழ்களும், முத்தாரம், முல்லை போன்ற இலக்கிய சஞ்சிகைகளும் பலரின் கருத்தைக் கவர்ந்தன. இப்படைப்புகளில் கையாளப்பட்ட அடுக்கு மொழியில் அமைந்த வசன நடை படிப்போரின் உணர்வினை உசுப்பிவிட்டது. இளைஞர் எண்ணத்தில் எழுந்த உணர்வுகள் மலையக மக்களையும் ஈர்த்தது. தமிழகத்தில் தி.மு.க எழுச்சியினால், துணிவு மிக்க போராட்டங்கள்; சாமான்ய மக்களின் அரசியல் பிரவேசம், சீர்கேடுகளை மூர்க்கத்தனமாகச் சாரும் பேச்சுவன்மை; அறிஞர் அண்ணா, கருணாநிதி போன்ற தலைவர்களின் வீரமும், விவேகமும் செறிந்த கருத்துக்களால் துடித்தெழுந்த மக்கள்; அண்ணா சொன்னால் அதைச் சாதித்துக் காட்டும் தம்பிகளின் கடமை உணர்வு அத்தனையும் தமிழகத்தின் அரசியல் சிந்தனையில் மறுமலர்ச்சியினைக் கொணர்ந்தது. அதன் பாதிப்பு, மலையக இளைஞர்களிடமும் காணப்பட்டது.

## இது ஓர் மென்னுணர்வு

'விலங்கிடப்பட்ட மானுடம்'என்ற தலைப்பில் சுல்பிகாவின் வெளிவரவுள்ள கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு கவிதை.

அது எனது சிருஷ்டி,
கண்ணாடி இழை கொண்டு
பின்னப்பட்ட அழகிய "Sponge" இலும்
மென்மையானது.
தாயின் கருவறையில்
வளரும் சிசுவிலும் தூய்மையானது.

இளங்காலைக் கதிர்பட்டு
நகைக்கும் தளிரிலும்
மகிழ்ச்சியானது.

இயற்கையையே
"இல்லை"என்று விடும்போல்
அற்புதம் மிக்கது.
அது என் உடலின்
உள்ளத்தின்
உயிர்ப்போராட்டம்.
அதுவே எனது பிரபஞ்சம்
முழுவதையும் ஆட்கொண்டுள்ளது.
எனினும் அது மிக மென்மையானது.


மென் இளந்தென்றல்கூட
பொல்லாரின் இன் சொற்கள்கூட
அதனை அழித்து விடக்கூடும்

அதன் அழகை
அற்புதத்தை
இனிமையை
மகிழ்ச்சியை
தூய்மையை
மென்மையை இழக்கச்செய்து விடக்கூடும்
எனினும் நான் காப்பேன்.
கொடிய புயலிலும் நான்
அதைக் காப்பேன்.

என்முனைக் கலங்களிலும் பார்க்க
பெறுமதி மிக்க அதை,
என் உணர்வுகளை இவ்வுடல்
இழக்கும் வரை காப்பேன்.

அது எனது சிருஷ்டி,
முடிந்தால்;
அதற்கப்பாலும்
அதனை என்னால் காக்கவும் முடியும்

சுல்பிகா,



எப்போதும் போலான இரவு
கூடவே நண்பர்கள்.
எரியும் பிரச்சினைகள் பற்றி
சூடச் சூடச் சூடாகக்
கதைத்தோம்.
கதைத்தல் எப்பவும் போலவே
இலகுவாய்
மிக இலகுவாய் இருந்ததால்
நள்ளிரவு வந்தது கூடத் தெரியாமலிருந்தோம்.
இனி-
நல்லதொரு தூக்கம் போடலாம்
நாளையும் புதிதாய்க்
கதைத்துக் கொண்டேயிருப்பதற்காய்...!

24/06/1994
எம்.கே.எம்.ஷகீப்

www.tamilarangam.net



# வீரசூரியாவும் காமசூத்திராவும்!

என். சரவணன்

கலாநிதி விக்கிரம வீரசூரிய ஐ.தே.க அரசியல் வட்டாரத்தில் மிகப் பிரபல்யமான நபர். கடந்த மாதம் நடந்த பொதுத் தேர்தலுக்கான ஐ.தே.க பிரச்சார வேலைகளுக்கான முக்கியஸ்தர். அது மட்டுமல்ல காமினி திசாநாயக்காவின் மைத்துனர். (காமினியின் சகோதரியை மணமுடித்தவர்)

இவர் பெண்களின் நிர்வாணப்படங்கள் எடுத்து செய்த வியாபார செயல்கள் ஆரம்பத்தில் வெறும் வதந்திதான் எனப் பேசப்பட்ட போதும் அவை இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளன.

விக்கிரம வீரசூரிய 1977ஆம் ஆண்டு தேர்தலின் போதும் ஐ.தே.கவின் தேர்தல் பிரச்சாரத்துக்கு முண்டு கொடுத்து இயங்கியவர். ஐ.தே.கவின் தேர்தல் பிரச்சாரக் குழுவில் முன்னணி வகித்தவர்.

1977இல் ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்த போது ஜே.ஆரினால் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக இவர் நியமிக்கப்பட்டார். பின்னர் அவரது மைத்துனர் காமினி திசாநாயக்காவின் 'மகாவலி அமைச்சிலும்' முக்கிய பெரிய பதவிகளிலும் இருந்தார்.

1985இல் ஜே.ஆரினால் இவரது பதவி குறைக்கப்பட இருந்த வேளை, காமினி ஜே.ஆரிடம வேண்டிக் கொண்டதன் பேரில் அவரை அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வைத்து 77இல் அவர் செய்த பங்களிப்பை கருத்திற் கொண்டு அவுஸ்ரேலியா உயர்ஸ்தானிகராக அனுப்பப்பட்டார்.

பிரேமதாச பதவிக்கு வந்ததன்பின் 'அவுஸ்ரேலிய தூதுவர்' பதவி இல்லாமல் போனதோடு இவர் அவுஸ்ரேலியாவில் வாசம் புரிந்தார்.


பின்னர் பிரேமதாசாவுக்கு எதிராக பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட 'ஒழுக்கவழுவுரை பிரேரணை'யின் பின் லலித் அத்துலத்முதலி, காமினி ஆகியோரினால் 'ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி' தோற்றுவிக்கப்பட்ட போது பிரேமதாசாவுக்கும் ஐ.தே.கவுக்கும் எதிராக போஸ்டர்கள், பத்திரிகைகள் பிரசுரிப்பது போன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

காமினி நிசாநாயக்க ஐ.தே.கவில் சேருவதற்கு முன்னமே விக்கிரம வீரசூரிய ஐ.தே.கவில் சேர்ந்ததோடு நில்லாமல் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் விசேட ஆலோசராகவும் ஆனார். அத்தோடு பாஸ்கரலிங்கம் வெளிநாட்டில் இருந்த சமயங்களில் அவருக்குப்பதிலாக, கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் தற்காலிக செயலாளராக பதவி வகித்ததோடு ஜனசவிய திட்டத்தின் தலைவராகவும் பதவி வகித்தார்.

இம்முறை பாராளுமீன்றம் கலைவதற்கு முன்னமே ஐ.தே.கவின் வெற்றிக்கான பிரச்சார வேலைகளை தொடங்கியிருந்தார். அமைச்சு செயலாளராக இருந்து கொண்டே ஐ.தே.கவின் தேர்தல் வேலைகளில் இவர் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கது.

## பெண் நிர்வாணமும் வீரசூரியவும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியின் போது கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளராக பதவி வகித்திருந்த போது, விக்கிரம வீரசூரிய, பெண்களின் நிர்வாண புகைப்படங்கள் எடுத்தல், பெண்களைக் கொண்டு காம சேஷ்டைகளை புரியவைத்துப் புகைப்படமெடுத்தல், மற்றும் அவற்றைக் கொண்டு பெரும்பணம் சம்பாதித்தல் போன்றவற்றில் 1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகமாக ஈடுபட்டார். அச்சமயத்தில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த காமினி கன்னங்கரவுக்கும் மேற்படி வேலைகளுடன் தொடர்பு இருந்ததாக 1985ஆம் ஆண்டு அரச மரக்கூட்டுத்தாபனத்தில் உள்ளவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், போஸ்டர்கள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.



1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரச மரக் கூட்டுத்தாபன காரியாலயத்தில் தொழில் புரிந்த சந்திரசேகர அபேரத்ன என்பவர் கூட்டுத்தாபன தலைவரின் அறையில் தொலைபேசி இலக்கம் தேடிக் கொண்டிருக்கையில் அவரது 'லாச்சியில்' இருந்து ஒரு தொகை நிர்வாணப் படம் கண்டெடுக்கப்பட்டது.

அந்த நிர்வாண படங்களில் அரச மரக் கூட்டுத்தாபனத்தில் மற்றும் நீர் வடிகாலமைப்புச்சபை என்பவற்றில் தொழிற்புரிந்த பெண்களின் நிர்வாண புகைப்படங்களும் இருந்தது.

இந்த நிர்வாண படங்களின் பிரதி அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்களின் கைக்கு கை மாறி இறுதியில் துண்டுப்பிரசுரங்கள் மூலம் வெளியாக்கப்பட்டது.

அப்படி வெளியான ஒரு துண்டுப் பிரசுரம் கீழ்வருமாறு வெளியிடப் பட்டிருந்தது.

**காமம் உச்சமடைந்திருந்த கட்டம். அழகிய இளமையுடன் பெண்களின் முழுமையான நிர்வாணம். இப்போது வீடியோவில் கிடைக்கிறது. பிரதியின் விலை 3 டொலர் (150.00 ரூபா)**

**அரச கூட்டுத்தாபனத்தில் மா......, ஷா......, டா......, ஆகியோர் அழகிய தமிழ் காமுகி டொ....., மற்றும் நீர் வடிகாலமைப்புச்சபை அழகிகளும்.**

**தொடர்புகளுக்கு -காமினி கன்னங்கர (தலைவர்) அரச மரக் கூட்டுத்தாபனம். மூலப்பிரதிகள் ஸ்.... அரச மரக்கூட்டுத்தாபனம், கொழும்பு**

**அழகிகளுடன் ஒரு இரவைக் கழிப்பதற்கு 50 டொலர்**

**தொலைபேசி இல: 81530.**

இதே காலத்தில் விக்கிரம வீரசூரியவின் காரியாலயத்திலிருந்தும் ஒரு தொகை புகைப்படங்கள் சிக்கியிருந்தன.

இது தொடர்பாக சேவாவனிதா இயக்கத்தைச் சேர்ந்த் ஒரு குழு புகைப்பட பிரதிகளுடன் 1985 ஓகஸ்ட் மாதம் ஜே.ஆரின் மனைவிக்கு முறைப்பாடு செய்ததுடன் விசாரணை செய்யக்கோரியிருந்தது. அத்துடன் அரச மரக்கூட்டுத்தாபன ஊழியர்களும் காமினி திசாநாயக்கவின் மனைவிக்கு இது பற்றி முறைப்பாடு செய்து விசாரணையைத் தொடர காமினியை வற்புறுத்துமாறு அறிவித்திருந்தனர்.

1985 மே 3ம் திகதி அரச மரக் கூட்டுத்தாபன தலைவர் கன்னங்கரவை அழைத்து இதுபற்றி அறிக்கை தருமாறு கோரினாலும் அது மூடி மறைக்கப்பட்டது. ஆனாலும் ஜனாதிபதி ஜே.ஆர் பின்னர் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் எம்.டி.ஏ.ராஜபக்ஷவுக்கு இதுபற்றி விசாரணை நடத்த ஆணையிட்டிருந்தார்.

அதன்படி பல பேரைக்கொண்ட பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின் இறுதி அறிக்கைக்கு முதல்; மூன்று இடைக்கால அறிக்கைகளும் வெளியிடப்பட்டன. விக்கிரம வீரசூரியவைப் பற்றிய விசாரணைகளுக்காக அவுஸ்ரேலியா வரை சென்று இவ்விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்த சில விடயங்கள் கீழே.

பெண்களின் நிர்வாணப் படங்கள் எடுக்கப்பட்ட இடங்கள்.

- பம்பலப்பட்டி டேவிட்சன் வீதியில் ஒருவீட்டில்
- கொழும்பு நகரசபை மண்டபத்துக்கருகில் ஒரு வீட்டில்
- களுத்துறை 'டென்ஜலின் பீச்' ஹோட்டலில்

நிர்வாண புகைப்படத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட (அரச மரக் கூட்டுத்தாபனத்தில் தொழில் புரிந்த) பெண் 1985 நவம்பர் 11 புலனாய்வு பிரிவுக்கு அளித்த வாய்மூல அறிக்கையில்;

''சம்பள உயர்வு தொடர்பாக தலைவருடன் தொடர்பு கொண்டேன். அது பற்றி அலுவலகத்தில் கதைக்க முடியாது வெளியில் கதைக்கலாம் என கூறினார் அவர் ..... 1984 செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாதமளவில் தலைவர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சனிக்கிழமை காலை பம்பலப்பிட்டி டேவிட்சன் வீதியில் உள்ள வீட்டுக்கு வருமாறு கூறினார். நான் போன போது தலைவர் இருந்தார். நான் அவரோடு சில நிமிடங்கள் கதைத்துக் கொண்டிருந்தேன். அப்போது அவர் நிர்வாண படங்கள் எடுப்பதற்கு இடமளிக்குமாறு கேட்டார். நான் மறுத்தேன் தொடர்ச்சியாக நான் வற்புறுத்தப்பட்டு இறுதியில் இடமளித்தேன். மூன்று அல்லது நான்கு நிர்வாணப்படங்கள் பிடித்தார்கள்.''

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதி முகாமையாளர் சிறிபால குமார சிங்க 1985 செப்டம்பர் 15ம் திகதி புலனாய்வு பிரிவுக்கு அளித்த வாய்மூல அறிக்கையில்;

''எங்களது தொழிற்சங்கத்தைச் சேர்ந்த.... என்ற பெண் என்னைச் சந்தித்து கண்ணீருடன், தலைவர்; தன்னை வேலையிலிருந்து விலகும்படி வற்புறுத்துவதாக கூறவே. ஏன் என்று கேட்டேன். கடந்த சில தினங்களுக்கு முன் தலைவரும்.... என்பவரும் கொழும்பு நகர மண்டபத்துக்கு அருகில் ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்று மயக்கமடையச் செய்யும் நீராகாரத்தை வழங்கி மயக்க நிலையில் தன்னை நிர்வாணப்படுத்தி படமெடுத்ததாகவும், அங்கு இன்னும் சில பெண்கள் அவ்வாறு படமெடுக்கப்பட்டனர் என்றும் புகைப்படங்களை தமிழர் ஒருவர் எடுத்தாரென்றும் இது வெளித்தெரியாமல் இருப்பதற்காக இப்போது தன்னை விலகும்படி வற்புறுத்துவதாகவும் இதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் கூறினார். நான் அவரின் வாக்குமூலத்தை ஒலிப்பதிவு செய்து கொண்டேன்.

களுத்துறை 'டென்ஜலின் பீச் ஹோட்டலில்' பெண்களின் நிர்வாண புகைப்படங்கள், வீடியோ படம் எடுத்து முடித்தன் பின் அப்பெண்களுக்கு உடல் வதையை ஏற்படுத்தியிருப்பதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்படி வேலைகளுக்கு ஈடுபடுத்தப்பட்ட பெண்களுக்கு வேலை பெற்றுத் தருவது. வேறு இடத்துக்கு அவர்களை இடம் மாற்றுவது என்பவற்றிக்கு விக்கிரம வீரசூரியவே முன்னின்று உழைத்திருக்கின்றார்.

விசாரணை முடிவில் ஜே.ஆரினால் விக்கிரம வீரசூரிய 'அமைச்சு செயலாளர்' பதவியிலிருந்து நீக்கப்பட்ட போதும் காமினி திசாநாயக்கவின் வேண்டுதலின் பேரில் அவர் அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராக அனுப்பப்பட்டார்.

சமீபத்தைய தேர்தல்களில் ஐ.தே.கவின் DIRTY TRICKS DEPARMENT' க்குப் பொறுப்பாக இவர் தான் இருந்தார் என்று தெரிய வருகிறது.

சந்திரிகா பிரபாகரனுக்கு ஈழத்தை வழங்குதல், ஈழக்கொடியின் கீழ் இலங்கை, ஆகிய போஸ்டர்கள் மேற்படி DTD அமைப்பினராலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கான இறுதிதினமாக ஒகஸ்ட் 14ஐ ஆணையாளரால் பிரகடனப்படுத்தப்பட்ட போதும் 14ஆம் திகதிக்குப் பின்னரும் தொடர்ந்து சுவரொட்டிகளை ஒட்டியதில் அதிக பங்கு வகித்ததும் மேற்படி அமைப்பே.

தகவல் : ரிவய

---

மெல்ல ஊர்ந்து திடீரெனப் பறந்தெழும்
அந்த விமானத்தினுள்
என் தம்பி பயணிக்கிறான்
சுமைகளைத் தாங்க
சுகமான பயணம்..
ஹோவென அழும் தாய்
கண்களைக் கசக்கி கொள்ளும் தந்தை
இந்த' சென்டிமென்ட்' அற்று
விமானம் பார்க்கும் கூட்டத்துள் நான்..
வாழ்தலுக்கான பாதையில் அந்நியப்பட்டுப் போகும்
உறவுகளை கண்ணீர் ஈரமாக்கி
இணைத்துவிடுகிறதா என்ன..?
ஆறுதலுக்காய் அழுகிறார்கள்
அது கூட இன்றி இருக்கும் என்னுள்
ஏதோ ஒன்று மௌனம் போர்த்தும்
தாய்,தந்தை,
உற்றம்,உறவு..
சொந்தம்,சுமை..
இந்த வட்டம் தவிர்ந்த
விரிந்த வாழ்க்கைக்கான இலட்சியம்
என்னைக் கல்லாக்கும்
எதற்காய்..? யாருக்காய்?
இந்தக் கேள்விகளின் பின்னணி
ஒன்று அழுகை,மற்றது எனது போன்று
ஏதோ...எல்லோரும்
எதற்காகவோ வாழ்கிறோம்..!


4.8.94
ஷகீப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சரிநிகர் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 1ம் பரிசு பெற்ற சிறுகதை**



# மதிப்பீடு

ஏழு மாதங்களுக்குப் பிறகு, அதாவது கிட்டத்தட்ட இருநூறு நாட்களுக்குப் பிறகு இப்போது அவன் நினைவுகள் மீண்டும் எனக்குள் பலமாக ஆக்கிரமிக்கின்றன. அவனுக்கும் எனக்கும் இனி எந்தத் தொடர்பும் இல்லை என்ற என்னுடைய பிடிவாதம் இப்போது மெதுவாய் ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது. இப்போதெல்லாம் அவனைப்பற்றி நிறையவே வதந்திகள். மூளைபிசகி முந்தின நிலையில் இருப்பதாய் வெளிப்படையாகவே பிரச்சாரங்கள். அவனுடன் நான் நட்புக் கொண்டிருந்த நாட்களிலும் இப்படியொரு கதை பொசிந்தது தான். என்றாலும் இப்போது போல் அவ்வளவு வெளிப்படையாக இல்லை. சில வேளை அவனுக்கு அப்போது நான்கு காதுகள் இருந்தன என்பதை மற்றவர்கள் புரிந்திருந்தால் மௌனமாய் அவனை விட்டிருக்கலாம் எது எப்படியென்றாலும், இப்போது நானும் அவனை வெறுத்து விட்டேன் என்பது இவர்களுக்கு ஒரு ஊக்கத்தைக் கொடுக்கத்தான் செய்யும்.

வளாகத்தின் ஒரு மரத்துக்குக் கீழ் அல்லது யாரும் இல்லாத ஒதுக்குப்புறமான இடத்தில் கையில் சில வெள்ளைப் பேப்பர்களுடனும் ஒரு யோசனையுடனும் அவனைக் காணலாம் என்பது பொதுவான அபிப்பிராயம். இது அவனைப் பற்றிய இவர்களின் மதிப்பீட்டிற்கு முதலாவது காரணி. அவன் யாருடனும் அதிகமாகக் கதைப்பதில்லையென்பது இரண்டாவது காரணி. அத்திபூத்தாற்போல் யாருடனேனும் கதைத்தாலும் மணிக்கணக்காய் சூடாக விவாதித்துக் கதைப்பது மூன்றாவது காரணி. இப்படியே அவனுடைய செய்கைகள் ஒவ்வொன்றும் அவனைப்பற்றிய மதிப்பீட்டிற்கு காரணியாய்ப் போனது. அவனின் இந்தச் சுபாவங்களில் பல அவனுடன் இயற்கையாய் இணைந்தது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சில சுபாவங்கள் மட்டும் இப்போது புதிதாக உருவாகியிருக்கிறது. உருவாகியிருக்கின்றது என்று திடமாகச் சொல்வதற்கும் இல்லை. அவனே உருவாக்கியதாயும் இருக்கலாம்.

அவன் வளாகத்தில் நுழைந்த தொடக்க காலத்திலேயே எல்லோருடனும் மனம்விட்டு 'வள வள' என்று பேசுவதைப் பார்த்து அவர்களின் மொழியில் அவனுக்கு வேறுபெயர் வைத்ததாய் எனக்கு ஞாபகம்.

இனத்திலும் பாலிலும் வேறுபட்ட என்னுடன் அவன் மனம் விட்டுப் பழகுவதைப் பார்த்து, ''ஏன் இவனுக்குக் கதைத்துப் பழகப் பெடியன் ஒருத்தரும் கிடைக்கயில்லையா, சரி பொட்டையோடதான் கதைக்க வேணுமென்டால் தமிழ்ப் பெட்டை ஒருத்தரும் கிடைக்கயில்லையா'' என்று பல தொட்டிகளில் அவன் கழுவப்பட்டது உண்மை.

இதே போன்ற விமர்சனங்கள் என் இனத்தவர்களிடம் இருந்து கிளம்பியதும் உண்மை.

முன்பெல்லாம் என்னுடைய் நண்பிகள் என்னுடன் அவ்வளவு தூரம் முகம் கொடுத்துக் கதைப்பது இல்லை. ஓர் ஆணுடன் அளவுக்கு மீறிக் கதைக்கும் (அவர்களின் அகராதியில் கதைப்பது என்றாலே அது அளவுக்கு மீறியது தான்.) பெண்ணைப் பற்றி எப்போதும் அவர்களுக்கு நல்லபிப்பிராயம் கிடையாது. ஆனால் அவர்களின் சம்பாஷணை ஆண்களைப் பற்றியதானதன்றி வேறொன்றாய் இருக்காது என்பது வேறுவிஷயம். இருப்பினும் இன்றைய அவனைப்பற்றிய ஒவ்வொரு செய்தியையும் என்னிடம் தான் முதலில் வந்து சொல்வார்கள்.

அவனைப்பற்றி எதைச் சொல்ல முனைந்தாலும் முதலில் ஒரு கேலிச் சிரிப்புத்தான் கெக்கலிக்கும். அவன் பெயர் உச்சரிக்கப்பட்டாலே அது இந்த நூற்றாண்டின் சிறந்த பகிடி என்பது போல் சிரிப்பு.

என்னதான் அவனை நான் வெறுத்திருந்தாலும் அவனைப்பற்றி இப்படிக் கேலி செய்வது மட்டும் எனக்கு வலியைக் கொடுக்கும். வலித்தாலும் எதுவுமே சொல்லக் கூடிய நிலையில் நான் இல்லை.

ஆரம்பத்தில் விறுவிறுவென்று உயர்ந்த நட்பு பற்றியும் பின் திடீரென்று அதல பாதாளத்தில் விழுந்த முறிவு பற்றியும் வளாகம் முழுவதும் பகிரங்கம். அதனால் இப்போது அவனை எனக்காக வெறுக்காவிட்டாலும், மற்றவர்களுக்காக வெறுக்க வேண்டிய நிலை எனக்கு.

**-திருக்கோவில் கவியுவன்-**

சில சமயங்களில் இந்த நடிப்பு வாழ்க்கையைப் பற்றி நான் கவலைப்பட்டதுமுண்டு தான். அப்படிப்பட்ட சமயங்களிலெல்லாம். 'வாழ்க்கை' என்னைத் தட்டிக் கொடுக்கும். அவனும் அடிக்கடி என்னிடம் சொல்வான்.

''வாழ்க்கையென்றால் சில சமயங்களில் நடிக்கவும் தெரிந்திருக்க வேணும்'' என்று. அவனோடு பேசிக் கொண்டிருக்கையில் போதி மரத்தின் கீழ் இருப்பது போல் ஒரு பிரமை தோன்றும். அவனில் எனக்கு மிகவும் பிடித்த விடயமே எதையும் வெளிப்படையாகச் சொல்லும் தன்மையும், யாருக்காகவும் தன் கருத்தை மாற்றிக் கொள்ளாத திடமும்தான்.

எங்கள் இருவருக்குமிடையே பல தடவைகள் கருத்து முரண்பாடு ஏற்பட்ட போதிலும் அதனால் எங்கள் நட்பு காயப்பட என்றும் அவன் விரும்பியதில்லை. நட்பு வேறு, கருத்து வேறு என்பது தான் அவன் கருத்து. என் வரைக்கும் அந்தக் கருத்து கொஞ்சம் ஒதுங்கலாய்த்தான் இருந்தது. என்னுடைய கருத்துக்கு மதிப்பளிக்காதவருடன் எதற்கு நட்பு என்று நான் இடையிடையே யோசிப்பதுமுண்டு தான்.

நாங்கள் நட்பை முறித்துக் கொண்டதன் காரணமோ அன்றி விதமோ, சரியா பிழையா என்பது இன்றுவரை எனக்கு விளங்கவில்லை. அந்த முறிவினால் நான் பெரிதும் கவலைப்பட்டேன் என்று சொல்வதற்கும் இல்லை. அவன் மட்டும் நிறையவே பாதிக்கப்பட்டிருப்பான் என்பது இன்று எனக்குப் புரிகிறது. ஆனால் அவன் பிரியும் நாட்களில் நடந்து கொண்ட விதங்கள் என்னைக் காயப்படுத்துவதாய் இருந்தது.

ஏழு மாதங்களுக்கு முன் ஒரு தடவை அவன் கொழும்பில் வைத்து சந்தேகம் என்ற போர்வையில் கைது செய்யப்பட்டான். மறுநாளே அவனை நேரில் பார்த்து வருவதற்காகச் சென்றேன். கடமையில் நின்ற பொலிஸார் அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும், ஒரு குறுகலாய் அடைக்கப்பட்ட இடைவெளிக்குள் சுருண்டு கிடந்தவன் துடித்து எழுந்தான். அவனைப் போலவே இன்னும் பலர் அந்தச் சிறிய அறைக்குள் நெருங்கிக் கிடந்தார்கள். சிறைக் கம்பிகளுக்கு வெளியே, அழுத கண்ணீர் காய்ந்த நிலையில் என் வயதையொத்த சில பெண்கள் வெருண்டவாறு அருகில் இருந்த வாங்கில் அமர்ந்திருந்தனர். அவர்களும் கைது செய்யப்பட்டவர்கள் என்பது பின்னர் தெரிய வந்தது.

என்னைக் கண்டதும் துடிப்பாக எழுந்தவனின் முகத்தில் சடுதியாக பல மாற்றங்கள் தெரிந்தன.

''ஏன் நீங்கள் வந்தீர்கள்?''

''என்ன கேள்வி இது''

''ஏன் வந்தீர்கள் என்று கேட்டேன்''

''ஏன் உங்களைப் பார்க்க வரக்கூடாதா''

''வரலாம், நிச்சயமாய் வரலாம், ஒரு ஹொஸ்பிட்டலில் அல்லது என் அறையில் பார்ப்பதற்கு வரலாம், ஆனால் இங்கே வரக்கூடாது.

''ஏன் பயமா? என்னை இவர்கள் பிடித்து வைத்துவிட மாட்டார்கள்''

''எனக்கும் அது தெரியும். நீங்கள் தமிழ் இல்லையென்பதால் உங்களைப் பிடித்து வைக்க மாட்டார்கள் என்று தெரியும். அதனால்தான் ஏன் வந்தீர்கள் என்று கேட்டேன்''

அவன் அப்படி உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதோ அன்றி இப்படிப் பிரித்துப் பிரித்துப் பேசியதோ அதுவரை இல்லை. எனக்கு அது அதிர்ச்சியாயும் ஆச்சரியமாயும் கூடவே சோகமாயும் இருந்தது. உடனே சூடான பதில் கொடுக்க வேண்டும் போல் இருந்தது.

''அவர்கள் உங்களைக் கைது செய்ததற்காக என்னில் ஏன் கோபப்படுகிறீர்கள்.''

''நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து விட்டீர்கள் போல் இருக்கின்றது. என்னைக் கைது செய்தவர்கள் உங்கள் இனத்தவர்கள் என்பதற்காக நான் அப்படிச் சொல்லவில்லை. ஏன் வீணே மற்றவர்களுக்கு மனக் கிலேசங்களைக் கொடுக்கின்றீர்கள் என்றுதான் கேட்கிறேன்.''

''எனக்குப் புரியவில்லை''

''இதோ பாருங்கள் இவர்கள் உங்களைப் போன்று அதே பருவப் பெண்கள் தான். தமிழ் என்ற ஒரே காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வெளியில் நடமாடவே சுதந்திரம் இல்லாமல் இருக்கும் இவர்கள் பொலிஸ் நிலையத்தினுள்ளேயே சுதந்திரமாய் நுழையும் உங்களைப் பார்த்து ஆற்றாமைப்பட மாட்டார்களா?''

''அவர்கள் கைது செய்யப்பட்டதற்கு நீங்கள் சொன்னதுதான் காரணம் என்று இல்லாமலும் இருக்கலாம். அவர்களிடம் அடையாள அட்டை இல்லாமையினாலும் கைது செய்யப்பட்டிருக்கலாம்.''

''எல்லாம் இருக்கிறது. அது இருப்பதால் தான் இவர்களின் வேலை இலகுவாகிறது.'' →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன் ஆத்திரப்பட்டான். சின்ன விடயத்தைப் பெரிதுபடுத்தி அவன் கோபப்படுவதாய்ப்பட்டது எனக்கு. மேலும் பிரச்சினையை வளர்த்துக் கொள்ள விரும்பாமல் நான் கொண்டு சென்ற மதிய உணவுப் பார்சலை நீட்டினேன்.

''வேண்டாம் இங்கே சாப்பாடு தருகிறார்கள்.''

''சரி நல்ல சாப்பாடு இல்லைதானே. இதைச் சாப்பிடுங்கள்''

''சரி அப்படியென்றால் இன்னும் பன்னிரண்டு பார்சல்கள் கொண்டு வர முடியுமா, என் நண்பர்களுக்கும்.''

''நண்பர்கள்'' நான் குழப்பமாய் அவனை ஏறிட்டேன்.

''ஆம்! என் நண்பர்கள், ஒரு நாளைய நண்பர்கள்'' என்று சொல்லிக் கொண்டு சிறைக் கம்பிகளையே ஏக்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பரிதாப முகங்களைக் காட்டினான்.

நான் இன்னும் பன்னிரண்டு பார்சல்கள் வாங்கி வரத் திரும்பியபோது என்னைத் தடுத்தான்.

''வேண்டாம், அது உங்களுக்கு வீண் சிரமம். அது மட்டுமில்லாது நீங்கள் பார்சல் வாங்கி வருவதற்குள் சிலர் இங்கேயிருந்து போயிருக்கலாம் அல்லது இன்னும் சிலர் உள்ளே வந்தும் இருக்கலாம், எனவே எண்ணிக்கை நிலையில்லை''

இப்படித்தான் அவன் எதையும் வெளிப்படையாகச் சொல்லும் போதும் புரிவது சிரமமாயிருக்கும்.

பார்வையிடும் நேரம் முடிந்ததாய் கடமையில் நின்றவன் அவசரப்படுத்தியதும்,

''நான் நாளை வருகிறேன்'' என்றேன்.

''வேண்டாம், நாளை வரவேண்டாம். இன்று நீங்கள் வந்ததற்கு நான் நன்றிக்கடன்பட்டுள்ளேன். ஆனால் நாளை நீங்கள் வரவேண்டாம். என்னை விடுதலை செய்தால் நானே வந்து சந்தித்துக் கொள்கிறேன்''

''சரி உங்கள் விருப்பம். கவலைப்படாதீர்கள். இன்றோ நாளையோ நீங்கள் விடுதலையாகி என்னை வந்து சந்திப்பீர்கள்'' என்று சொல்லி விடை பெற்ற போது அவன் இதழோரங்களில் ஒரு வரண்ட புன்னகை தவழ்ந்ததைக் கண்டேன்.

நான் சொன்னதுபோல் அன்றோ அதற்கடுத்த நாளோ அவன் விடுதலையாகவில்லை. பத்து நாட்கள் உள்ளேயிருந்துதான் வந்தான். அவன் விடுதலையானதிலிருந்து அவனுடைய போக்குகள் மாற்றமாய்த் தெரிந்தன. ஒரே இடத்தில் தொடர்ந்து இருந்து ஒரே முகங்களைத் திரும்பத் திரும்பத் பார்த்ததால் மூளையில் ஏதும் பாதிப்பு ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது என்று காரணம் சொன்னார்கள். எனக்கு மட்டும் அவனுடைய மாற்றம் மிகுந்த கவலையைக் கொடுத்தது. உள்ளே இருந்து வந்தபின் ஒரேயொரு தரம் மாத்திரம் என்னை வந்து சந்தித்து மீண்டும் ஒருதரம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு சென்றான். அதன்பின் என்னைச் சந்தித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களை வேண்டுமென்று அவன தவிர்த்து வருவதாகவே பட்டது எனக்கு. அவனாக வந்து சந்திப்பான் என்ற என நம்பிக்கைகள் சுத்தமாய் இத்துப் போன முடிவில் அவன் ஒதுங்கியிருக்கும் அந்த ஒதுக்கும்புறமான நிழல் வாகை மரத்தின் கீழ் தேடிச் சென்றேன்.

''என்ன இப்படியே இருப்பது எண்டு முடிவு செய்து விட்டீர்களா?'' என்ற குரலில் அவன் கலைந்தான்.

''நான் ஒன்றும் புதுமாதிரியாய் இருக்கவில்லையே, வழமையைப் போல்தானே இருக்கிறேன்.''

''கவலைப்படுவதுதான் உங்கள் வழமையா?''

''இல்லை! ஆனால் உங்கள் பார்வையில் அப்படித் தெரியலாம்.''

''அப்படித் தெரிந்தால் பிழை உங்களுடையது தான்.''

''உங்கள் இதயத்தையம் கண்ணையும் நான் படைக்கவில்லை''

''படைக்காத உங்களுக்கு அவற்றைக் காயப்படுத்தவும் உரிமையில்லை''

''சரி! உங்களைக் காயப்படுத்தியிருந்தால் அதற்காக நான் மன்னிப்புக் கோருகின்றேன்''

''நான் உங்களிடம் மன்னிப்பை எதிர்பார்க்கவில்லை, மாற்றத்தை எதிர்பார்க்கிறேன்.''

சொல்லிக்கொண்டே அவனருகில் அமர்ந்தேன். அவன் என்னைத் திரும்பியும் பார்க்கவில்லை. ஏதாவது அவன் கதைப்பான் என்று எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றமும் கோபமும் தான் எஞ்சியது. இவன் ஏன் இப்படி? எதற்காக என்னையும் சேர்ந்து இப்படி ஒதுக்குகின்றான். எனக்குள் நிறைய கேள்விகள் எழுந்தன.

எல்லாக் கேள்விகளுக்கும் பதிலாகிப் போன அவன் மட்டும் கல்லை விழுங்கியவன் போல் மௌனமாய் இருந்தான்.

''அதோ பூத்துக் குலுங்கும் வாகையைப் பார்த்தீர்களா எவ்வளவு அழகாய் இருக்கிறது'' என்றேன். அவன் திரும்பவில்லை. நான் இன்னும் ஒரு தரமும் சொல்லிப் பார்த்தேன். அவன் எதுவித சலனமும் இல்லாமல் தூரத்தே இலையான்களின் சுற்றிவளைப்புகளுக்கு மத்தியல் செத்துக் கிடக்கும் எலியைக் காட்டி,

''பார்த்தீர்களா எவ்வளவு அருவருப்பாய் இருக்கிறது'' என்றான்.

''இதையெல்லாம் ஏன் நீங்கள் பார்க்கின்றீர்கள்?''

''இதைப் பார்ப்பது உங்களுக்கு அவசியம் இல்லாமல் இருக்கலாம், ஆனால் எங்களுக்கு அப்படியல்ல.''

அதன்பின் ஒரு நிமிடங்கூட நான் அங்கே நிற்கவில்லை. கோபமாய் எழுந்து வந்துவிட்டேன். அதன்பின் இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் அவன் என்னுடன் பேச முற்பட்ட போது

''என்னுடன் கதைக்க வேண்டாம்'' என்று முகத்திலறைந்தாற் போல் கூறி விட்டேன்.

அன்று முதல் எங்களிடையே இடைவெளி நீண்டு போனது.

ஆரம்பத்தில் அவனுடைய நட்பு முறிந்தது கொஞ்சம் கவலையைத் தந்தாலும் காலப் போக்கில் அவனைப் பற்றிய ஞாபகங்களே அற்றுப் போகும்படி நானும் மாறி சூழ்நிலையும் என்னை மாற்றிக் கொண்டது.

எனக்கோ தெரியாத புதிராய் இப்போது மீண்டும் அவன் நினைவுகள் பழையபடி அரிக்கத் தொடங்கி விட்டன. நான் நடந்து கொண்ட விதம் சரிதானா என்று எனக்கும் ஒரு சந்தேகம் முளைவிடத் தொடங்கி விட்டது. நானாக வலிந்து சென்று அவனுடன் கதைத்தாலும் தவறில்லை என்று ஒரு ஞானம் உதித்தது. இதோ அதே நிழல் வாகை மரத்தைத் தேடி நான் நடக்கின்றேன்.

''க்கும்,க்கும்.... நான் உங்களுடன் கொஞ்சம் கதைக்கலாமா?'' ஒரு செருமல் செருமி அவன் கவனத்தைத் திருப்பி விட்டுக் கேட்டேன்.

திரும்பி என்னை முழுமையாக ஒரு நிமிடம் பார்த்தான். முகத்தில் ஒருவித மாறுதலும் தெரியவில்லை.

''நிச்சயமாக''

''நான் செய்தது பிழைதான். இப்படி அவசரமாய் நட்பை முறித்துக் கொண்டது. பிழைதான். அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.''

''என்றாவது நீங்கள் பிழை செய்ததாய் நான் கருதியிருக்கவில்லை''

''இருந்தாலும் உங்களை இப்படி விரக்திக் கோலத்துக்கும் கொண்டு வந்து விட்டேன் என்பதை நினைக்கும் போது என்மனம் உறுத்துகிறது''

''யார் சொன்னது உங்களால்தான் நான் இப்படியானேன் என்று''

இதைக்கூட யாரும் சொல்லித்தான் அறிய வேண்டும் என்பதில்லை எனக்கும் இதயம் இருக்கிறது''

''நீங்கள் இன்னும் என்னைச் சரியாகப் புரியவில்லையென்று நினைக்கிறேன். வீணே மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.''

''அப்படியென்றால் ஏன் நீங்கள் இப்படியிருக்கின்றீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.''

''மன்னிக்க வேண்டும் அதைச் சொன்னால் உங்களுக்கும் புரியாது. புரிய வைக்கும் நிலையிலும் நான் இல்லை. புரியும் பக்குவத்தையடைய இன்னும் நீங்கள் முயற்சிக்கவுமில்லை.''

அவனிடம் ஒருவாறாக விடைபெற்றுத் திரும்பும் போது மூளை பிசகியது அவனுக்கா? அவனைப்பற்றிக் கதைக்கும் இவர்களுக்கா? அவர்கள் சொன்னதை அப்படியே நம்பிவிட்ட எனக்கா என்று குழப்பமாயிருந்தது.

→15

# வானமே எல்லை:

## போட்டி முடிவுகள்

## கட்டுரை

கட்டுரை

முதலாவது பரிசு: ''சி.வியின் இலக்கிய நோக்கும் பங்களிப்பும்'' -சில அறிமுகக் குறிப்புகள்

லெனின் மதிவாணன்
காசல்றீ டிவிசன்
லெதன்குறுப்
ஹற்றன்

இரண்டாவது பரிசு: 'கைக் கெட்டும் வானம்'

ஏயெம் தாஜ்
சட்டபீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்
கொழும்பு

மூன்றாவது பரிசு: ''சிங்களவர் யார்?''

பூ.ம.செல்லத்துரை ஜே.பி
பெரிய போரதீவு

மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி:

முதலாவது பரிசு: ''போதைவஸ்திலிருந்து இளைஞர்களைப் பாதுகாப்போம்''

சாஹுல் ஹமீத் கமீர்
தி/அல்-ஹிலால் மகாவித்தியாலயம்
புதிய துறைமுகவீதி
மூதூர்

இரண்டாவது பரிசு: ''சூழல் மாசடைவது எப்படி?''

எம்.ஜே.அன்வர் அலி
காத்தான்குடி ம.ம.வி
காத்தான்குடி

மூன்றாவது பரிசு: ''போதைப் பொருளற்ற ஒரு உலகைத் தோற்றுவிப்போம்''

எம்.ஐ.எம்.சமீர்
அக்கரைப்பற்று மு.ம.வி
அக்கரைப்பற்று

## சிறுகதை

சிறுகதை

முதலாவது பரிசு: ''மதிப்பீடு'

இ.யுவேந்திரா
(திருக்கோவில் கவியுவன்)
கடற்கரை வீதி
திருக்கோவில்

இரண்டாவது பரிசு: ''சிலுவை-வீடு''

அருள் சின்னையா
ZURICHBERG STR 141401
8032 ZURICH
SWITZERLAND.

மூன்றாவது பரிசு:
இருகதைகளுக்கு வழங்கப்படுகிறது.

''வேப்பமரம்''

எஸ்.ஏச்.அறபாத்
பஸார் வீதி
மாவடிச்சேனை
ஓட்டமாவடி

''கரைந்து வடியும் காலங்கள்''

பி.ரவிவர்மன்
165, மோதரைவீதி
கொழும்பு -15

(பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து கதைகளுள் மேற்கூறிய நான்கு கதைகளுடன் ''நனைதலும் காய்தலும்'' என்ற கதையும் இடம் பெற்றிருந்தது. இக்கதையை எழுதிய திருக்கோவில் கவியுவனே முதலாவது பரிசுக்குரிய கதையையும் எழுதியிருப்பதால் இக்கதைக்குப் பரிசு வழங்குவது நடுவர் குழுவால் தவிர்க்கப் பட்டது)

மாணவர் சிறுகதைப் போட்டி

முதலாவது பரிசு: ''வானமே எல்லை''

சபாநாயகம் பிரபாகரன்
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி
கொழும்பு -04

இரண்டாவது பரிசு: ''என் காதலி எச்.ஐ.வி. வைரஸ்''

மலர்விழி.வேலாயுதம்
மோபிரே கல்லூரி
கண்டி.

மூன்றாவது பரிசு: ''நாளைய சந்ததி''

ராஜேந்திரன் கேசவன்
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி
கொழும்பு -04

## கவிதை

கவிதை

முதலாவது பரிசு: ''இருத்தல்''

ஸிராஜ் மஷ்ஹூர்
117, பட்டினப்பள்ளி வீதி
அக்கரைப்பற்று -02

இரண்டாவது பரிசு: ''வங்காள விரிகுடா -1994''

ஏ.எம்.ரஸ்மி
195, தாருஸலாம்
பழைய பொலிஸ் வீதி
அக்கரைப்பற்று

மூன்றாவது பரிசு: ''நாடோடிகள்''

அம்பலவாணர் அருணோதயன்
(நட்சத்திரன் செவ்விந்தியன்)
7, ஸ்ரீ மகாபோதி றோட்
தெஹிவளை

மாணவர் கவிதை:

முதலாவது பரிசு: ''பொசுங்கிய மலர்களும் கனவுகளும்''

எம்.ஐ.நஜிபா
136/10 நஸார் லேன்
காத்தான்குடி -06

(போட்டிக்கு வந்த ஏனைய கவிதைகளால் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறமுடியவில்லை.)

## நாடக எழுத்துரு

நாடக எழுத்துரு:

முதலாவது பரிசு: ''கலியாணச் சந்தையில் சில எருமை மாடுகள்''

மாசிலாமணி மகேஸ்வரன்
53, விவேகானந்த வீதி
கொழும்பு -06

(போட்டிக்கு வந்த ஏனைய நாடக எழுத்துருக்களால் இரண்டாம், மூன்றாம் பரிசுகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.)

மாணவர்களுக்கான நாடக எழுத்துருப் போட்டி:

முதலாவது பரிசு: ''உயிர்த் தெழுந்தவர்''

அரசரட்ணம் காண்டீபன்
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி
கொழும்பு -04

இரண்டாவது பரிசு: ''வானமே எல்லை''

ச.பிரபாகரன்
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி
கொழும்பு -04

(போட்டிக்கு வந்த ஏனைய நாடக எழுத்துருக்களால் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அரசின் சிங்கள சார்பு நிலைப்பாடு பிளவுக்கு வழிவகுக்கும்"

-டிக்ஷிற்

**ஜே.என்.டிக்ஷிற். முக்கியமான வரலாற்றுக் காலகட்டத்தில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராக இருந்தவர். பின்னர் வெளியுறவு செயலாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.**

**மிகவும் வெளிப்படையாகப் பேசுபவர் என்று பரவலாக அறியப்பட்ட இவர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலிருந்து முதலில் பின் வாங்கியது இலங்கையே எனக் கூறுகிறார். ஒப்பந்த அமுலாக்க காலத்தில் புலிகளைக் கைது செய்ததும் கொழும்பு கொண்டுவர முயன்றதும் ஒரு வகையான துரோகம் தான் என்றும் குறிப்பிடும் அவர் தமிழர்களின் அபிலாசைகளைக் கணக்கில் எடுக்காத சிங்கள சார்பு நிலைப்பாடானது இலங்கை ஒரு நாடாக இருக்க வேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டிய நிலைக்கே இட்டுச் செல்லும் என்று கூறுகிறார். அவர் செப்.4ம் திகதிய Sunday Leader பத்திரிகைக்கு அளித்த நேர்காணலிலிருந்து சில பகுதிகள் இங்கே தமிழில் தரப்படுகிறது.**

**நீங்கள் இலங்கையில் இருந்த போது உங்கள் பெயருக்கு பல நெருக்கடிகள் ஏற்பட்டன. இலங்கை இந்திய உறவுகளின் நெருக்கடியான ஒருகால கட்டத்தில் இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகராக பதவி வகித்த காலத்தை நீங்கள் எப்படி மதிப்பிடுகிறீர்கள்?**

இலங்கைத் தமிழர்களுக்கும் சிங்கள பெரும்பான்மையினருக்குமிடையிலான இன முரண்பாடு நெருக்கடியான காலகட்டத்தை நெருங்கிய போது நான் (1985இல்) இலங்கைக்குச் சென்றேன். ஐக்கிய, ஜனநாயக தன்மை வாய்ந்த பன்மைத் தன்மையுடைய (Pluralistic) இலங்கையின் சட்டகத்துள் தமிழர்களது அபிலாசைகளுக்கு முடிவு கிட்டுமாறு செயற்படும்படி எனது அரசாங்கம் எனக்கு அறிவுறுத்தியிருந்தது. அதைத்தான் நான் இலங்கையில் செய்தேன்.

என்னுடைய முயற்சிகள் எவையாய் இருந்த போதும் அவையனைத்தும் இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்டவையே. இலங்கை இன்னமும் ஒரு ஐக்கிய இலங்கையாக இருப்பதே எமது குறிக்கோளின் ஒரு பகுதி நிறைவேறியுள்ளதைக் காட்டுகிறது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், ராஜீவ் காந்தியும் எடுத்த முடிவுக்கே எல்லாப் பாராட்டுக்களும் உண்மையாக சேர வேண்டும். ஆனால் உண்மையில் இன்று இலங்கை ஒரு நேர்மையான பன்மைத்தன்மை வாய்ந்த ஒருநாடாக இல்லை. (நான் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு விரும்பவில்லை.)

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பகைமையினால் இலங்கை கெட்டுப் போயுள்ளது. தமிழர்களின் அபிலாசைகள் இன்னமும் நிறைவேறவில்லை. அவர்களது அபிலாசைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் நான் தயக்கத்துடன் கூறவிரும்புவது என்னவென்றால் இலங்கை வன்முறைகளும் பிளவுகளும் நிறைந்த ஒரு துயர்நிறைந்த நாடாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டி இருக்கும் என்பதே.

**இலங்கையில் நீங்கள் உயர் ஸ்தானிகராக இருந்த காலத்திலேயே இலங்கை இந்திய - ஒப்பந்தம் கைச்சாத்தானது. இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய இருபக்க உறவுகளையும் உறுதியாக்கும் விதத்தில் இவ்வொப்பந்தம் சாதகமான ஒன்றாக அமைந்ததாக உங்களால் கூறமுடியுமா?**

1987 யூலை இலங்கை - இந்திய ஒப்பந்தமானது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதைக் குறியாகக் கொண்டே அமைந்தது. ஆயினும் இது வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் ஒப்பந்தத்தின்படி ஒப்புக் கொண்டவைகளை பல காரணங்களால் இலங்கை அரசாங்கமும் அதேபோல ஆயுதம் ஏந்திய போராளிகளின் தலைமைகளும் நடைமுறைப்படுத்தவில்லை. இதனால் இவ் ஒப்பந்தம் இனப்பிரச்சினையைத் தீர்க்கவில்லை. பின்னாளைய அனுபவங்கள் இதை வெளிப்படையாகக் காட்டுகின்றன. ஆனால் நான் நினைக்கிறேன் எனது அபிப்பிராயப்படி இவ் ஒப்பந்தமானது இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும் பிரதேச ஒற்றுமைக்கும் இடர் உண்டாகா வகையில் நடைமுறையில் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அம்சங்களைக் கொண்டது. ஒன்றைக் கூற வேண்டும் புலிகள் மீதும் இலங்கை மீதும் இந்தியாவினால் இத்தீர்வு திணிக்கப்பட்டது எனக் கூறப்படுவது உண்மையில் சரியான தகவல்களின் அடிப்படையில் அமைந்தது அல்ல. நீங்கள் உங்கள் வாசகர்களுக்கு கூறுங்கள்: ஒப்புந்தமானது மிகவும் முக்கியமான இலங்கையின் தலைவர்கள், எங்களுடைய தலைவர்களுடன் கலந்துரையாடி வரையப்பட்ட ஒரு ஒப்பந்தம் மட்டுமல்ல எல்லாத் தமிழ் குழுக்களுக்கும் இதன் விபரங்கள் காட்டப்பட்டன.

**புலிகளுக்கும் கூடவா?**

எல்லோருக்கும் தான். எனவே இப்போது வேறு விதமாக கூறப்படுவதையிட்டு கவலைப்பட தேவையில்லை. இது சம்பந்தப்பட்ட எல்லோருடைய விருப்பத்துடனேயே கொண்டு வரப்பட்டது. நான் நினைக்கிறேன் இதன் அடிப்படைக் கூறுகள் இப்பொழுதும் இலங்கையின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பிராந்திய உறுதிப்பாட்டைப் பேணுவதற்குமான தன்மையைக் கொண்டிருக்கின்றன.

**இப்பொழுது ஜனநாயக நீரோட்டத்தில் பங்கு பற்றுவதற்கு போதுமான ஒன்றாக புலிகள் இதைக் காண்பார்கள் என நீங்கள் கருதுகிறீர்களா?**

நல்லது. எனக்குத் தெரியாத விடயத்தில் நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அதற்குப் பிறகு பல விசயங்கள் நடந்து உள்ளன. எல்லா ஒப்பந்தங்களும் அவையவை வரையப்பட்ட காலத்துடன் தொடர்புடையவை. ஆயினும் இவ்வொப்பந்தம் இப்பொழுதும் மேலதிகமான பேச்சுவார்த்தையை தொடர்வதற்கான அடிப்படைக்கூறுகளைக் கொண்டுள்ளது.

**இந்தியா விடுதலைப்புலிகளை ஊட்டி வளர்த்ததற்குப் பதில் ராஜீவின் வாழ்க்கையையே விலை கொடுக்க வேண்டி வந்ததாகக் கூறப்படுகிறது?**


புலிகளை யார் ஊட்டி வளர்த்தார்கள் என்ற விவாதத்தில் நான் ஈடுபடவிரும்பவில்லை. விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல உங்களுடைய விசேட அதிரடிப்படை கொமாண்டோக்களுக்கும் கூட இஸ்ரேலியர்கள் பயிற்சி அளித்துள்ளார்கள் என்று நான் படித்திருக்கிறேன். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு பலஸ்தீன இயக்கமும் பயிற்சி அளித்துள்ளது. கொரியாவிடம் இருந்து சில வகையான ஆயுதங்களையும் பெற்றதுடன் விசேடப் பயிற்சியும் அவர்கள் பெற்றுள்ளார்கள். எனவே இது அது சம்பந்தப்பட்டதாகத் தெரியவில்லை.

**அரசாங்கமும் ஆயுதபாணிகளும் அவர்களுடைய ஒப்புதல்களில் உறுதியுடன் நிற்காததால் ஒப்பந்தத்தின் முழுப்பலனையும் அடைய முடியமால் போய்விட்டதாக நீங்கள் முதலில் கூறினீர்கள். உங்களுடைய பார்வையில் உண்மையில் எந்த இடத்தில் எது தவறாகப் போனது?**

என்னால் இது தொடர்பாக நாட்கணக்கில் கதைக்க முடியும். 1987 செப்ரம்பர் கடைசியில் இருந்து ஒக்டோபர் நடுப்பகுதி வரையிலான காலத்தில் இருபக்கங்களிலுமான புரிதல்களில் பெரும் இடைவெளிகள் உருவாகின. இருபக்கத்தினரும் தமது ஒப்புதல்களில் இருந்து பின்வாங்கினர். உங்களுடைய அரசாங்கத்தினால் எனது பெயருக்கும் சிறிதளவு களங்கம் ஏற்பட்டது. ஒப்புதல்களிலிருந்து பின்வாங்கியமை முதலில் சிங்களவர்களது பக்கத்தில் இருந்து தான் தொடங்கியது.

அவர்கள் தமிழ் மொழிக்கான அந்தஸ்தைக் கொடுப்பதில் தாமதித்தார்கள். அவர்கள் நிதி அதிகாரப்பகிர்வு தொடர்பான விடயங்களைப் பற்றிய பேச்சுக்களை இழுத்தடிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். இதனால் புலிகளும் மற்றத் தமிழர்களும் சர்வகட்சி மாநாட்டிற்கு முன்பிருந்த நிலைக்கு (1983க்கு முன்பிருந்த நிலைமைக்கு) மீண்டும் தள்ளப்படுவதாக உணர்ந்தார்கள்.

ஆனால் ஒருமுக்கிய சம்பவம் புலிகளை ஒதுங்க வைத்ததுடன் இந்தியாவை இராணுவ நடவடிக்கை எடுக்கவும் வைத்தது. அதுதான் 17 இளம் புலிகளை கொழும்புக்கு கொண்டு செல்வதற்கு அத்துலத்முதலி அவர்கள் கட்டாயப்படுத்தியமையாகும். இங்கே எதை அவர்கள் செய்திருந்தாலும் அவர்களை கைது செய்ததும் இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்திருக்கவேண்டும். அப்போது எங்களால் எதையாவது பேசியிருக்க முடியும். உண்மையில் ஜே.ஆர் இதை அரசியல் ரீதியில் அணுக உடன்பட்டார். ஆனால் அத்துலத்முதலிக்கோ வேறு திட்டங்கள் இருந்தன. ஜே.ஆர் அறிவுரைகள் கூறிய போதும் உங்களுடைய ஜனாதிபதியால் எனக்கு அறிவிக்கப்பட்ட முடிவுகளை அத்துலத்முதலி தடுத்து நிறுத்தத் திட்டமிட்டார். அந்தப் பொடியன்கள் சயனைற் குடித்தார்கள். அது மிகவும் துன்பகரமானது. இது புலிகளை மிகவும் தாக்கியதுடன் கோபம் கொள்ளவும் வைத்ததும் இயற்கையானதே. ஒருவகையான துரோகம் தான். இது தொடர்பான அவர்களது பிரச்சாரத்தால் நான் மிகவும் கவலைப்பட்டேன். தமது உறுப்பினர்களை விடுதலை செய்ய தமக்கு நான் உதவவில்லை என அவர்கள் என்னைக் குற்றம் சாட்டினார்கள். இந்தச் சம்பவம் நடக்கும் பொழுது நான் டில்லியில் இருந்தேன். நான் உடனடியாகக் கொழும்புக்கு வந்து உங்கள் ஜனாதிபதிக்கும் இதைப் பற்றிப் புரிய வைக்க முயன்றேன். ஆனால் நடந்து முடிந்தவை பற்றி மதிப்பிட்டுக் கொண்டே இருக்கமுடியாதே.



**உங்களுடைய பார்வையில் இலங்கையில் உள்நாட்டு அரசியலினாலா இந்த நிலைமை ஏற்பட்டது?**

நிச்சயமாக. அதில் சந்தேகம் இல்லை. ஜனாதிபதி ஜே.ஆர் துணிவுடனும் தூரதிருஷ்டியுடனும் இந்த நிலைப்பாட்டை இவ்வொப்பந்தம் தொடர்பாக எடுக்க வேண்டிருந்தது. அமைச்சரவைக்குள்ளேயே அவருக்குப் பல எதிர்ப்புகள் இருந்தன. காமினி ஜயசூரிய, லலித் அத்துலத் முதலி, பிரேமதாச ஆகியோர் இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஒத்துழையாமல் முழுமையாக தனித்து நின்றனர்.

**இந்த வியடம் தொடர்பாக உங்களுக்கு இருக்கும் ஆழமான அனுபவத்தில் இருந்து புலிகள் ஒரு அமைப்பாக எப்பொழுதாவது ஜனநாயக நீரோட்டத்திற்கு வருவரென உங்களால் கூற முடியுமா?**

வளர்ச்சியடைந்துள்ள நிலைமைகளைப் பார்க்கும் போது எந்த அரசியல் தீர்வுக்கும் புலிகளே முக்கிய பாத்திரம் ஆவார்கள். அவர்கள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வருவார்களா இல்லையா என்பது உங்களது அரசாங்கமும் சிங்களப் பெரும்பான்மையும் எந்தளவில் தமிழர்களின் சட்டப்படியான அபிலாசைகளை பூர்த்தி செய்ய தயாராக இருக்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது.

**ஜனாதிபதியாக பதவி வகிக்கும் விஜேதுங்கவின் இனப்பிரச்சினை தொடர்பாக அபிப்பிராயங்கள் வகுப்புவாதத்தன்மை வாய்ந்தவை என கூறப்படுகிறது. இந்திய வெளியுறவு அமைச்சு இந்தக் கருத்துக்களை எப்படிப் பார்க்கிறது?**

நாங்கள் இது தொடர்பாக கவனித்து வருகின்ற போதும் அடிப்படையில் இலங்கையின் உள்விவகாரங்களில் நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை. தாம் எப்படி இது தொடர்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை இலங்கையர்களே தீர்மானிக்க வேண்டும்.

இப்பொழுது ஒரு வெளியாள் என்ற முறையில் கூறுவதானால் எனக்குத் தெளிவாகத் தெரிவது இதுதான்: " தமிழர்களின் அபிலாசைகளை கவனத்தில் எடுக்காத சிங்கள சார்பு நிலைப்பாடு இறுதியில் இலங்கை ஒருநாடாக இருக்க வேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டிய நிலைக்கே இட்டுச் செல்லும். நாம் நல்ல உறவுகளை வைத்திருக்கவே விரும்புகிறோம். இனி உங்களது விருப்பம்.

**இலங்கைக்கு ஐ.பி.கே.எப் வந்ததானது இந்தியாவுக்கு ஏதாவது ஒருவகையில் அரசியல் ரீதியாக பெறுமதி வாய்ந்தது என இப்போது நினைக்க முடிகிறதா?**

நீங்கள் ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஐ.பி.கே.எப். ஒருபக்கச் சார்பாக தானே அங்கு போய் இறங்கவில்லை. உங்களுடைய ஜனாதிபதியின் விசேட வேண்டுகோளின்படியே ஐ.பி.கே.எப் போய் இறங்கியது. இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு மேலாக விடுக்கப்பட்ட ஒரு விசேட அழைப்பின் காரணமாக.

அந்த அழைப்பின் காரணமாக எந்த மக்களுடன் ஐ.பி.கே.எப்புக்கு எந்த முரண்பாடும் இருக்கவில்லையோ அவர்களுடன் முரண்பட வேண்டி வந்தது. ஐ.பி.கே.எப். ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நோக்கங்களுடனேயே சென்றது. அத்துடன் அவர்கள் (ஐ.பி.கே.எப்) முன்பிருந்ததைவிட அமைதியையும் சமாதானத்தையும் வடக்கு கிழக்கில் மிகப் பெரியளவில் ஏற்படுவதை உறுதிப்படுத்தினார்கள். பிறகு பிரேமதாச தனக்கு அவர்கள் தேவையில்லையென்று சொன்னபோது அவர்கள் (ஐ.பி.கே.எப்) திரும்பி விட்டார்கள். இத்துடன் கதை முடிகிறது.

**தமிழில்: செல்லம்மா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ்...

நோக்கம் புலிகளை எதிர் கொள்வ தல்ல. வவுனியாவில் புளொட் இயக்கத்தினரின் பலத்தை குறைப் பது தேவையேற்படின் அவர்களுக் கெதிராக இவர்களை பாவிப்பது அதுமட்டுமன்றி தென்னிலங்கையி லும் கொழும்பிலும் யூ.என்.பி அர சுக்கு விரோதமானவர்களுக்கு எதி ராக இவர்களை பாவிப்பதே இதன் முக்கிய நோக்கம். சிலாபம் புத்த ளம் போன்ற இடத்திலும் இனங்கா ணப்படாத ஆள்கடத்தல் கொலை முயற்சிகளுக்கும் இத்தமிழ் ரெஜி மெண்டை சேர்ந்த ஒரு சில உறுப்பி னர்கள் பாவிக்கப்பட்டிருக்கிறார் கள்.

இதையெல்லாம் விட இத் தமிழ் ரெஜிமெண்டைச் சேர்ந்த உறுப்பி னர்களை கொண்டு கொழும்பில் லொட்ஜ்களில் இருக்கும் தமிழர் களை புலிகள் எனப் பிடித்து கப்பம் வாங்குவதற்கும், தனிநபர் பழி வாங்கல்களுக்கும் குட்டி (மட்டக்க ளப்பில் புளொட் மோகனுடன் இணைந்து ராணுவத்துடன் அடாவ டித்தனங்களில் இறங்கியவர்) என் பவர் பயன்படுத்தியுள்ளார்.

இந்த குட்டி என்பவரினால் சில தனிப்பட்ட காரணங்களுக்காக கப் டன் முனாசுவுடன் இணைந்து புலி யெனக் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு குழந்தைகளின் தந்தை யான சூசைப்பிள்ளை (ராஜி. இவர் முன்னர் புளொட்டில் இந்தியாவில் பயிற்சி பெற்றவர். பின்னரும் புளொட்டைப் பற்றிய சிந்தனையி லேயே இருந்தவர்) கடத்திச் செல் லப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாகிறது. ஆனால் இவரைப்பற் றிய எந்த தகவலும் இதுவரை இல்லை.

தமிழ் ரெஜிமெண்டை சேர்ந்த சிலரை குட்டி, கப்டன் முனாஸ், எஸ்.பி.ரணவீர (தமிழ் பயங்கர வாத ஒழிப்புபிரிவு) போன்றவர் கள் அடையாளம் காட்டுதல், கடத் தல் போன்ற நடவடிக்கைகளுக்கு கொழும்பில் தாராளமாக பயன்ப டுத்தியுள்ளார்கள்.

இன்று செட்டிக்குளத்தில் மிஞ்சி யுள்ள ஒரு சில தமிழ் ரெஜிமெண்ட் உறுப்பினர்களும் ஆளை விட்டால் போதுமென்ற நிலையிலேயேயுள் ளார்கள். இனியும் இருந்தால் இந்தி ரனுக்கு நடந்தது தங்களுக்கும் நிச்ச யம் நடக்குமென்று அச்சம் கலந்த உணர்வுடனேயே இப்போது அவர் கள் உள்ளனராம்.

வவுனியாவை விட்டு வெளியே றிய தமிழ் ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒருவர் இப்படிக்கூறினார். ''நாம் ஆமியுடன் நிற்பது பிழை யெனக் கூற இவர்களுக்கு (ரெலோ புளொட்) என்ன அருகதை இருக்கி றது. இவர்கள் இன்று யாருடன் நிற் கிறார்கள். ரெலோ மட்டக்களப்பில் செய்யாத அட்டகாசமா? நாம் யாருக்கும் உயிருடன் ரயர் போட்டு கொளுத்தவில்லை. மாற் றுவழி இல்லை சம்பளத்துக்காக (மாதம் ஐயாயிரம் ரூபா அளவில் கிடைக்கிறது) தொழில் செய்கி றோம். ஈ.பி.டி.பிக்கு மாதாமாதம் நாலுலட்சம் பணமும் இராணுவத் துக்குரிய சகல ரேசனும் கிடைக்கி றது. அப்படியிருக்கும் போது இவர் கள் எம்மை மட்டும் எப்படிப் பிழையெனக் கூற முடியும். ராணு வத்தில் நான் தொடர்ந்திருக்கவே முடிவு செய்தேன். ஆனால் எல் லோரும் எம்மை ஏமாற்றிவிட்டார் கள்'' என்றார் மிகவும் கவலையு டன்.

## மதிப்பீடு...

சில நாட்களின் பின் அவன் காணா மல் போனான் என்ற செய்தி கிடைத்தது. அவன் மீது எனக்கிரு ந்த அன்பின் காரணமான உந்துத லினால் அவன் அறையில் சென்று விசாரித்து வரப் போயிருந்தேன்.

அவன் காணாமல் போனதைப் பற்றி அவனின் அறை நண்பன் அதிகம் அலட்டிக் கொண்டதாய்த் தெரியவில்லை. இன்னும் சொன் னால் அவன் அந்த அறையை விட்டு எந்த வகையிலாவது கழன்று கொண்டதில் சந்தோசம் தொனிப்பது போலவும் தென்பட் டது.

நான் அவனின் உடமைகளை மேலோட்டமாய் ஆராய்ந்தபோது, பெரும்பாலானவை கவிதைகளா கவே இருப்பதைக் கண்டேன். அவற்றில் எழுமாற்றாக என் கையில் சிக்கிய சிலதை அவன் நண்பனிடம் கொடுத்து அதன் அர்த்தத்தைக் கூறும்படி சொன் னேன்.

அதன் அர்த்தங்கள் தனக்கே விளங் குவதில்லையென்றும், அத்துடன் அவைகளைக் கவிதைகள் என்று சொல்வதற்கில்லையென்றும், 'ம னிதம்', 'சுதந்திரம்'.... இப்படியான சில சொற்களை விட்டால் அவ னுக்கு வேறு சொற்களே கிடைப்ப தில்லையென்றும் சொன்னான்.

ஒரு மரண வீட்டின் துக்கத்தை மன தில் நிரப்பிக் கொண்டு நான் திரும் பிக் கொண்டிருந்த போது அந்த உண்மை எனக்குப் புரிந்தது.

என் நண்பன், நண்பனின் கவிதை, அவன் காணாமல் போன மர் மம்.... இப்படி நிறையவே புதிர்கள் இங்கே இருக்கத்தான் செய்கிறது. அவற்றை புரியும் பக்குவத்தை அடைவதற்கு இன்னும் நான்தான் முயற்சிக்கவில்லை போலும்.

## இழந்த...

அந்த ஆரம்ப நாட்களை மறக்க லாமா? சாரலில் கழித்த -கற்குடை கிணற்றில் பீத்தல் வாளியால் வடித் துக் குளித்த (பின் பைப்பில்) 'போ லி'னில் நின்று நிவாரணம், மருந்து பெற்ற -வீரை விறகு தறித்த -பள்ளி நடாத்திப் பிள்ளைகள் படித்த -பால் காய்ச்சிக் குடித்த -இத்திமர இறைவனுக்குப் பொங்கல் படைத்த -வேப்பமர நிழலில் இருந்து கதைத்த -'வக்'கடிப் பாசி யில் வழுக்கி விழுந்த அந்த வாழ்வி றுதி நாட்களெல்லாம் என்னால் மறக்கக் கூடியனவா? சோடிப்போ ரென்ன? தொழில் புரிந்து வருவோ ரென்ன? வடி சுவைப்போரென்ன? கடை வைப்போரென்ன? 'ஐடண் டி' பதிவோரென்ன? 'பாஸ்' துண் டெடுப் போரென்ன? பட்டினம் பார்த்து மீள்வோரென்ன? சொல் லிக் கொடுப்போரென்ன? இரவில் வந்து ஆள் பிடிப்போரென்ன? பக லில் 'முகமூடி'யார் தெரிவால் கொழும்பு போய் வந்த அப்பாவிக ளென்ன? 'நிழல்' மந்திரிசபையின் நிர்வாகமென்ன? 'ஓட்டைக் கோலி'ன் காற்றுப்படுக்கை -'காட்ஸ்' விளையாட்டென்ன? பயிர் நட்டுப் பயன் பெற்றதென்ன? மாலை நேரக் 'கிளித்தட்'டென்ன? மரித்த சவம் வண்டிலிலே போன தென்ன? 'சாமர்த்திய'ச் சடங் கென்ன? மலையோரத் திருமணந் தானென்ன? வால் பிடித்த 'நிவார ணப் பரிசு'களென்ன? சிரமதானங் களென்ன? காப்பென்ன- விரத மென்ன? அயலையென்ன -கீரியென்ன? மூட்டையென்ன- நுளம்பென்ன? ஈயென்ன -வாசமென்ன? 'பிளாஸ்டிக்' டையென்ன? பின்னிரவுக் கூத் தென்ன? உதவி செய்யும் அமைப் புகளின் ஓயாப் பணிகளென்ன? ஒன்றிரண்டா ஒரு நூறா? எதைச் சொல்வேன் -எதைவிடுவேன்?

அகதியோ-அவதியோ? கிளப்பன் பேக்கோ-எதுவோ?

**யாதும் ஊரே:**

அகதிமுகாம் அலுத்துப் போச்சு. வந்து நான்காண்டுகள் ஆச்சு. மீள் குடியேற்றமாம் என்கிறார்கள். புனர் வாழ்வாம் என்கிறார்கள். அதற்கும் 'வேதாளமும் பழைய படி முருக்கையாம்' என்கிறார்கள். செத்தவனுக்கேது புனர்வாழ்வு? போனவை திரும்பக் கிடைக்கவா போகின்றன? கவலைக்கும் மருந்து உண்டா? வெள்ளி வானிலே இருந்தாலல்லவா விடிய லில் கிளம்பும்? தொடரும் கும்மி ருள் தான் இறைவனின் திருவிளை யாடல்கள் இப்படியெல்லாம் நிக ழும் போலும்? கோன் முறை அரசி ருந்தாலன்றோ குறைவிலாதுயிர் கள் வாழும்? இனி வாழ்வென்ன-தாழ்வென்ன? 'ஓடும் செம்பொ னும் ஒக்கவே நோக்கு' வார்க்கு எல்லாமே ஒன்றுதானே? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புல வரும்இப்படித்தான் இடம் பெயர்ந் தாரோ?' இடுக்கண் வருங்கால் நகு க' என்ற குறளாருக்கு இத்தகைய இழப்புக்கள் இல்லைப்போலும்? அந்தப் பண்டிதரின் பேச்சைக் கேட் டதிலிருந்து எனக்கு இப்படியெல் லாம் நினைவுகள் வருகின்றன. அதுபோக இப்போதென்ன போர் முற்றாக நின்றா விட்டது? நிரந்தரத் தீர்வு வந்தாவிட்டது? மண்டை உள்ளவரை சளியேதானா? கடல் வற்றிக்கருவாடாகுமென்று கொக்கு நினைத்தால் குடல் வற்றிச் சாகவேண்டியதுதானா? சில வேளைகளில் தலைசுற்றும். கண் இருளும், காது அடைக்கும், மூச்சு முட்டும், இரவெல்லாம் இருமல், பகலெல்லாம் இளைப்பு,. எனது நிலையைப் பார்த்தால் எனக்கே சந் தேகமாயுள்ளது. திரும்பி எனது பாழான ஊருக்குப் போகாமல் -காடான வளவை மிதியாமல்-தூளான வீட்டைக் காணாமல்-வெட்டுப்பட்ட மரங்களின் வேரில் முழியாமல் போய் விடலாம் போல வும் அதுவும் நல்லதுதான் போல வும் தெரிகிறது. என்செயலால் ஆவதொன்றுமில்லை இனித் தெய் வமே- உன்செயலே இன்று உண ரப் பெற்றேன். இந்த ஊனெடுத்த-பின்செய்த தீவினையாதொன்று மில்லைப் பிறப்பதற்கு- முன் செய்த தீவினையே இங்ஙனே வந்து மூண்டதுவே என்ற பட்டினத் தார் பாடலே தஞ்சம்.

## தாருஸ்ஸலாம் — கொந்தளிப்பின் பின்

தாருஸ்ஸலாம்!

சாந்தியின் வீடு அல்லது அமைதி யின் வீடு!

புதிய அரசின் ஸ்தாபிதம் உறுதி யான ஒருநாளில் அங்கு அமைதி தொலைந்துவிட்டிருந்தது! ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைமையகத்தில் வேட்பாளர்கள், அங்கத்தவர்கள் ஆதரவாளர்க ளென கூட்டம் நிரம்பி வழிந்தது.

தேர்தலில் தோல்வியடைந்த சில வேட்பாளர்கள் தங்களது ஆதரவா ளர்கள் சகிதம் தலைவரைச் சந்திக்க வென அவசர அவசரமாக புறப் பட்டு தங்கள் பிரதேசத்திலிருந்து வந்திருந்தார்கள்.

எந்த இடத்திலிருந்து ஆரம்பிப்பது என்ற பிரச்சினை அவர்களுக்கிருக் கவில்லை; ஏற்கனவே தீர்மானித் துக் கொண்டேதான் வந்திருந்தார் கள்.

தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியே அவர்களது இலக்காக இருந்தது; ஒருவரைத் தவிர!

அவர் - முன்னாள் மட்டு. பாராளு மன்ற உறுப்பினர் பஷீர் செய்குதா வூத்!

கட்சி முன்னேற்றத்தில் அவரது எதிர்கால செயற்பாடு பற்றியும் அவரது தற்போதைய நிலைப்பாடு பற்றியும் இரண்டு வேண்டு கோளை முன்வைத்ததோடு சரி! வந்த வேகத்தில் திரும்பி விட்டார்.

அக்கரைப்பற்று மு.காங்கிரஸ் பிர முகர் தரப்பினர் சுற்றிச்சுற்றி தேசி யப்பட்டியல் பா.உ.பதவியில் தான் வந்து நின்றார்கள். அதிக நேரம் இவர்களுடன் தலைவர் செலவளிக்க வேண்டியிருந்தது.

ஒரு கட்டத்தில் தலைவர் கோப வசப்பட்டார்!

தேர்தலுக்காக அங்கத்துவம் பெற்று வேட்பாளராகி-தோற்றுவிட்டு வந்து தேசியப்பட்டி யல் எம்.பி. வேண்டும் அல்லது 'பொலிட்பீரோ' அங்கத்துவம் வேண்டும் என்று கேட்டால் எந்த கட்சித்தலைவருக்குத்தான் கோபம் வராது? கோரிக்கை வைத்தவர்கள் - கல்குடா தொகுதி மு. காங்கிர ஸின் முன்னணி வேட்பாளர் குழு வினர்.

இதற்கு முந்திய தேர்தலில் மட்டக்க ளப்பு - முஸ்லிம் காங்கிரஸிற்கு கிடைத்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் இருவரு டங்களுக்கு இப்பகுதிக்கு வழங்கப் படும் என்று முஸ்லிம் காங்கிரஸி னால் உறுதி வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும் தெரிவான பாராளு மன்ற உறுப்பினர் விட்டுக் கொடுக்க மறுத்தமையினால் இப்ப குதி மு. காங்கிரஸ் அபிமானிகள் நொந்து போனார்கள்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னால் பொருளாளரும்-இருவருடங்களில் எம்.பி. பத வியை பெற்றுக் கொள்ள இருந்தவ ருமான ஜனாப் முகைதீன் அப்துல் காதர் வெறுத்துப் போய் ஐ. தே. கட்சியில் தன்னை ஐக்கியப் படுத் திக் கொண்டார். பிரதேச சபைத் தேர்தலில் அவர் கணிசமான வாக் குகளைப் பெற்றார். இம்முறை பாராளுமன்ற தேர்தலிலும் 7.619 வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

இம்முறை தேர்தல் பிரசாரத்தின் போது முஸ்லிம் காங்கிரஸ் வேட் பாளர்களிடையே இப்பகுதியில் பிரதேச வாதம் சூறாவளியாக வீசி யது. ஆனாலும் பழைய பாராளு மன்ற உறுப்பினரை இவர்களால் விழுத்த முடியாமலே போயிற்று. காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த அவருக்கெதிராக பிரதேச வாதம் பொங்கி எழுந்தும் கூட கல்குடா பிரதேசத்தில் அவருக்கு ஏறக்கு றைய 350 விருப்பு வாக்குகள் அள வில் விழுந்திருந்தது ஆச்சரியம்!

தேசியப்பட்டியல் - பொலிட்பீரோ அங்கத்துவம் என்று வந்து கடைசி யில் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியில் வந்து நின்றார்கள்.

மிகவும் மகிழ்ச்சி தெரிவித்த தலை வர்- 'ஆனால் அபிவிருத்தி அப்ப குதி பாராளுமன்ற அங்கத்தவர் மூலமே நடைபெறும்' என்றார்.

புதையல் எடுக்கப் போனவனை பாம்பு கொத்திய கதையாயிற்று!

தேர்தலில் யாரை வீழ்த்த வேண் டும் என்று கங்கணம் கட்டினார் களோ அவர்மூலமே சகலதும் நடைபெற வேண்டும் என்று விட் டார் தலைவர். ஆனாலும் கல்கு டாத் தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவுடன் கலந்துதான் பாராளுமன்ற உறுப்பினர் முடிவு கள் மேற்கொள்வார் என்றும், ஓர் இணக்கத்தை ஏற்படுத்தினார். பாராளுமன்ற அங்கத்தவர் கட்சி வேலைகளை முன்னெடுத்துச் செல் லும் நடவடிக்கைகளுக்கு உபயோ கிக்க கல்குடாத் தொகுதி வேட்பா ளரின் வீட்டை தருவதற்கு வேட்பா ளர் 'ஆம்' சொன்னார்.

தலைவரின் வேண்டுகோளின் பேரில் பாராளுமன்ற அங்கத்தவ ரும்- 'வேட்பாளரும் 'முஸாஹா' (கட்டித்தழுவி அன்பை- சமாதா னத்தை வெளிப்படுத்தும் இஸ்லா மிய முறை) செய்து கொண்டார்கள்.

வேட்பாளரும் குழுவினரும் சத்த மில்லாமல் படியிறங்கினார்கள்.

முரண்டு பிடித்து அவசரப்பட்டு மூக்கை அறுத்துக் கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸில் இப்போதும் யாரும் முன்வரமாட்டார்கள். அப் படி விட்டுச் சென்ற முன்னாள் கட் சித் தவிசாளர் எப்படி செல்வாக்கி ழந்தார் என்பதை எல்லோரும் அறி வார்கள். ஆனால் அடுத்த தேர்த லில் இப்பகுதி மக்கள் என்ன செய் வார்கள் என்பதை மட்டும் யாரும் அறியமாட்டார்கள்.

-முல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பம்பலப்பிட்டி வீதியோர அகதிகள்:

# போகுமிடம் எது?

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தின் அருகே உள்ள வீதியோரத்தில் வாழ்ந்து வந்த தமிழ் அகதிகளை செப்ரம்பர் 16ம் திகதிக்கு முன் அவ்விடத்திலிருந்து வெளியேறுமாறு பம்பலப்பிட்டி பொலிசார் காலக்கெடு விதித்துள்ளனர். ஏற்கனவே தங்கியிருந்த சரஸ்வதி மண்டபத்திலிருந்து முன்னைய அரசாங்கத்தினால் பலவந்தமாக வெளியேற்றபட்டபின் கடந்த நான்கு மாத காலமாக இவர்கள் இவ்வீதியோரத்தில் தமது வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர். போலிசாரின் இந்த எச்சரிக்கையை அடுத்து கைக்குழந்தைகள் வயது முதிந்தோர் பெண்கள், உட்பட 27 குடும்பங்களைச் சேர்ந்த 122 பேர் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

1990இலிருந்து நான்கு வருடங்களுக்கு மேலாக அகதிமுகாமாக இயங்கி வந்த பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டப அகதி முகாம் இன்று மூடப்பட்டிருக்கின்றது. இங்கிருந்த வட கிழக்கு அகதிகளை முன்னைய ஐ.தே.க. அரசாங்கம் பொலிசாரின் உதவியுடன் பலாத்காரமாக பஸ்களில் ஏற்றி யுத்தம் நடைபெறும் பிரதேசங்கள் என்ற அக்கறை எதுவுமின்றி அனுப்பி வைத்தது. இவர்களின் நிலை மிகவும் மோசமாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதே வேளை இப்பலவந்தமான கடத்தலுக்கு அகப்படாமல் இன்னும் சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கைவிடப்பட்ட நிலையில் வீதியோரங்களில் கடந்த நான்கு மாதங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

பாலுக்காக ஏங்கியழும் குழந்தைகளையும் இக்குழந்தைகளுக்கு கொடுக்க பால்மா இன்றித் தவிக்கும் தாய்மாரையும் கைவிட்டது அரசாங்கம் மட்டுமல்ல சமூக சேவைத் திணைக்களமும் தான். பல பாடசாலை மாணவர்கள் சாப்பாட்டுக்காக கஸ்டப்பட்ட போதும் இவ்வீதியோரத்திலிருந்து பாடசாலைக்குச் செல்கின்றனர்.

வீதியோரத்திலுள்ள இம்மக்களுடன் உரையாடிய போது கிடைத்த தகவல்கள் இவை:

இந்த அகதிகள் 83 இனக்கலவரத்திற்கு முன்பு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களான கொட்டாஞ்சேனை, தெகிவளை. நாரஹன்பிட்டி, வத்தளை போன்ற பிரதேசங்களிலும் வாழ்ந்தவர்கள். இக்காலங்களில் இப்பகுதிகளில் வாழ்ந்த தற்கான அத்தாட்சியாக வாக்காளர் பதிவட்டைகளும் இவர்களிடம் இருக்கின்றன.

1983இனக்கலவரத்தினாலும் பாதிக்கப்பட்ட இதே மக்கள் இதே பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டப அகதிமுகாமிலும் இரத்மலானை விமான நிலைய அகதிமுகாமிலும் இரண்டரை வருடங்களுக்கு மேலாக அகதிகளாக வாழ்ந்தவர்கள். அன்றும் இவர்களை இந்த முகாம்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றி வடபகுதியில் கொண்டு போய் குடியேற்றியது அன்றைய அரசாங்கம்.

1990ல் எற்பட்ட யுத்தத்தினாலும் வடபகுதியிலிருந்து இம்மக்கள் அகதிகளாக மீண்டும் இதே சரஸ்வதி அகதிமுகாமுக்கு வந்து சேர்ந்தார்கள். 1994ம் ஆண்டு மே மாதம் ஆட்சியிலிருந்த ஐ.தே.க. அரசாங்கம் வட கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்காமல் இம்முகாம்களிலிருந்த அகதிகளை பலாத்காரமாக மீண்டும் வடக்கு கிழக்குப் பகுதியில் குடியேற்றியது. இதற்காக பலர் பொலிசாரின் பயமுறுத்தலுடன் பஸ்களில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டனர். இவர்களிடம் சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே செல்கின்றோம் என கையொப்பம் வாங்கி 2000 ரூபா பணத்தையும் வழங்கியது முன்னைய அரசாங்கம். ஆனால் இவ்வீதியோரத்தில் வாழும் அகதிகள் யுத்தப் பிரதேசங்களுக்கு மீண்டும் போக திடமாக மறுத்துவிட்டனர். இவர்கள் மேற்கூறியவாறு கையொப்பம் வைக்கவுமில்லை. பணம் வாங்கவும் இல்லை. இவ்வீதியோரத்தில் 40 இளம் பெண்கள் உட்பட 47 பாடசாலை செல்லும் பிள்ளைகளும் 3 வயது தொடக்கம் 1 மாதவரையிலான ஆறு குழந்தைகளுடன் நான்கு மாதங்களாக வாழ்கின்றனர். சில மனிதர்கள் இவர்களுக்கு உதவி செய்கின்றனர். ஆனாலும் சில ஆண்கள் கூலி வேலைக்குப் போக சில பெண்கள் அருகிலுள்ள வீடுகளில் வேலை செய்யப் போகின்றனர்.



"எம்மை போ என்று சொல்ல பொலிஸார் யார்?"



"யுத்தப் பிரதேசத்திற்குப் போகோம்!"

மூன்று மாதங்களுக்கு முன்பு ஜனாதிபதி விஜேதுங்க முன்னாள் பிரதமர் ரணில் ஆகியோருக்கு இவர்கள் தமது நிலையை அறிவித்துள்ளனர். எனினும் ஒருபதிலும் கிடைக்கவில்லை. புதிய அரசாங்கம் வந்தவுடன் புனர்வாழ்வு அமைச்சின் இணைப்பதிகாரி யாசீம் அவர்கள் இவர்களை வந்து பார்வையிட்டுள்ளார். தகுந்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறிச்சென்ற அவரிடமிருந்து இதுவரை எந்தப் பதிலும் இல்லை. ஆனால் செப்ரம்பர் 16ம் திகதிக்குப் பின் என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நிற்கின்றனர் இவர்கள். இந்திய வம்சாவழியினரான இவர்களுக்கு வடக்கு கிழக்கில் உறவுகளோ சொந்த பந்தங்களோ இல்லை. ஆகவே வடக்கு கிழக்கில் இவர்களைக் குடியேற்றி அநாதரவாக கைவிடுவது அர்த்தமற்றது. இவர்கள் 1983க்கு முன்பு வாழ்ந்த கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் வெகுவிரைவில் குடியேற்றி தமது அன்றாட வாழ்க்கையை ஆரம்பிக்க புனர்வாழ்வு அமைச்சு கைகொடுக்குமா?

அதுசரி, வீதியோரத்தில் வசிக்கும் இந்த மக்கள் பொலிசாருக்கு செய்த கெடுதல் தான் என்ன?

பம்பலப்பிட்டி பொலிசார் யாருடைய முறைப்பாட்டின் பேரில் இவ்வுத்தரவை விட்டுள்ளார்கள்?



படங்களும் கட்டுரையும் -பாரதி

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்